www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை- 2006
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



## நுகர்பொருளே பரம்பொருளாக!

இந்தப் பச்சை, முன்னேற்றத்தின் வண்ணமா வக்கிரத்தின் சின்னமா ?

படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்:

# ஈழம்: சமர் புரியும் உண்மைகள்!

உலக வரைபடத்தை உற்றுப் பார்த்தால் நாதியற்று நடுக்கடலில் வெட்டி வீசியெறியப்பட்ட இதயத்துண்டாய் நம் கண்ணில் படுகிறது இலங்கைத் தீவு.

''விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் சண்டை, புலிகள் தமிழகத்தில் ஊடுருவல்'' என்ற பூச்சாண்டியைத்தவிர செய்தித்தாள்கள் வேறு எதையும் சொல்வதில்லை. புலிகளின் தமிழகத்து ஆதரவாளர்களோ புலிகளின் போர் முறையை வியந்து சிங்கள இராணுவம் திணறல், கடல் புலிகள் சாகசம், எட்டிவிடும் தூரத்தில்தான் ஈழம் என்று புலிப்பாணி சோதிடர்களாய் பொழிப்புரை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நடப்பது என்ன? சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுந்த ஈழத்தமிழர்களின் தேசிய இனப் போராட்டம் திசை விலகி சிங்கள இனவெறி அரசு, விடுதலைப்புலிகள் இரு தரப்புமே அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் மேற்பார்வையின் கீழான ஒரு இழுபறிச் சண்டையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இரு தரப்பு இலக்குகளுமே ஏகாதிபத்தியங்கள் நிர்ப்பந்திக்கும் திசையில் இழுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் புரிதலின் வெளிப்பாடுதான் இருதரப்புமே நார்வே தூதுக்குழு முன்னிலையில் செய்து கொண்ட 'புரிந்துணர்வு' ஒப்பந்தங்களும், புலிகளின் 'இடைக்கால தன்னாட்சி அதிகாரங்களும்'.

புலிகளின் போக்கை விமர்சனம் இன்றி ஆதரிக்காதவர்கள் அனைவரும் இனத்துரோகிகளென்று கூறி ஈழத் தமிழர்களுக்கான அரசியல் உரிமையை மறுத்தும், மாற்று அரசியல் கருத்தாளர்களைப் புலிகள் படுகொலை செய்தும் வரும் சூழலில், ஈழத் தமிழர்களின் தேசிய நலனும் ஒட்டு மொத்த இலங்கையுமே அன்னிய ஆக்கிரமிப்பாளர்களான ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கப்படுவதைக் கண்டித்து ஒரு குரல் கேட்கிறது.

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரான ***பி.இரயாகரன்*** அவர்கள் எழுதியிருக்கும் மூன்று நூல்கள் சிங்கள அரசின் இன ஒடுக்குமுறை மற்றும் அதற்கு




எதிரான ஈழத் தமிழர் போராட்டத்தின் முழுப் பரிமாணத்தையும், வர்க்க உள்ளடக்கத்தையும், தெளிவுபடுத்துவதில் சிறப்பான பங்காற்றுகின்றன.

### 1. இலங்கை: யுத்தத்தின் பரிணாமமும், உலகமயமாக்கலின் படையெடுப்பும்

ஈழத் தமிழர்களின் தேசிய இனப் போராட்டம் சிங்கள இனவெறிக்கு பதிலடியான யுத்தமாக பரிணமித்து, பிறகு ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கல் நலனுக்கு உட்பட்டவையாக மாறியதை இந்நூல் புள்ளிவிபரங்களோடும், இலங்கையின் நிகழ்வுகளோடு தொகுத்தும் கூறுகிறது. யாழ்ப்பாணத்தையே மையப்படுத்தி ஆய்வு செய்யும் நூல்களுக்கு மத்தியில், ஈழத்தின் உழைக்கும் மக்கள், மலையகத் தமிழர்கள், சிறுபான்மையினர் உள்ளிட்டோரின் வாழ்க்கைப் போராட்ட இனப் பிரச்சினையைப் பொருத்தி விவாதிக்கிறது இந்நூல்.

''யாழ்ப்பாணத்தின் அற்ப பூர்சுவா கனவுகளையே இயக்கம் தலைமை தாங்குகிறது. மலையக மக்கள், முசுலீம் மக்கள், பின் தங்கிய பிரதேச மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் என எதைப் பற்றியும் கவலைப்படாத போராட்டம். (பக்.16)'' இப்படி கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் அனைத்திலும் ஈழத்தமிழர்களிலேயே பெரும் பகுதியினரைப் புறக்கணித்த வரலாற்றை நூல் அடுக்கடுக்காக விவரிக்கிறது.

சிங்கள இனவெறியையும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்க்கும் புரட்சிகரக் குழுக்களைக்கூடச் செயல்பட அனுமதிக்காத புலிகள், தன்னார்வக் குழுக்களை மட்டும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்திருப்பதை அம்பலப்படுத்துகிறார் நூலாசிரியர். ஐரோப்பிய யூனியன் 8.8 லட்சம் டாலரை வழங்கியுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி முதல் அமெரிக்கா ஈறாக அனைவரும் பணத்தை வாரி வழங்குகின்றனர். ஏகாதிபத்திய நிதி உதவியில் இலங்கையில் 3000 தன்னார்வக் குழுக்கள் செயல்படுகின்றன.'' (பக். 104)

உலகமயமாக்கலின் அதிகாரத்தின் கீழ் நடைபெறும் யுத்தத்தின் சகலவிதமான தேசவிரோத நடவடிக்கைகளையும் இனங்காட்டுவதோடு, ஒரு தேசத்தின் நலன்களைப் பாதுகாக்கும் அரசியல் யுத்தத்தின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது இந்நூல். (பக். 111)




### 2. ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை

சிங்கள இனவெறிஅரசு, விடுதலைப் புலிகள், தமிழின விரோதக் குழுக்கள், தனிநபர் அராஜகவாதிகள் ஆகிய அனைவருமே ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து போவதைச் சொல்கிறது இந்நூல். ''சமாதானமா? யுத்தமா? என்பதை மையமான பொருளாக்கிய ஏகாதிபத்தியம் விரிவாகவே களமிறங்கியுள்ளது. புலிகளுக்கும், அரசுக்கும் பின்பக்கமாகக் கைகள் இறுகக் கட்டப்பட்ட நிலையில் சமாதானம் பற்றி மூலதனம் உத்தரவுகளை இடுகிறது... (பக். 5)''

''உதாரணமாக 2002-இல் பட்டியலிடப்பட்ட 208 கம்பெனிகள், முதல்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

❖புதிய கலாச்சாரம்

❖மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

❖போர் : 24
❖குரல் : 12 - 1,2
❖மே-ஜூலை 2006

உள்நாடு
தனிஇதழ் : ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

சந்தா படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# சாமியே ஐயப்பா, முற்போக்கு என்பது பொய்யப்பா!

ஜெயலலிதா நீண்டகாலம் ஆள்வதற்கு ஜோதிட ஆலோசனைகள் தந்து பரிகாரம் செய்ய வைத்தவர் கேரள ஜோதிடர் உன்னிகிருஷ்ண பணிக்கர். கண்ணகி சிலை இடிப்பு, பழனி முருகன் சிலை மாற்றம், முதுமலை யானைகள் முகாம் முதலியவை பணிக்கர் மூலம் நடந்த கைங்கரியங்கள் என்று கூறப்படுகின்றது. நாடறிந்த ஒரு ஊழல் தலைவியின் ஆட்சியை நீட்டிப்பதற்கு 'மந்திர' ஆலோசனை வழங்கிய பணிக்கரின் யோக்கியதை எத்தகையதாக இருக்கும் என்பதை வாசகர்கள் அதிக விளக்கமின்றியே புரிந்து கொள்ளலாம். அப்பேர்ப்பட்ட பணிக்கர் சபரிமலை குறித்து ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்.

சாதாரண மக்கள் தமது வாழ்க்கைப் பிரச்சினைக்கு ஜாதகப்பலன் பார்த்து பரிகாரம் செய்வது போல கடவுளுக்கு பார்ப்பதை கேரளத்தில் தேவப்பிரஸ்னம் என்கிறார்கள். அப்படி பணிக்கர் தலைமையிலான ஜோதிடர்கள் சபரிமலை ஐயப்பனுக்கு தேவப்பிரஸ்னம் பார்த்தபோது ஐயப்பன் கோபமாக இருப்பது தெரிந்ததாம். அந்தக் கோபத்திற்கு முக்கியக் காரணம் ஐயப்பனை யாரோ ஒரு ஸ்தீரி ஸ்பரிசத்துவிட்டது தானாம். உடனே நடிகைகள் ஜெயமாலாவும், சுதாசந்திரனும் பல ஆண்டுகளுக்கு முன்னர் தாங்கள் ஐயப்பனைத் தொட்டதாகத் தாமே முன்வந்து ஒப்புக் கொண்டு மன்னிப்பும் கோரினர். ''என்னை காங்கிரசு தலைவர்கள் பலவிதமாகப் பயன்படுத்திக் கொண்டு ஏமாற்றி விட்டார்கள்'' என்று அறிக்கை விட்ட நடிகை மாயா, சத்தியமூர்த்தி பவனையே சந்திக்கு இழுத்ததைப் போல இவர்கள் ஐயப்பனின் 'பிரம்மசர்யத்தையே' கேலிக்குள்ளாக்கி விட்டனர்.

''இது சபரிமலையின் புகழைக் கெடுக்க பணிக்கர் செய்யும் சதி'' என சபரிமலை பூசாரிகளும், சபரிமலையின் பாரம்பரியம் கெட்டுப் போய்விட்டதாக எதிர் கோஷ்டியினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்கின்றனர். நடிகைகள் தொடும்போது அதைக் கள்ளத்தனமாக அனுபவித்த ஐயப்பனோ குத்துக்காலிட்டபடி தேமே என்று அமர்ந்திருக்கிறார். உண்மையில் இந்தப் பிரச்சினை சபரிமலையின் வருமானத்தை அனுபவிக்கும் இரு கோஷ்டிகளுக்கிடையிலான மோதலில் அடங்கியிருக்கிறது. சபரிமலையின் ஆண்டு வருமானம் 200 கோடி ரூபாய். இந்த வருமானத்தை அரசு, அதிகார வர்க்கம், திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு, மற்றும் பூசாரிகள் ஆகியோர் ஆடம்பரமாக அனுபவிக்கின்றனர். இந்தப் பங்குச் சண்டைதான் ஐயப்பன் கோபம் என்றும் சதி என்றும் எழுந்திருக்கிறது.

இந்தப் பங்காளிச் சண்டையில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதுதான் கண்டனத்திற்குரியது. ஒரு கோவிலுக்கு பெண்கள் வரக்கூடாது என்றும் வந்தால் தீட்டு, பாவம் என்றும் ஒரு மதம் சொல்லுகிறது என்றால் அந்த மதம் நிச்சயமாக காட்டுமிராண்டிகள் மதமாகத்தான் இருக்க முடியும். பக்தர்கள் குறிப்பாக பெண் பக்தர்கள் இதற்கெதிராக போர்ப் பிரகடனம் செய்து போராடுவது அவசியம். அல்லது ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்த ஐயப்பனை ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மட்டும் தரிசிக்கலாம் என்றாவது மாற்றியமைக்க வேண்டும். விரதம் என்ற பெயரில் பெண்களை இழிவுபடுத்தி, அதையே ஆண்மையின் வீரசாகசமாகச் சித்தரித்துக் கொண்ட இந்த வெட்கம் கெட்ட வழிபாட்டு முறை பெண்கள் மூலமே 'கவித்துவ நீதி'யை சந்தித்திருக்கிறது. இனியாவது பக்தர்கள் சிந்திக்கட்டும்.

இந்தப் பிரச்சினையில் கேரளாவை ஆளும் மார்க்சிஸ்டுகள் ''சாமியே ஐயப்பா முற்போக்கு பொய்யப்பா'' என்று சரணம் பாடுகிறார்கள். தீட்டுப்பட்ட ஐயப்பனுக்கு இரண்டு மாதம் பரிகாரச் சடங்கு செய்து கோபத்தைத் தணிப்பதாகவும், ஜெயமாலா தொட்டது குறித்து தீவிர விசாரணை நடத்தப் போவதாகவும் மார்க்சிஸ்டு மந்திரிகள் அறிக்கை விடுகிறார்கள். ''வருமானத்தைக் குலைக்க சதி'' என்று பதறுகிறார்கள். உண்டியலைக் குறி வைத்து சதி செய்தது ஏழுமலையானாகவோ, பழனி ஆண்டவனாகவோ இருக்கும் பட்சத்தில் சி.பி.ஐ. விசாரணை தேவைப்படும். ஐ.எஸ்.ஐ சதி என்றால் இன்டர்போலை அழைக்க வேண்டியிருக்கும்.

ஜெயமாலா கதை, ஏட்டு முதல் எஸ்.பி. வரை ஜெயலட்சுமி கதை போல நீள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அல்லது தேசநலன் மற்றும் தெய்வ நலன் கருதி இந்த தேவரகசியம் கமுக்கமாக அமுக்கப்படவும் வாய்ப்புண்டு. எவ்வாறாயினும், ஆன்மீக மோசடிகளை அம்பலப்படுத்துவதில் ஆத்திகர்களுக்கு உள்ள திறமை நாத்திகர்களுக்கு இல்லை என்ற உண்மையை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

"ஜெனிஃபரின் இந்த புதிய பெர்ப்ஃயூம் உங்கள் ஆளுமையை கூட்டி, சுத்தமாகவும், செக்ஸியாகவும் வைத்திருக்கும் - வேறு எதை எதிர் பார்த்துக் காத்திருக்கிறீர்கள்?" என்று குழுமியிருக்கும் கூட்டத்தினரை கேட்கிறார் சென்ட் விற்பனை பிரதிநிதி. இது இந்து நாளேடு சென்னையில் நடத்திய "மெட்ரோ பிளஸ் லைப் ஸ்டைல் ஷோ"வில் ஒரு காட்சி.

இந்திய நடுத்தர வர்க்கம் காத்திருக்கவில்லை. வாழ்க்கையின் இலட்சியத்தை, மகிழ்ச்சியின் இரகசியத்தை "கண்டுகொண்டேன்... கண்டுகொண்டேன்" என முன்னெப்போதைக் காட்டிலும் விரைவாக 'அமெரிக்கக் கனவை' நோக்கி ஓடுகிறது. அந்த ஓட்டத்தில் ஒரு நிறுத்தம் தான் "தி இந்து - மெட்ரோ பிளஸ் லைப் ஸ்டைல் ஷோ."

மேல்தட்டு வர்க்கத்தினரின் கேளிக்கை, கும்மாளங்களை பிரசுரிப்பதற்காக 'மெட்ரோ பிளஸ்' எனும் 4 பக்க இலவச இணைப்பை நாள்தோறும் பிரசுரித்து நடுத்தர வர்க்கத்தினருக்கு 'ஆன்மீக சேவை' புரிந்து வரும் 'மவுண்ட் ரோடு மகாவிஷ்ணுவின் மடோனா அவதாரம்' இந்த மெட்ரோ பிளஸ் கண்காட்சி.

இது 'ரங்கராட்டினம், பஞ்சு மிட்டாய்' ரகத்தைச் சேர்ந்த அரசுப் பொருட்காட்சியோ, வீட்டு உபயோகப் பொருட்காட்சியோ அல்ல. ராக் இசை நிகழ்ச்சியும், 'பிளானட் யம்'மின் உலக உணவகமும், "நிமிடத்தில் எத்தனை பிட்சாவை விழுங்க முடியும்" போன்ற விளையாட்டுப் போட்டிகளும் நிறைந்த, அரை டஜன் ஹெவி டுட்டி ஜெனரேட்டர்களால் முற்றிலும் குளிரூட்டப்பட்ட புதிய கனவுலகம்.

வாடிக்கையாளர்கள் விலைக்கு வாங்க முடியாத, ஆனால் நுகர்ந்து மகிழக்கூடிய சினிமா நட்சத்திரங்களும், சின்னத்திரை நட்சத்திரங்களும், மாடல்களும் கூட அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தனர்.

**பசிப்பிணி என்ற சொல்லைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். வசதிப் பிணி (Affluenza) என்ற நோயை உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறது அமெரிக்கா. "மேலும் வாங்கு, மேலும் வாங்கு என்ற வெறி பிடித்த துரத்தலின் விளைவாகத் தோன்றும் மிகை உழைப்பு, கடன், பதற்றம், மனஅழுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய துன்பகரமான சமூகத் தொற்று நோய்" என்று இதனை வரையறுத்திருக்கிறார்கள் அமெரிக்க உளவியல் மருத்துவர்கள்.**

நுகர்வோரின் வாழ்க்கைத் தரத்தை 'ஜாக்கி' வைத்து தூக்கும் ஆயிரக்கணக்கான பொருட்களை இந்தியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும், ஆப்பிரிக்கா, தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, அமெரிக்கா, ஜெர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும் தருவித்து சதுர மீட்டருக்கு ரூ. 6000/- வாடகை செலுத்தி, 1,40,000 சதுர அடி பரப்பில் அமைக்கப்பட்டிருந்த ஒரு உலக சந்தை அது.

எதிர்பார்த்ததை போலவே கடந்த ஆண்டை விட 70% அதிகமானோர், தனது "இஷ்ட பிராண்டுகள்" அனைத்தும் ஒரு சேர எழுந்தருளியுள்ள இந்த ஹைபர் மார்க்கெட் ஆலயத்தில் ஆயிரக்கணக்கில் குவிந்து, ரூ. 50 நுழைவுக் கட்டணம் செலுத்தி, வரிசையில் நின்று தரிசித்தனர்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தவைகளில் பல இதற்கு முன்னர் கேள்வியே பட்டிராத பொருள்களென்றாலும் அவை ஒவ்வொன்றின் 'அத்தியாவசிய'த் தன்மையை விளக்கும் விற்பனை பிரதிநிதிகளுக்கும், "அதில் மேற்கொண்டு பலான பலான வசதிகள் இல்லையே" என்று விற்பனையாளர்களைத் திணறடிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பஞ்சமேஇல்லை.

விறகு அடுப்பை ஊதி கண் வீங்கும் பெண்கள் வாழும் நாட்டில் ரூ. 15,000 விலையில் 'பெண்களின் குறை தீர்க்கும்' எலக்ட்ரானிக் புகைபோக்கியுடன் கூடிய 4 பர்னர் அடுப்பு.

இலவச டி.வி.க்கு ஓட்டுப் போட்ட தமிழ்நாட்டில் ரூ. 400,000 விலையில் 40" பிளாஸ்மா டி.வி. உட்கார்ந்தபடியே டி.வி. பார்க்க, படிக்க, அப்படியே கால் நீட்டி ஓய்வெடுக்க, அதையே கட்டிலாக்கித் தூங்க... என பல அவதாரம் எடுக்கும் ரூ. 25,000 மதிப்புள்ள சோபா.

60% மக்களுக்கு குழாய் இணைப்பு, குடிநீர், கழிவறை இல்லாத நாட்டில், டி.வி., போன், இண்டர்நெட், வி.சி.டி., டி.வி.டி போன்ற 13 'அத்தியாவசியமான சாதனங்கள்' பொருத்தப்பட்ட ரூ. 2,50,000 மதிப்புள்ள குளியல் அறை.

நேர்த்திக் கடனை செலுத்துவதற்குக் கூட கடன் வாங்கி பஸ் பிடிக்கும் பக்தர்கள் நிறைந்த நாட்டில் ரூ. 4 லட்சத்திற்கு விற்பனையாகும் வெள்ளியிலான நடமாடும் பூஜையறை.

உயிர் காக்கும் 150 மருந்துகளில் தன்னிறைவு இல்லாத நாட்டில், கை, கால், இடுப்பு, முதுகு, தோள், தலை என எல்லா அங்கங்களுக்கும் மசாஜ் செய்யும் 1.5 லட்சம் மதிப்புள்ள மசாஜ் நாற்காலி.

தாய்லாந்தின் காடுகள் அழிந்து சோபாவாக, ஜார்கண்ட் பழங்குடியினரின் மரபுகள் அழிந்து கைவினைப் பொருட்களாக, தாய்வான் பெண்களின் கண்பார்வை அழிந்து எலக்ட்ரா


# நுகர்பொருளே, பரம்பொருளாக!

## இந்தப் பச்சை, முன்னேற்றத்தின் வண்ணமா, வக்கிரத்தின் சின்னமா?



படிப்பகம்

www.padippakam.com




னிக் பொருட்களாக, மத்தியப் பிரதேச கைவினைஞர்களின் கலை அழிந்து வெறும் பூஜையறையாக, உத்திர பிரதேச குழந்தை தொழிலாளர்களின் மழலை அழிந்து அலங்கார விரிப்புகளாக, கொத்தடிமை நெசவாளர்களின் இரத்தம் ஆர்.எம்.கே.வி.யின் புடவைகளாக, சுரங்கத் தொழிலாளர்களின் உயிர் டி.டமாஸின் வைரங்களாக, ஆப்பிரிக்க நாகரிகம் அழிந்து சுற்றுலா மையமாக... மனிதன் அழிந்து நுகர்வோனாக! இதுதான் அந்தக் கண்காட்சி.

அங்கே சோபா செட்டைப் பார்த்தவர்கள் வரவேற்பறையின் போதாமையை உணர்ந்தனர். சிறிய காரைப் பார்த்தவர்கள் இரு சக்கர வண்டியின் போதாமையை உணர்ந்தனர். பிளாஸ்மா டி.வி.யைப் பார்த்த பெண்கள் கணவனின் போதாமையை உணர்ந்தனர். அழகு சாதன மாடல்களைப் பார்த்த கணவன்மார் மனைவியின் போதாமையை உணர்ந்தனர்.

மொத்தத்தில் ஞானிகளும் முனிவர்களும் தம் வாழ்நாள் முழுவதும் முயன்றும் மக்களுக்குப் புரிய வைக்க முடியாத வாழ்வின் போதாமை தத்துவத்தை மூன்றே மணி நேரத்தில் நுகர்வோருக்குப் புரிய வைத்தது அந்தக் 'கண்காட்சி'.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் உருவாகியிருக்கும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த புதிய வேலை வாய்ப்புகளும், ஐந்திலக்கச் சம்பளமும் இந்திய நகர்ப்புற மக்களிடையே ஒரு வீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வீக்கத்தை வளர்ச்சியென ஊதிப் பெருக்கி அதை அறுவடை செய்ய பன்னாட்டுக் கம்பெனிகள் இந்திய நகரங்களை முற்றுகையிட்டு, நுகர்வோரின் வாழ்க்கையை நேரடியாகவும் மறைமுகமாகவும் இடையறாது தாக்கி மாற்றுகின்றனர்.

தீபாவளி, பொங்கல் என வருடத்திற்கு இரண்டு முறை மட்டுமே சந்தைகளை கட்டிய காலம் போய், "காதலர்கள் தினம், நண்பர்கள் தினம்,.தாய்மார்கள் தினம், பெற்றோர்கள் தினம், அட்சயத் திருதியை, புத்தாண்டு விற்பனை என மாதந்தோறும் சந்தை தீபாவளி கொண்டாடுகிறது.

அழகு சாதனங்களை விற்க பெரு நகரம் முதல் சிறு டவுன்கள் வரை அழகிப் போட்டிகள், ஆயத்த ஆடைகளின் விற்பனைக்கு பேஷன் ஷோக்கள், மேட்டுக்குடி ஆபாச வாழ்க்கையை கடைச் சரக்காக்கும் 'வாழ்க்கைத் தர' புத்தகங்கள், வியாபாரிகளை மிரட்டி தங்கள் பொருட்களை மட்டுமே விற்கச் செய்யும் பன்னாட்டு கம்பெனிகளின் வர்த்தக 'மேலாண்மை'த் தந்திரங்கள், கடைக்கு வர முடியாதவர்களை வீட்டுக்கே சென்று வளைக்கும் 'டெமோ'க்கள்!

"ஞாயிற்றுக் கிழமையானால் பகுதிக்கு ஒரு ஷாப்பிங் திருவிழா, மாதத்திற்கு ஒரு பொருட்காட்சி, திரும்பிய பக்கமெல்லாம் முகத்தில் அறையும் பிரம்மாண்ட விளம்பர தட்டிகள், கண்ணைப் பறிக்கும் நியான் ஒளி வெள்ளங்கள், மழைக்கால தள்ளுபடி, கோடைக்கால தள்ளுபடி, ஆண்டுத் துவக்க தள்ளுபடி, ஆண்டு முடிவு தள்ளுபடி, ஆடித் தள்ளுபடி, ஆனித் தள்ளுபடி என எப்போது வாங்கப் போனாலும் விலை குறைவாக உள்ளதைப் போன்று உருவாக்கப்படும் மாயத் தோற்றங்கள், பற்பசையை கூட தன்னம்பிக்கை பசையாக மாற்றும் விளம்பர மோசடிகள், இலவச சலுகைகள், பரிசுப் போட்டிகள் என விரிக்கப்படுகிறது வலை. தான் சிக்குவதை உணராத நுகர்வோரோ இந்த சந்தை சாகரத்தில் மூழ்கி மூச்சுத் திணறுகிறார்கள்.

நகரங்கள் முழுவதும் சீரியல் செட்டு போல சாரை சாரையாக மிளிரும் மார்கெட்டுகளும், ஷாப்பிங் மால்களும் மக்களை சுண்டியிழுக்கின்றன. ஆரவாரத்தின் மீது ஆராக் காதல் கொண்ட நடுத்தர வர்க்கமோ, திட்டமிட்டு பொருட்களை வாங்க வேண்டும் என்ற 'பத்தாம் பசலி'த் தனத்தையெல்லாம் கைவிட்டு "கடைக்குப் போவோம், கண்டதை வாங்குவோம்" என்று ஈசலைப் போல கடைவீதியை மொய்க்கிறது. பொருட்களின் அணிவரிசையில் மயங்கி தள்ளுக்கூடையின் ஐந்தாவது சக்கரமாக சுழன்று கண்ணில் பட்டதையெல்லாம் அள்ளிப் போட்டு நிரம்பிய கூடையை பார்த்து பெருமிதமும் கொள்கிறது.

"அதிகமாய் நுகர்கின்ற நாடே முன்னேறிய நாடு, அதிகமாய் நுகர்கின்ற

www.padippakam.com

மனிதனே வெற்றி பெற்ற மனிதன், பார்த்தவுடனே வாங்க வேண்டும், ஒருவேளை பொருட்களை நுகர முடியா விட்டாலும் அவற்றை உடைமையாக வைத்திருப்பதே மகிழ்ச்சி. அவற்றை வாங்குகின்ற அனுபவமே மகிழ்ச்சி...'' என்ற இந்த அமெரிக்கக் கனவு இந்திய நடுத்தரவர்க்கத்தின் ஆசையை வீங்க வைக்கிறது. வாங்க முடியாத ஏழை மக்களை ஏங்க வைக்கிறது.

''உழைப்பு நேரம் போக மீதமுள்ள நேரத்தில் மக்கள் ஈடுபட வேண்டிய படைப்பூக்கமுள்ள ஒரே நடவடிக்கை கடைவீதிக்குப் போய் ஷாப்பிங் செய்வது தான்'' என்று தனது சமூகத்தையே மாற்றி அமைத்திருக்கிறது அமெரிக்க ஆளும் வர்க்கம்.

''மனசு சரியில்லை கோயிலுக்குப் போய் வருகிறேன். மனசு சரியில்லை சினிமாவுக்குப் போய் வருகிறேன்'' என்று கூறக் கேட்டிருப்பீர்கள். ''மனசு சரியில்லை சரவணா ஸ்டோர் போய்ட்டு வரேன்'' என்ற வசனத்தை விரைவில் நாம் கேட்கவிருக்கிறோம். மன ஆறுதலுக்கு ''ஷாப்பிங்'' என்பதை ஒரு மருந்தாகவே சிபாரிசு செய்கிறார்கள் அமெரிக்க மருத்துவர்கள். இந்த நுகர்வு வெறி என்பது ஒரு மருந்தா அல்லது பிணியா? இந்தக் கேள்விக்கான விடையை அமெரிக்காவிலேயே தேடுவோம்.

பசிப்பிணி என்ற சொல்லைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். வசதிப்பிணி (Affluenza) என்ற நோயை உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறது அமெரிக்கா. ''மேலும் வாங்கு, மேலும் வாங்கு என்ற வெறி பிடித்த துரத்தலின் விளைவாகத் தோன்றும் மிகை உழைப்பு, கடன், பதற்றம், மனஅழுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய துன்பகரமான சமூகத் தொற்று நோய்'' என்று இதனை வரையறுத்திருக்கிறார்கள் அமெரிக்க உளவியல் மருத்துவர்கள்.

ஷாப்பிங்தான் அமெரிக்கர்களுக்கு பிடித்த பொழுதுபோக்கு. நோய் தீர்க்க ஷாப்பிங், உற்சாகத்திற்காக ஷாப்பிங், ஷாப்பிங்கிற்காக ஷாப்பிங் என வாங்கிக் கொண்டே இருப்பது என்பது அமெரிக்க கலாச்சார கூறுகளில் ஒன்றாகிவிட்டது.



**வாங்கிக் குவிப்பதையே வாழ்க்கையின் களிப்பாக நினைக்கும் அமெரிக்க வாழ்க்கை உருவாக்கியிருக்கும் நோய் - அஃப்ளுயன்சா!**

தங்கள் குழந்தைகளுடன் வாரம் வெறும் 40 நிமிடமே விளையாடும் 70% அமெரிக்கர்கள் வாரம் 6 மணி நேரம் ஷாப்பிங் செய்கிறார்கள். நாளொன்றுக்கு 7 மணிநேரத்தை தொலைக்காட்சியின் முன் செலவிடும் குழந்தைகள் பெற்றோருடன் பேசும் நேரம் வெறும் 15 நிமிடங்கள். டி.வி. விளம்பரத்துக்குப் பலியான அமெரிக்க குழந்தைகளால் தூண்டப்படும் வியாபாரம் மட்டும் ஆண்டுக்கு 45 லட்சம் கோடி ரூபாய்.

1950-இல் துவங்கிய அமெரிக்க மக்களின் நுகர்வு கலாச்சாரம், நுகர்வு வெறியாய் வளர்ந்து, கொள்ளை நோயான அஃப்லூயென்ஸாவாக இன்று ஒட்டு மொத்த சமூகத்தையே சிதைத்துவிட்டது. இந்த தணியாத நுகர்வுத் தாகத்தினால் அமெரிக்கர்கள் ஆண்டுதோறும் ஆளுக்கு 21,000 டாலர்கள் நுகர்வு பொருட்களின் மேல் செலவழிக்கிறார்கள். அமெரிக்காவில் உயர் பள்ளிகளைவிட ஷாப்பிங் மால்கள் இரு மடங்காக பெருகியுள்ளன.

இவ்வளவு செலவிற்கும் அமெரிக்கர்கள் வாங்கியவை பொருட்கள், பொருட்கள், பொருட்கள் மட்டுமே. பொருட்களை வாங்கி வைப்பதற்காக அமெரிக்கர்களின் வீடுகள் விரிந்தன. அதாவது, வீட்டில் மனிதர்கள் பயன்படுத்தும் இடத்தைக் காட்டிலும் பொருட்கள் 'பயன்படுத்தும்' இடம் அதிகரித்தது. சோபா, கட்டில், பீரோ போன்ற பொருட்களை வாங்கிவிட்டு வைப்பதற்கு வீட்டில் இடமில்லாமல் வாடகைக்கு லாக்கர் பிடித்து அங்கே அடுக்கி வைத்துப் பாதுகாக்கிறார்கள். இதற்கு அமெரிக்கர்கள் கட்டும் ஆண்டு வாடகை மட்டும் 60,000 கோடி ரூபாய்.

இவ்வளவு வாங்கியும் செலவழித்தும் அமெரிக்கர்களால் இன்பமாக இருக்க முடியவில்லை. ஏனென்றால் ''அமெரிக்கர்களுக்கு நேரம் இருப்பதில்லை. அமெரிக்கர்கள் அதிகமாக உழைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அதிகமாக வாங்க விரும்புகிறார்கள்.'' வாங்கிய கடனை அடைக்க மேலும் அதிகமாக வேலை செய்கிறார்கள்.

ஏனென்றால், இந்த ஷாப்பிங் அனைத்தும் கடனில் தான் செய்யப்படுகிறது. அமெரிக்காவில் ஐந்திற்கும் மேற்பட்ட கிரெடிட் கார்டுகள் இல்லாத நபரை காண்பது அரிது. ஒரு சராசரி அமெரிக்க குடும்பம் கிரெடிட் கார்டுகளில் மட்டும் 7500 டாலர்களுக்கு மேல் கடன் வைத்துள்ளது. இன்றைய நிலையில் 60 லட்சம் அமெரிக்கர்கள் போண்டியாகும் விளிம்பில் உள்ளனர். 60% அமெரிக்கர்களுக்கு வேலை போனால் தனது வாழ்க்கையை 1 மாதம் கூட தாக்கு பிடிக்க முடியாத நிலை.

ஒரு அமெரிக்கத் தொழிலாளி 1960-களில் வேலை செய்ததை விட இன்று அதிக நேரம் வேலை செய்கிறான். இதனால் ஏற்பட்ட நேரமின்மை காரணமாக ஒரே வீட்டில் இருந்தாலும், அமெரிக்க குடும்பத்தினர் தனித்தனி தீவுகளாக தொடர்பற்று வாழ்கின்றனர். நாளொன்றுக்கு 12 நிமிடம் மட்டுமே பேசும் அமெரிக்க தம்பதிகள்தான் உலகிலேயே அதிகமாக விவாகரத்து செய்கிறார்கள். அதில் 90% விவகாரத்துகளுக்கு காரணம் பணம் தொடர்பான பிரச்சினைகள்.

பொருட்களின் பால் வளர்க்கப்படும் 'உபயோகித்தபின் தூக்கியெறி' எனும் 'யூஸ் அண்ட் த்ரோ' கலாச்சாரம் மனித உறவுகளுக்கும் பரவுகிறது.

www.padippakam.com

'பயன்படாத' நண்பர்களோ, கணவனோ, மனைவியோ, பெற்றோரோ காலம் காலமாய் ஒரு கம்பெனியில் உழைத்த தொழிலாளியோ - யாராக இருந்தாலும் பொருட்களை போலவே தூக்கியெறியப்படுகிறார்கள்.

நுகர்வு வெறியின் நேரடி விளைவாக ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்குமான இடைவெளி அதிகரித்த வண்ணம் உள்ளது. ஏழைகள் வறுமை கோட்டுக்கு கீழ் போய் கொண்டிருக்கும் அதேநேரத்தில் பணக்காரர்கள் தனது வளத்தை பெருக்கிக் கொண்டே போகின்றனர். 20 சதவிகிதம் அமெரிக்க குடும்பங்கள் 92% அமெரிக்க வளத்தை பெற்றுள்ளன. அவர்களில் 10% பேர் 83% வளத்தை பெற்றுள்ளனர். இதற்கு மாறாக 40% அமெரிக்கர்களுக்கு எந்தவிதமான சொத்துக்களும் இல்லை. இந்த ஏற்றத்தாழ்வின் விளைவாக விதம் விதமான குற்றங்கள் அதிகரிக்கின்றன. உலகத்திலேயே அதிகமாக 20 லட்சம் குடிமக்களை சிறையில் வைத்துள்ளது அமெரிக்க அரசு.

வாங்கிக் குவிப்பதில் வற்றாத தாகம் கொண்ட அமெரிக்கர்களுக்கு தன் குடும்பமும் சமூகமும் சிதறுவதைப் பற்றி உரைப்பதேயில்லை. நுகர்வுவெறி தோற்றுவிக்கும் 'நான் - எனது - என்னுடைய' என்ற தனிநபர்வாதம் அவர்களை ஒட்டு மொத்த சமூகத்திலிருந்து அந்நியமாக்கியிருக்கின்றது. உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கும் நுகர்வு வெறி சமூகமான அமெரிக்க வல்லரசில் 15% பேர் மன நோயுடன் வாழ்கிறார்கள். 10 ஆண்டுகளில் தற்கொலைகள் 300% அதிகரித்துள்ளன.

2004-ஆம் ஆண்டு கணக்குப்படி நம் நாட்டில் பெங்களூரில் தற்கொலை செய்து கொண்டவர்களில் 70% பேர் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதிகளான சாப்ட்வேர் துறையினர். இன்னும் 20 ஆண்டுகளில் இந்தியாவும் வல்லரசுதானோ!

பசிப்பிணியால் துன்புறும் நமது நாட்டிற்கும் வசதிப் பிணியால் அவதிப்படும் அமெரிக்காவுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா என்று வாசகர்கள் சிலர் கருதக்கூடும். ஏணி வைக்காமலேயே எட்டிவிடும் தூரத்தில்தான் இருக்கிறோம்.

அடுத்த சில ஆண்டுகளில் ''25 கோடி செல்போன் என்ற இலக்கை அடைந்தே தீருவோம்'' என்கிறார் அமைச்சர். வீட்டுக்கு ஒரு குழாய் இல்லை; குழாய் வைக்க வீடே இல்லை. ஆனால் வீட்டுக்கு ஒரு செல்

**எதை உடைமையாகக் கொள்ள முடியுமோ அந்தப் பொருளை மட்டுமே நேசிப்பது என்ற பொருள் மோகம், ''காதல், பாசம், இரக்கம், நட்பு, தோழமை'' போன்ற மனித உணர்ச்சிகளின் இடத்தில் உடைமை உணர்ச்சியை சத்தம் போடாமல் திணித்துவிட்டது. சக மனிதனைப் பொருளைப் போல விலைக்கு வாங்க முடியாதென்பதால் மனித உறவுகள் 'மதிப்பு' இழந்து வருகின்றன.**

போன்! இரண்டு ரூபாய் அரிசியும் கலர் டிவியும் அமைத்துள்ள கூட்டணியின் பொருள் என்ன? அதுதான் வறுமையும் நுகர்பொருள் மோகமும் அமைத்துள்ள கூட்டணி.

அமெரிக்காவைப் போல பொருட்களை வைக்க வீட்டில் இடமில்லாமல் லாக்கர் தேடும் நிலை இங்கே தோன்றாமலிருக்கலாம். ஆனால் ''டிவி, சோபா, ஃபிரிட்ஜ், வாசிங்மிஷின், கிரைண்டர், கம்ப்யூட்டர், சாப்பாட்டு மேசை'' ஆகியவைதான் இன்றைய நடுத்தர வர்க்க வீடுகளின் அளவைத் தீர்மானிக்கின்றன என்பது உண்மையில்லையா? -

அட்சய திருதியைக்கும் ஆடித் தள்ளுபடிக்கும் நேர்த்திக் கடன் செலுத்துவது போல கடைவீதிக்குப் போக நடுத்தர வர்க்கம் பழகிவிடவில்லையா? கிரெடிட் கார்டு இல்லாத நகர்ப்புற நடுத்தர வர்க்கம் இன்று உண்டா? 1980-இல் இந்தியா முழுவதும் 8700 கிரெடிட் கார்டுகள். இன்று ஒரு சிற்றூரிலேயே அதைவிட அதிகமிருக்கும்.

உங்கள் பெற்றோரும் பிள்ளையும் டி.வி.யுடன் செலவிடும் நேரம் அதிகமா, உங்களுடன் செலவிடும் நேரம் அதிகமா? தொலைக்காட்சி விளம்பரங்கள் உங்கள் வாங்கும் விருப்பங்களைத் தீர்மானிக்கவில்லையா?

இந்த நுகர்வு மோகம் உங்கள் உறவினர் மத்தியில், நண்பர்கள் மத்தியில், ஏன் உங்கள் குடும்பத்திற்குள்ளேயே இனம் புரியாத சுயநலவாதிகளை உருவாக்கியிருப்பதை நீங்கள் இன்னும் அடையாளம் காணவில்லையா?

எதை உடைமையாகக் கொள்ள முடியுமோ அந்தப் பொருளை மட்டுமே நேசிப்பது என்ற பொருள் மோகம், ''காதல், பாசம், இரக்கம், நட்பு, தோழமை'' போன்ற மனித உணர்ச்சிகளின் இடத்தில் உடைமை உணர்ச்சியை சத்தம் போடாமல் திணித்துவிட்டது. சக மனிதனைப் பொருளைப் போல விலைக்கு வாங்க முடியாதென்பதால் மனித உறவுகள் 'மதிப்பு' இழந்து வருகின்றன.

இந்தப் பொருள் மோகம் தானாக உருவானதல்ல. முதலாளி வர்க்கத்தால் திட்டமிட்டு உருவாக்கப்படுவது. முதலாளித்துவ நுகர்பொருள் உற்பத்தியுடைய கன்வேயர் பெல்ட்டின் மறுமுனையில் உங்கள் வாய். நாளொன்றுக்கு 10 லட்சம் பாட்டில் கொக்கோ கோலா உற்பத்தி என்றால் தினம் ஒரு பாட்டில் குடிப்பதற்கும் அதுவே 20 லட்சமானால் 2 பாட்டில் குடிக்கும்படியாகவும் நீங்கள் தயாரிக்கப்படுகிறீர்கள். விலங்குகளைக் கூடக் கூண்டிலடைத்துத்தான் அடிமையாக்க முடியும். சுதந்திரமாக உலவவிட்டு அடிமைத்தனமாக சிந்திக்கும் நிலைக்கு நம்மைப் பழக்கியிருக்கிறது முதலாளித்துவம்.

முதலாளித்துவ உற்பத்தியின் தேவைக்கு ஏற்ப உங்கள் பசியும் தாகமும் உருவாக்கப்படுகின்றன. உங்களுடைய நாவில் உமிழ்நீர் சுரப்பதைக் கூட விளம்பரங்கள் தீர்மானிக்கின்றன.

அமெரிக்கக் கனவைத் துரத்தும் இந்த ஓட்டத்தில் மனிதப் பண்புகள் காலடிப் புழுதியாகி காற்றில் கலக்கின்றன. கடன் கட்ட முடியாமல் 10,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட நாட்டில், கையில் கிரெடிட் கார்டுகளுடன் எதை வாங்குவது என்று தெரிவு செய்ய முடியாமல் கடைகளில் அலைமோதுகிறது ஒரு கூட்டம்.

அவர்களுக்கு நாட்டைப் பற்றியோ சக மனிதர்களின் துயரத்தைப் பற்றியோ அக்கறையில்லை. அவர்களால் விலைக்கு வாங்க முடியாத எந்தப் பொருள் மீதும் அவர்களுக்குப் பற்றுதல் இல்லை.

கணவன் - மனைவிக்கும் - குழந்தைகளுக்கும் - நண்பர்களுக்கும் ஒதுக்குவதற்குக் கூட நேரமில்லாமல் அவர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பு நேரத்தையும் ஓய்வு நேரத்தையும் ஒரு சேர சந்தையிடம் அடகு வைத்ததனால் ஏற்பட்டுள்ள இடைவெளியை அவர்கள் அடைத்தாக வேண்டும் - பொருட்களைக் கொண்டு!

● கார்மேகம்

www.padippakam.com

## உலகக் கோப்பைக் கால்பந்து 2006:

# விளையாட்டுக்கு கால் பந்து வியாபாரத்துக்கு முழுப் பந்து

"2006-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜெர்மனியில் நடந்த முக்கிய மான நிகழ்வு என்ன?" என்று ஒரு ஷிநாடி வினா நிகழ்ச்சியில் கேள்வி கேட்பதாக வைத்துக் கொண்டால் உங்கள் பதில் என்ன? உலகக் கோப்பைக் கால்பந்து என பளிச் சென்று பதிலளித்து விடலாம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமில்லை.

காரணம் அந்த சொற்றொடர் கூட ஃபிபா என்றழைக்கப்படும் சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனத் தால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை அந்த சங்கத்தின் அதிகாரப்பூர்வ ஸ்பான்சர்கள் தவிர வேறு எவரும் பயன்படுத்த முடியாது. அப்படி பயன் படுத்திய 420 நிறுவனங்கள் மீது ஃபிபா உலகெங்கும் வழக்கு தொடுத்தி ருக்கிறது. ஜெர்மனியில் மட்டும் கால் பந்து தொடர்பான தங்களது காப்புரி மைகளை காப்பாற்றுவதற்கு சட்டவல் லுநர்கள் அடங்கிய 250 பேர் கொண்ட சந்தைப் படை நிர்வாகிகளை ஃபிபா சுற்றவிட்டிருக்கிறது.

இரசிகர்கள் கால்பந்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஃபிபா வும், பன்னாட்டு நிறுவனங்களும் போட்டியை வைத்து காசாக்குவதை நடைமுறைப்படுத்தி வருகின்றன. கால்பந்து என்ற நாணயத்தின் இரு பக் கங்களும் இப்படித்தான் இருக்கின்றன.

முக்கனிகளில் சுவையான முதல் கனி மா போல விளையாட்டுகளில் அழகானது கால்பந்து. பதினொரு பேர் கொண்ட அணியினர் பந்தைக் காத்து, கடத்தி, உதைத்து, கட்டுப்படுத்தி, சீற வைத்து, கால்களால் கோலமிட்டு கண நேர வித்தையில் கோல் போடும் அந்த விளையாட்டு நிச்சயம் அழகானது தான். இந்த அழகின் வலிமையை நிகழ்த்திக் காட்டிய பல்வேறு அணி களையும், பீலே முதல் மரடோனா, மெஸ்ஸி வரையிலான வீரர்களையும் மறக்க முடியாதுதான்.

இது ஒலிம்பிக்கிற்கு இணையாக உலகமக்கள் பார்க்க விரும்பும் தனித்து வமிக்க விளையாட்டு. கால்பந்தின் மொழியில் இணையும் சர்வதேச உணர்வு. பல்வண்ண ஆடைகளை அணிந்திருக்கும் வீரர்களைக் குழந்தை கள் அழைத்து வருகிறார்கள். விதவித மான இராகங்களில் தேசிய கீதம். அந்த நேரத்தில் குறும்புக்கார வீரர்கள் சிலர் கண்ணடிக்கிறார்கள். சவுதி அணிவீரர் கள் கோல் போட்டதும் அல்லாவைத் தொழுகிறார்கள். கானா வீரர்கள் சிலுவை போடுகிறார்கள். ஐவரி கோஸ்ட் வீரர்கள் ஆப்பிரிக்கப் பழங் குடி நடனம் ஆடுகிறார்கள். பிரேசில் இரசிகர்கள் சம்பா நடனம் ஆடுகிறார் கள்.

பல்தேசியக் கொடிகளின் வர்ணங் கள் பூசப்பட்ட அழகான முகங்கள், தத் தமது நாட்டு அணிகளின் சட்டைகளை அணிந்தவாறு நடனமாடும் இரசிகர் கள், பீலே பாணி உதை, மரடோனா கையால் போட்ட கடவுளின் கோல், மெக்சிகோவில் நடந்த உலகக் கோப் பையின் போது இரசிகர்கள் முதன்முத லாக உருவாக்கிய கடல் அலையின் ஆர்ப்பரிப்பு. முந்தையப் போட்டி யொன்றில் முதல் நுழைவிலேயே காலிறுதி வரை சென்ற காமரூன் அணி யின் சாதனை, சென்ற உலகக் கோப்பை யில் அரையிறுதி வரை சென்ற தென் கொரிய அணி, இவ்வாண்டு போட்டி யின் காலிறுதியில் பெனால்டி உதை யில் தோற்ற அர்ஜென்டினா அணி வீரர் களின் கதறல், வெற்றி பெற்ற ஜெர்மன் அணி பயிற்சியாளர் கிளிம்ஸ்மென் னின் உற்சாகம், கால்பந்தை நேசிக்கும் கேரளத்தில் அர்ஜென்டினா அணியின் வண்ணத்தை தனது படகில் பூசி அழகு பார்க்கும் மீனவர்கள், இந்தியாவில் கால்பந்து உயிர்த்திருக்கும் மேற்கு வங் கத்தில் உலகக்கோப்பை போட்டிகளை



கானா அணித்தலைவர் அப்பய்யா. இவரைப் போன்ற வீரர்களை ஐரோப்பிய கிளப்புகள் கொத்திக் கொண்டு போய் விடுகின்றன.

www.padippakam.com

# கால்பந்து சங்கமா, காசு புரட்டும் பன்னாட்டு நிறுவனமா?

FIFA (Federation de international football associations) என்றழைக்கப்படும் சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனம் ஸ்விட்சர்லாந்தில் இலாப நோக்கமற்ற அமைப்பாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்த சுவிட்சர்லாந்து? அதிகார வர்க்கமும் முதலாளிகளும் லஞ்சப்பணம், கள்ளப்பணம், கறுப்புப்பணம் இன்னபிற ஊழல் பணத்தை இரகசியமாக சேமிப்பதற்கு நம்பிக்கையான வங்கிகளைக் கொண்ட அந்த சுவிட்சர்லாந்து.

உலகக்கோப்பை மற்றும் இன்ன பிற சர்வதேச போட்டிகளை நடத்தும் ஃபிபா ஒரு வெறும் விளையாட்டுச் சங்கம் மட்டுமல்ல, பல்லாயிரம் கோடி ரூபாய் புரளும் பெரும் வர்த்தக நிறுவனமும் ஆகும். அதில் மோசடி செய்த பணத்தை காப்பாற்றுவதற்கென்றே சுவிட்சர்லாந்தில் பதிவு செய்திருக்கிறார்கள். மேலும் இந்தப் பதிவினால் ஃபிபா வெறும் 4.5% வர்த்தக வரி செலுத்தினாலே போதும். ஃபிபாவின் தலைவராக இருக்கும் ஸ்லெப் பிளெட்டர் இவரும் அந்த நாட்டைச் சேர்ந்தவர்தான். கடந்த எட்டாண்டுகளாக தலைமைப் பதவியில் இருக்கும் இவர் ஃபிபாவை மாபெரும் பணம் சுரக்கும் ஊற்றாக மாற்றியிருக்கிறார். 1930-ஆம் ஆண்டு முதல் ஃபிபா உலகக்கோப்பை போட்டிகளை நடத்தி வருகிறது.

1906-ஆம் ஆண்டு ஃபிபாவின் வருமானம் வெறும் 20,550 ரூபாய் மட்டுமே. ஒவ்வொரு உலகக் கோப்பையின் போதும் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மைதானம் முதலான கட்டுமானச் செலவுகளைப் பார்த்துக் கொள்ளுகின்றன. பன்னாட்டு - உள்நாட்டு நிறுவனங்கள் ஸ்பான்சர் தொகையாக பல்லாயிரம் கோடிகளைத் தருகின்றன. இது போக போட்டிகளை நேரடியாக ஒளிபரப்புவதற்கான உரிமத் தொகையாக பல்லாயிரம் கோடி ரூபாய் வருகின்றது.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் எவ்வித முதலீடோ, செலவோ இன்றி ஃபிபா கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகின்றது. 2002-ஆம் ஆண்டு உலகக் கோப்பையின் போது ஃபிபாவின் நிகர இலபாம் 1300 கோடி ரூபாயாகும். 2006-இல் செலவு போக 4,290 கோடி ரூபாய் வருவாய் வருமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இத்தொகையில் ஏழை நாடுகளின் சிறு நகரங்களில் பத்து இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கால்பந்து மைதானம் உருவாக்குவதாக இருந்தால் 42,900 நகரங்களில் எளிய முறையில் மைதானத்தைக் கட்டமுடியும்.

ஆனால், ஃபிபாவோ கால்பந்தை வளர்ப்பதற்குப் பதில் காசை அள்ளுவதிலும் மோசடி செய்வதிலும் குறியாக இருக்கிறது. அப்படி சமீபத்தில் ஒரு ஊழல் விவகாரம் அம்பலமாயிருக்கிறது. ஐ.சி.எல் எனப்படும் ஃபிபாவின் பினாமி நிறுவனம் ஸ்விட்சர்லாந்தில் இருக்கிறது. இதற்கு ஃபிபாவின் கால்பந்துப் போட்டிகளினால் வரும் வர்த்தக நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. கட்டணச் செலவாக 1,500 கோடி ரூபாயும் தரப்பட்டது. இறுதியில் ஐ.சி.எல் திவால் என அறிவிக்கப்பட அத்தனை ரூபாயும் சுருட்டப்பட்டது. இதில் ஃபிபாவின் அதிகார வர்க்கம் மோசடி செய்துள்ளதை பி.பி.சி. தொலைக்காட்சியின் பனோரமா நிகழ்ச்சி சமீபத்தில் அம்பலப்படுத்தியுள்ளது. ஃபிபாவின் தலைவரோ இதை ஒரு அறிக்கையில் பொய்யென மறுத்து விட்டு தன் வேலையைச் செவ்வனே செய்து வருகிறார்.

•

கூட்டமாக அமர்ந்து பார்க்கும் தொழிலாளிகள்...

கால்பந்தின் நினைவுகளில் தோய்ந்து எழும் படிமங்கள் கவித்துவமானவை. இந்தக் கவித்துவம் போட்டியை நேரடி ஒளிபரப்பில் அதிக மக்கள் பார்க்கிறார்கள் என்பதிலிருந்து எழவில்லை. உலகமக்களில் பெரும்பான்மையினர் இன்னமும் கால்பந்தைக் காதலிக்கிறார்கள் என்பதே அதன் தோற்றுவாய்.

1954-ஆம் ஆண்டு உலகக் கோப்பையை ஜெர்மனி வெல்லும் போது தொலைக்காட்சி இல்லை. இன்று வரையிலும் உலகின் தலைசிறந்த மாஜிக் அணி என்று போற்றப்படும் 1958-ஆம் ஆண்டின் பிரேசில் அணியில் பீலே, தீதி, கார்ரின்ச்சா முதலான வீரர்களின் ஆட்டத்தை வானொலியில் மட்டுமே கேட்க முடிந்தது. அந்தப் புகழ்மிக்க ஆட்டத்தின் துடிப்பை ஸ்பானிய வருணணையாளர்கள் உரையில் கொண்டு வந்தார்கள்.

1970-இல் மெக்சிகோவில் நடந்த உலகக் கோப்பையின் போதுதான் தொலைக்காட்சி வந்தது. பொருளாதாரத்தில் பிரிந்திருந்த முதல் உலகமும் மூன்றாம் உலகமும் கால்பந்தில் சேருவதற்கான வாய்ப்பை 80-களில் உலகமயமும் செய்தி - விளையாட்டு ஊடகங்களும் உருவாக்கின. ஆனால் இந்த வாய்ப்பு கால்பந்து என்ற விளையாட்டை வளர்ப்பதற்கு அல்ல, அதைச் சந்தையில் விலைபேசும் பண்டமாக மாற்றுவதற்கே பயன்பட்டது.

இன்று உலகக் கோப்பை என்பது திறமையும் துடிப்பும் கொண்ட தென் அமெரிக்க - ஆப்பிரிக்க இளம் வீரர்களை ஐரோப்பாவின் தனியார் கிளப்பைச் சேர்ந்த தரகர்கள் அடையாளம் காணும் மாட்டுச் சந்தையாக மாறிவிட்டது. இரசிகர்கள் தேசப்பற்றுடன் கூச்சலிடும்போது வீரர்கள் தங்கள் திறனை அடையாளப்படுத்துவதில்தான் அக்கறை காட்டுகிறார்கள்.

கால்பந்தில் ஒரு அணியின் வலிமையான துடிப்பான ஒற்றுமையில் தான் ஒருவர் கோல் போட முடியும். அதனால் கோல் போட்டதன் பெருமை பல வீரர்களின் ஒருங்கிணைந்த ஆட்டத்தின்பால் சேரும். இன்றோ கோல் போடுபவர் மட்டுமே நட்சத்திர வீரர் என்று தொலைக்காட்சியும் ஸ்பான்சர் நிறுவனங்களும் இலக்கணத்தை மாற்றிவிட்டன. அதனால் பல வீரர்கள் தாங்கள் மட்டுமே கோல் போடவேண்டும் என்று நினைப்பதால் பலவாய்ப்புகள் வீணடிக்கப்பட்டு அந்த அணிகள் சுயநலத்தின் விளைவைச் சந்திக்கின்றன. இப்படி ஒவ்வொரு வீரரும் நட்சத்திர வீரராக மாறுவதில்தான் கவனம் செலுத்துகிறார்.

தன் நாட்டுக்காக ஆடுவதில் அவர் பெருமைப்படுவதில்லை. மாறாக தன் நாட்டுக்காக ஆடுவதற்கான வாய்ப்பை வைத்து ஐரோப்பாவின் புகழ் பெற்ற மான்செஸ்ட்ர் யுனைடெட், செல்சியா, லிவர்போல், ரியல் மாட்ரிட், பார்சிலோனா, ஏ.சி.மிலன் முதலான பணக்கார கால்பந்து கிளப்புக்ளில் விளையாடி கோடிசுவரனாக மாறவேண்டும். அப்படி நட்சத்திர வீரராக நிலைபெற்ற பிறகு பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பர தூதராக கோடிகளை சம்பாதிக்க வேண்டும் என்பதே இந்த வீரர்களின் லட்சியம்.

விளையாட்டில் கால்பந்து மட்டுமே சர்வதேசப் பிரபலத்தைக் கொண்டிருப்பதால் பன்னாட்டு நிறுவனங்களும் இந்த நட்சத்திரங்களை உருவாக்கி விற்பதில் முனைப்பாக

www.padippakam.com

# கோல் போடாமலேயே வென்றது அடிடாஸ்

சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனத்தைத் தனது விளம்பரக் கம்பெனியாகவே மாற்றி விட்டது அடிடாஸ் என்கிறார்கள். ஷூ மற்றும் விளையாட்டு உடை உபகரணங்களைத் தயாரிக்கும் ஜெர்மனியைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனம்தான் அடிடாஸ். இந்நிறுவனம் இந்தப் போட்டிக்கென்றே ஜோஸ்+10 என்ற விளம்பரத்தைத் தயாரித்திருக்கிறது.

இதில் மாநகரச் சேரியின் தெருவொன்றில் ஜோஸும் அவனது நண்பர்களும் கால்பந்து விளையாடுகிறார்கள். தத்தமது அணிக்கு உலகின் பிரபலமான கால்பந்து வீரர்களை அழைக்கிறார்கள். வீரர்களும் வந்து ஆடுகிறார்கள். ஜோஸின் தாயார் "விளையாடியது போதும் வீட்டுக்கு வா" என்று அவனை சத்தம் போடுகிறாள். "முடியாதது ஒன்றுமில்லை" என்ற தத்துவ விளக்கத்துடன் முடியும் இந்த விளம்பரம் இந்தி உட்பட பல பத்து உலகமொழிகளில் ஒளிபரப்பப்படுகிறது.

அர்ஜெண்டினா, ஜெர்மனி உட்பட முக்கியமான ஆறு அணிகளின் உடை, உபகரணங்களையும் அடிடாஸ் ஸ்பான்சர் செய்திருக்கிறது. இதே போன்று நைக் நிறுவனம் 8 அணிகளுக்கும், பூமா நிறுவனம் 12 அணிகளுக்கும் உபயம் அளித்திருக்கின்றன. இதில் கேலிக் கூத்து என்னவென்றால் போட்டி நடுவர்களின் உடையைக்கூட அடிடாஸ்தான் அளித்திருக்கிறது.

ஆக உலகப்போட்டி ஓடுவது இந்தச் செருப்புக் கம்பெனிகளின் கைங்கர்யம் என்றாகி விட்டது. மேலும் அடிடாஸ் நிறுவனம் இந்தப் போட்டியை வைத்து ஒரு கோடி கால்பந்துகள், 10 இலட்சம் ஜோடி பிரிடேட்டர் ஷூக்கள், 5 இலட்சம் ஜெர்மன் அணிச் சட்டைகள் விற்பதற்கு இலக்கு தீர்மானித்திருக்கிறது. அவ்வகையில் சென்ற ஆண்டை விட 37% நிகர லாபம் அதிகரிக்குமாம். மொத்தத்தில் அடிடாஸின் கால்பந்து தொடர்பான விற்பனை இவ்வாண்டு மட்டும் 6600 கோடியைத் தொடும். இதே தொகையில் ஏழை நாடுகளின் பள்ளிக்கூடங்களுக்கு தலா 10000 ரூபாய் மதிப்பிலான குறைந்தபட்ச விளையாட்டு உபகரணங்கள் அளிப்பதாக வைத்துக் கொண்டால் சுமார் 66 இலட்சம் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கலாம்.

இருக்கின்றன. இன்று கால்பந்தைக் கட்டுப்படுத்துவது இந்த தனியார் கிளப்புகளும், பன்னாட்டு நிறுவனங்களும்தான்.

இங்கிலாந்து அணியின் தலைவர் டேவிட் பெக்காமின் சொத்து மதிப்பு மட்டும் 600 கோடி. ரியல் மாட்ரிட் கிளப்புக்காக ஆடும் பிரான்சின் ஜிடேனின் வார ஊதியம் 75,000 பவுண்டுகள், பிரேசிலின் ரொனால்டோவின் வாரஊதியம் 60,000 பவுண்டுகள். நல்ல மாடுகளைப் புகழ்பெற்ற மாட்டுச் சந்தைகளில் தேடிப் பிடித்து வாங்குவதைப் போல பல ஐரோப்பிய கிளப்புகள் தென்னமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் பல 'மாட்டுத் தரகர்களை' வைத்திருக்கின்றன.

இந்த இரு கண்டங்களைச் சேர்ந்த 5000 வீரர்கள் தற்போது ஐரோப்பிய கிளப்புகளுக்காக விளையாடி வருகிறார்கள். மூன்றாம் உலகம் மாடுகளை ஏற்றுமதி செய்கிறது. முதல் உலகம் மஞ்சுவிரட்டு நடத்தி சம்பாதிக்கிறது. ஐரோப்பாவில் தேசிய உணர்வைவிட கிளப் உணர்வு அதிகம். அதனாலேயே ஃபிபா உலகக் கிளப் கோப்பைக் கால்பந்துப் போட்டியையும் நடத்துகிறது.

ஆரம்பத்தில் இந்தக் கிளப்புகள் விளையாட்டு ஆர்வத்திற்காக துவங்கப்பட்டு தற்போது ஆண்டுக்கு பல நூறு கோடிகள் சம்பாதிக்கும் பன்னாட்டு நிறுவனங்களாக மாறிவிட்டன. இவற்றின் பங்குகள் பங்குச் சந்தையில் விற்கப்படுகின்றன. நட்சத்திர வீரர்களின் விற்பனைக்கேற்ப பங்கு விலை உயரும். பலதொழிற்துறை, ஊடக முதலாளிகளும் அரசியல்வாதிகளும் இந்தக் கிளப்புகளை நடத்தி வருகின்றனர்.

தற்போது பல உலகநாடுகளில் உள்ள கால்பந்தை நேசிக்கும் ஏழ்மையான கிளப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு விட்டன. லத்தீன் அமெரிக்க ஏழைமக்கள் வாழும் சேரிகளிலிருந்து மட்டும்தான் வீரர்கள் கிடைக்கிறார்கள் என்ற அளவில் அவர்களுக்கு ஏழ்மை தேவைப்படுகிறது.

நட்சத்திர வீரர்கள், கிளப்புகள், பன்னாட்டு நிறுவனங்கள் இவர்களுக்கிடையே கால்பந்தின் ஆதாயத்தை பங்கிட்டுத் தரும் வேலையினை ஃபிபா ஒரு அரசு போல செய்து வருகிறது. பழைய மிட்டாமிராசுகள் காளைகளையும், குதிரைகளையும் வளர்த்து பெருமை காண்பிப்பார்கள். நவீன முதலாளிகளோ கால்பந்து அணியினை பெருமைக்காகவும் வருவாய்க்காகவும் வளர்க்கிறார்கள்.

கால்பந்தில் வர்த்தகம் விளையாட ஆரம்பித்த சில வருடங்களிலேயே ஊழலும் விளைய ஆரம்பித்து விட்டது. நட்சத்திர வீரர்களை வாங்கி விற்பதில் ஊழல், போட்டியின் முடிவுகளை முன்கூட்டியே தீர்மானித்து மோசடி செய்தல் என்று ஐரோப்பிய கால்பந்து கிளப்புகளின் ஊழல் புராணம் மேற்குலகின் ஊடகமே தாங்க முடியாத அளவில் நாறி வருகிறது. இதில் விளையாட்டு எங்கே இருக்கிறது? கால்பந்தில் வணிகமயமாக்கம் நடந்தேறிய பிறகு விளையாட்டு தொலைந்து போனது குறித்து மேற்குலகின் அறிவுஜீவிகள் வருத்தப்படுகிறார்கள். கடிவாளம் கை மாறிய பிறகு குதிரை குறித்து நொந்து என்ன பயன்?

ஒரு கிளப்புக்கு ஒரு நட்சத்திர வீரர் எப்போது வருவார், எவ்வளவு காலம் இருப்பார் என்பது அந்த கிளப்பின் பயிற்சியாளருக்குக்கூடத் தெரியாது. இப்படி "பல நாடுகளைச் சேர்ந்த, பல மொழி, பண்பாட்டு பின்புலமுள்ள வீரர்களை ஒரு அணியாக்கிப் பயிற்சியளித்து விளையாட வைப்பது ஒரு சர்க்கஸ் கம்பெனி நடத்துவது போல இருக்கிறது என்று சலித்துக் கொள்கிறார் ஒரு பயிற்சியாளர்.

ஆனால் பன்னாட்டு நிறுவனங்களுக்கு கால்பந்து ஒரு சர்க்கஸ் போல இருப்பதே போதுமானது. இரசிகர்கள் முன்னால் நட்சத்திர வீரர்கள் தோன்ற வேண்டும். ஏதோ ஒன்றிரண்டு கோல்கள் போட வேண்டும். இப்படி விளையாட்டில் மட்டுமல்ல இரசனையிலும் தரம் மிகவும் கீழே இறங்கிவிட்டது.

**தற்போது பல உலகநாடுகளில் உள்ள கால்பந்தை நேசிக்கும் ஏழ்மையான கிளப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு விட்டன. லத்தீன் அமெரிக்க ஏழை மக்கள் வாழும் சேரிகளிலிருந்து மட்டும்தான் வீரர்கள் கிடைக்கிறார்கள் என்ற அளவில் அவர்களுக்கு ஏழ்மை தேவைப்படுகிறது.**

www.padippakam.com

## கால்பந்து குறித்த கவித்துவமான நினைவுகளில் எது எஞ்சி நிற்கிறது? இன்றைய உலகமயச் சூழலில் கால்பந்து என்ற விளையாட்டு பன்னாட்டு நிறுவனங்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. இதில் ஒரு உண்மையான இரசிகர் என்ற முறையில் நாம் என்ன செய்வது?

தற்போதைய உலகக் கோப்பைக்காக ஜெர்மனி வந்துள்ள இரசிகர்கள் விளையாட்டு பார்க்க மட்டுமல்ல மாபெரும் கேளிக்கைக்காகவும் வந்துள்ளனர். இவர்களுக்காக கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 40,000 விலைமாதர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர். முன்னர் சோவியத் யூனியனிலிருந்தும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளிலிருந்தும் தரமான விளையாட்டு அணிகள் வந்தன. தற்போதைய உலகக் கோப்பைக்காக ரசியாவிடமிருந்து கூட அணி வரவில்லை. ஆனால் விலைமாதர்கள் தடையின்றி வருகின்றனர். சோசலிசத்தை வென்ற முதலாளித்துவம் உலகிற்கு அளித்திருக்கும் கொடை இதுதான்! இப்படி ரசிகர்கள் பீரைக் குடித்து, செக்சில் மூழ்கி, கால்பந்தையும் இரசிக்கிறார்கள்.

இப்படிக் கால்பந்தை சீரழித்த பன்னாட்டு நிறவனங்களின் தெரியாத முகம் ஒன்றும் உள்ளது. உலகக் கால்பந்தின் 60% பாகிஸ்தான் நாட்டில் சியால்கோட் எனும் நகரில் தயாராகிறது. சுமார் 2000 பட்டறைகளில் சுமார் 40,000 கொத்தடிமைத் தொழிலாளிகள் அற்பக் கூலிக்காக கால்பந்துகளை தைத்து வருகின்றனர். அடிடாஸ், நைக், பூமா போன்ற பிரபலமான விளையாட்டு கம்பெனிகள் அனைத்தும் இங்கேதான் கால்பந்துகளைத் தயாரிக்கின்றன. நாளொன்றுக்கு சுமார் 50 ரூபாய் மட்டும் கூலி கொடுத்து கொடூரமாகச் சுரண்டிதான் இந்த நிறுவனங்கள் கோடிகோடியாய்க் கொள்ளையடிக்கின்றன.

கால்பந்து குறித்த சோகக்கதையில் இந்திய சோகத்தை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம். இந்தியா உலகக் கால்பந்து நாடுகளின் தரவரிசையில் 117 ஆவது இடத்தில் சோம்பேறித்தனமாக அமர்ந்திருக்கிறது. 'வாழைப்பழக் குடியரசு' என்று கேலி செய்யப்படும் மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து டிரினிடாட் மற்றும் டுபாக்கோ என்ற பத்து இலட்சம் மக்கள் தொகை கொண்ட நாடு கூட உலகக் கோப்பைக்காக தனது அணியை அனுப்பியிருக்கிறது. ஆனால் 100 கோடி மக்கள் தொகையில் ஒரு 11 பேரைக் கூட தயார் செய்ய முடியவில்லை.

இதுவும் விளையாட்டு குறித்த பிரச்சினையல்ல, இந்தியாவில் ஜனநாயகம் என்ன தரத்தில் இருக்கிறதோ விளையாட்டும் அந்த தரத்தில்தான் இருக்கும். ஆனால் வர்த்தகத் தரம் அந்த அளவுக்கு மோசமில்லை. இ.எஸ்.பி.என் விளையாட்டு தொலைக்காட்சி நிறுவனம் உலகக் கோப்பைப் போட்டிகளை இந்தியாவில் ஒளிபரப்ப சுமார் 55 கோடி ரூபாய் அளவுக்கு விளம்பரங்களைப் பிடித்திருக்கிறதாம். சென்றமுறை டென் ஸ்போர்ட்ஸ் பத்து கோடிக்குத்தான் வர்த்தகம் செய்தது எனும் போது இது ஐந்து மடங்கு வளர்ச்சி!

இப்போது சொல்லுங்கள், 'கால்பந்து குறித்த கவித்துவமான நினைவுகளில் எது எஞ்சி நிற்கிறது? இன்றைய உலகமயச் சூழலில் கால்பந்து என்ற விளையாட்டு பன்னாட்டு நிறுவனங்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. இதில் ஒரு உண்மையான இரசிகர் என்ற முறையில் நாம் என்ன செய்வது?

நாமும் விளையாட வேண்டும். விளையாட்டு மைதானத்தில் அல்ல, அரசியல் களத்தில். சர்வதேச பாட்டாளி வர்க்க அணியில் சேர்ந்து உலக முதலாளித்துவத்தை எதிர்த்து ஆடும் ஆட்டத்தின் இறுதியில் நாம் கால்பந்தை மட்டுமல்ல, ஏனைய விளையாட்டுக்களையும் மீட்க முடியும். மனித குலம் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள கண்டெடுத்து வளர்த்த விளையாட்டுணர்வுக்குப் பொருத்தமான பொற்காலம் அப்போது, அப்போது மட்டுமே நிலவ முடியும்.

● இளநம்பி

### கால்பந்து: நவீன கிளேடியட்டருக்கு பல்லாயிரம் கோடி கேளிக்கைச் செலவு

பண்டைய ரோமபுரி ஆட்சியில் மக்களைக் கேளிக்கையில் மூழ்க வைக்க - கிளேடியட்டர் எனப்படும் அடிமைகளை சாகும் வரை சண்டையிட வைப்பார்கள். வருடம் முழுவதும் நடக்கும் இந்தப் போட்டிகளுக்காக நகரின் மத்தியில் பிரம்மாண்டமான மைதானத்தை பெருஞ்செலவு செய்து கட்டுவார்கள். தற்போது கால்பந்து போட்டிகளும் ஏறக்குறைய அப்படி மாற்றப்பட்டு விட்டன.

2002-இல் ஜப்பானும் கொரியாவும் சேர்ந்து நடத்திய உலகக் கோப்பை மொத்த ஆட்டங்களையும் பார்த்த மக்களின் கூட்டுக் கணக்கு 3,000 கோடியாகும். இந்தப் போட்டிக்காக இரு நாடுகளும் மைதானங்கள் கட்டுவதற்காக மட்டும் 35,000 கோடி ரூபாயைச் செலவழித்தன. இதே தொகையை ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் குடிசைமாற்று வாரிய வீட்டைக் கட்டுவதாக இருந்தால் 35 இலட்சம் வீடுகளைக் கட்டலாம். அதாவது ஒன்றரைக் கோடி மக்களுக்கு வீடு கிடைக்கும். அல்லது சென்னை மாநகரைப் போன்று மூன்று மாநகரங்களைக் கட்டலாம்.

இவ்வாண்டு உலகக் கோப்பையை நடத்தும் ஜெர்மனி இதற்காக செலவழித்த தொகை 10,000 கோடி ரூபாயாகும். இதே தொகையில் ஐந்து வகுப்பறை கொண்ட ஒரு ஆரம்பப் பள்ளியை ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதாக இருந்தால் சுமார் இரண்டு இலட்சம் பள்ளிகளைக் கட்டலாம்.

இப்படி மைதானம் கட்டுவதற்காக பல்லாயிரம் கோடி செலவழிப்பதால் இந்தப் போட்டிகளை நடத்தும் நாடுகளுக்கு என்ன பயன் என்று கேட்கலாம். கட்டுமானத் தொழில், ஓட்டல், உணவக விடுதிகள், சுற்றுலா, விபச்சாரம், சிறுவர்த்தகம் என்று பல வழிகளில் இந்நாடுகளுக்கு வருமானம் வருகிறது.

ஜெர்மனியில் நடக்கும் போட்டியைக் காண மட்டும் சுமார் 30 இலட்சம் இரசிகர்கள் வந்து போவார்கள் என மதிப்பிடப்படுகிறது. இவர்கள் போட்டி நடக்கும் ஒரு மாதத்திற்கு தினசரி 3,000 ரூபாய் செலவழித்தால் ஜெர்மனியின் இலாபம் என்ன வென்று தெரியவரும்.

www.padippakam.com

# இட ஒதுக்கீடு எதிர்ப்பு: ஆகாவென்றெழுந்தன பார், தவளைகள்!

*“நான் டெல்லியின் பிரபலமான தொரு பள்ளியில் படித்தேன். 12-ஆம் வகுப்பு முடியும் வரை எனக்கு, நாம் நம்முடைய சாதியினால் அடையாளம் காணப்படுகிறோம் எனத் தெரியாது. மருத்துவக் கல்லூரியில்தான் சாதி எனும் நச்சுப் பாதையில் நான் நுழைக்கப்பட்டேன். அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அதன்பிறகு திறமை அனைத்தையும் தீர்மானிக்கும். நலிந்த பிரிவினருக்குத் தேவைப்படுவது நல்ல பள்ளிகள்தானேயன்றி, இட ஒதுக்கீடு போன்ற சலுகைகளல்ல.*

*சமீபத்திய பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டின் மூலம் மாணவர் சமூகத்தைப் பிரிக்க முயன்ற அரசின் முயற்சிகள் எங்களிடம் ஒரு ஆழமான காயத்தை உண்டாக்கி விட்டன. என் கல்லூரியில் படிக்கும் 120 மாணவர்களில் உள்ள 80 முற்பட்ட சாதி மாணவர்களும் எம்.பி.பி.எஸ். முடித்தவுடன் வெளிநாடு சென்றுவிட முடிவெடுத்திருக்கிறோம்.*

*இது எங்கள் நாடே அல்ல என்பது போல் நாங்கள் நடத்தப்படுகிறோம். இன்றைய இந்தியாவில், மேல்சாதிக் குடும்பத்தில் பிறப்பது ஒரு குற்றமாகி விட்டது.”*

- அபிஷேக் பன்சல், எம்.பி.பி.எஸ். மாணவர், 'சமத்துவத்திற்கான இளைஞர்கள்' அமைப்பின் துவக்க உறுப்பினர். (வீக் ஆங்கில வார இதழில்)

12-ஆம் வகுப்பு முடியும் வரை இந்த நாட்டில் சாதி என்ற ஒன்று இருப்பதே தெரியாமல் வளர்ந்த இந்த 'பரிதாபத்திற்குரிய' கான்வென்டுத் தவளையைப் போன்ற தவளைகளின் ஒப்பாரி, கடந்த இரு மாதங்களாக தொலைக்காட்சிப் பெட்டிகளின் வாயிலாக நாட்டையே செவிடாக்குமளவிற்குப் பேரிரைச்சலாய் ஒளிபரப்பப்பட்டது.

இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி), இந்திய மேலாண்மைக் கழகம், இந்திய அறிவியல் கழகம், 20 மையப் பல்கலைக் கழகங்கள், ஆறு மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில், பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் அறிவித்த நாளிலிருந்து கூச்சலும், கூப்பாடும் ஆரம்பமானது. அர்ஜுன் சிங் அங்கிள் ரொம்ப மோசம், நாங்கள் மன்மோகன் சிங் அங்கிளிடம் பேச வேண்டும் என்று அடம் பிடித்தன 'காம்ப்ளான்' குழந்தைகள். அப்படி இப்படி இழுத்து, பிறகு, மன்மோகன் அங்கிளும் மேலோட்டமாய்க் கைவிரித்து விட, 'சமத்துவத்திற்கான இளைஞர்கள்' என்ற பெயரில் டெல்லி, மும்பை முதலிய மாநகரங்களின் மேல்சாதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள், இடஒதுக்கீடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் துவங்கினார்கள். மும்பையில் நடந்த ஒரு ஆர்ப்பாட்டத்தில் போலீசு தடியடி நடத்தியது. சூடு பிடிக்கும் வகையில் விற்கக் கூடிய விசயம்தான் என்பதாலும், தங்கள் சொந்த வர்க்க-சாதிப் பாசத்தாலும், என்.டி.டி.வி, சி.என்.என் - ஐ.பி.என் முதலான ஆங்கில செய்தித் தொலைக்காட்சிகள், வெறியோடு உருமி அடிக்கத் துவங்கியதில் ஆகாவென்றெழுந்தன ஆவேசமுற்ற தவளைகள்.

**சமமானவர்களுக்கு இடையில்தானே சமமான போட்டி நிலவ முடியும் என நாம் சொன்னால், ‘உலகம் தெரியாதவன்’ என அவர்கள் சிரிக்கக் கூடும். ஏனெனில், இந்தச் சமமான போட்டிக்கான சமத்துவக் கோட்பாட்டில்தான் உலகமயமே அடங்கி இருக்கிறது. அது எப்படிப்பட்ட சமமான போட்டி? கோகோ கோலாவோடு காளிமார்க் சோடா மோதும் சமமான போட்டி.**

அகில இந்திய மருத்துவக் கழக மருத்துவர்களும், தரகு முதலாளிகளும், பத்திரிக்கைகளும், தகவல் தொழில்நுட்ப ஊழியர்களும் ஜோதியில் கலக்க, டெல்லியில், உண்ணாவிரதம் துவங்கியது. இடஒதுக்கீடு அமலுக்கு வந்தால், தாங்கள் செருப்பு தைக்கத்தான் போக வேண்டும் என்பதாக, ஷூ பாலிஷ் போடுதல், தரையைக் கூட்டுதல் போன்ற 'போராட்டங்களை' நிகழ்த்தினார்கள். தற்கொலைக்கு அனுமதி கேட்டு குடியரசுத் தலைவரிடம் மனு கொடுத்தார்கள் 'போராளிகள்'. இறுதியில் பதினெட்டுப் பட்டிக்கும் நாட்டாமை சுப்ரீம் கோர்ட்டு, மருத்துவர்களை வீட்டுக்கு அனுப்பலாம் என செல்லமாய் கடிந்து கொண்ட பின்னால் தான் ஆரவாரம் அடங்கியது.

இதுநாள் வரை யார் போராடுகிறார்கள், எதற்காகப் போராடுகிறார்கள் என்பது குறித்து சிறிதும் அக்கறையின்றி 'போக்குவரத்துக்கு' இடையூறு பண்ணுவதாக தொழிலாளர்களின் ஊர்வலத்தை சகட்டுமேனிக்கு திட்டித் தள்ளியவர்கள், தாங்கள் ரகளை செய்த பொழுது, ஊரே ஸ்தம்பிக்க வேண்டுமென்று குட்டிக்கரணம் போட்டார்கள்.

இவற்றையெல்லாம் மீறி, இப்போராட்டம் பிசுபிசுத்துப் போனதற்குக் காரணம், 1990 மண்டல் எதிர்ப்பில் முன்நின்ற மேல்சாதிக் கட்சிகளான காங்கிரசும், பா.ஜ.க.வும் தற்பொழுது அடக்கி வாசிப்பதுதான்.

தென்மாநிலங்களில் திராவிட அரசியல் காரணமாக, தமிழகத்தில் 69 சதவிகிதமும், ஆந்திரத்தில் 49.5, கர்நாடகம் மற்றும் கேரளாவில் 50 என மாநில கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்ட போதும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக மத்திய உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு அமல்படுத்தப்படவில்லை. இந்த இடஒதுக்கீடு எதிர்ப்பு ஆரவாரத்தின் விளைவாக, தற்போதைய இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமென்றும், எனவே மேல்சாதி மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்களென்றும், 2007 ஜூன் முதல் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இடஒதுக்கீட்டின் அடிப்படையையே கேலிக் கூத்தாக்கும் இம்முயற்சியை எதிர்க்காமல், சமூகநீதிக் கட்சிகள் மவுனம் காக்கின்றன.

கடந்த ஐம்பதாண்டுகளில், இந்த நாட்டில் 'இடஒதுக்கீடு' மக்கள் மன்றத்



படிப்பகம்

www.padippakam.com

தில் விவாதிக்கப்பட்ட அளவிற்கு, வேறு எந்த தலைப்பும் விவாதிக்கப்பட்டதில்லை. மாற்றுக் கருத்துக்களை விவாதிக்கும் ஜனநாயகம், காஷ்மீர் பிரச்சினை, நக்சல்பாரி எழுச்சி, இசுலாமியர் மீதான வன்கொடுமைகள் உள்ளிட்ட வேறு எந்தத் தலைப்பிற்கும் 'வழங்கப்பட்டதில்லை'. ஆயினும் கூட புளித்துப் போன 'தகுதி, திறமை, சமத்துவ'வாதங்கள் மீண்டும் மீண்டும் மேல்சாதி உயர் நடுத்தர வர்க்கத்தால் முன்வைக்கப்படுகின்றன.

இந்தத் திடீர் சோசலிசத் தவளைகளின் வாதத்தின் சாரம் இதுதான்:


''அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் 'தகுதி'யின் அடிப்படையிலான, சமமான போட்டியின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். தகுதியின் அடிப்படையில் வாய்ப்புகள் வழங்கப்படாவிட்டால், கல்வியின் தரம் குறைந்து, திறமையற்றவர்கள் உருவாகி விடுவார்கள்.''

சமமானவர்களுக்கு இடையில்தானே சமமான போட்டி நிலவ முடியும் என நாம் சொன்னால், 'உலகம் தெரியாதவன்' என அவர்கள் சிரிக்கக் கூடும். ஏனெனில், இந்தச் சமமான போட்டிக்கான சமத்துவக் கோட்பாட்டில்தான் உலகமயமே அடங்கியிருக்கிறது. அது எப்படிப்பட்ட சமமான போட்டி? கோகோ கோலாவோடு காளிமார்க் சோடா மோதும் சமமான போட்டி. சாரத்தில் அமெரிக்கா இராக்கிற்கு வழங்கிய 'ஜனநாயகத்தைப்' போன்றது அம்பிகள் முன்வைக்கும் 'சமத்துவம்'.

2000 ஆண்டுகளாக பிறப்பின் அடிப்படையில் 'தகுதி' தீர்மானிக்கப்பட்ட நாட்டில், இன்று 'தகுதி', மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டும் இருக்க வேண்டுமாம். சமமான போட்டியின் அடிப்படையில் இருக்க வேண்டுமாம்.

இவர்கள் மூச்சு வாங்கப் புலம்புவதென்ன? இவர்களை விட ஐந்து மார்க் குறைத்து வாங்கியவர், சாதி அடிப்படையில் சீட் பெறுகிறார் என்றால் அங்கே தகுதி அடிபடுகிறதாம். ஆனால், இவர்களை விட ஐம்பது மார்க் குறைத்து வாங்கியவர், சில லட்சங்களைக் கொடுத்து சீட் வாங்கினால் அது மட்டும் தப்பில்லையாம். 'தகுதி'யைத் தூக்கிப் போட்டு மிதிக்கும் நிர்வாக ஒதுக்கீட்டு முறையைப் பற்றி மட்டும் இவர்கள் மறந்தும் வாய் திறப்பதில்லை. 2 லட்சம் கொடுத்து, ஒரு எருமை மாட்டைச் சேர்த்து விட்டால் கூட, அதையும் வகுப்பில் உட்கார வைத்து, பாடம் நடத்தி பட்டம் வாங்கித் தரக்கூடிய தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் பகற்கொள்ளையைக் குறித்து இவர்கள் யாரும் இப்படி இரத்தம் கொதிக்கக் குமுறுவதில்லை. ஏனெனில் அதுவும் கூட இவர்களுடைய தகுதிகளில் ஒன்றுதான். வரி கட்டுவதால் இவர்களுக்கு தேசபக்தி வருவதைப் போல, காசுக்கு வாங்கினால்தான் கல்வி தரமாக இருக்கும் என்பதும் இவர்களது நம்பிக்கை. எனவே, கல்வியின் மேம்பாட்டிற்காக அல்ல, மனதில் கமழும் மேல் சாதிய வன்மம் தான் இவர்களை இவ்வாறு வெறி கொள்ளச் செய்கிறது. சூத்திரனும், பஞ்சமனும் பிறவியிலேயே அறிவற்றவர்கள் என்ற மனுதர்மத் திமிர்தான் இவர்களது 'அறவியல்' ஆவேசத்தின் ஆதார சுருதி.

மேலும், மத்திய உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எய்ம்ஸ் போன்றவை நாட்டிலேயே தலைசிறந்த வல்லுனர்களை உருவாக்குபவை. அதாவது ஆகமக் கோவில்களைப் போல ஆகப் புனிதமானவை. எனவே, அங்கே 'தரத்தில்' பேச்சுக்கே இடமில்லை என்கிறார்கள். அது ஏன் அங்கே மட்டும் பேச்சுக்கே இடமில்லாத 'தரம்' நிலவ வேண்டும்? மக்களின் வரிப்பணத்தை கோடியாக கோடியாகக் கொட்டி நடத்தப்படும் ஐ.ஐ.டி.யிலும், ஐ.ஐ.எம்.மிலும் இருந்துதான் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கில் 'தரம் வாய்ந்த', 'திறமையான' பொறியாளர்களும், மேலாண்மைப் பட்டதாரிகளும் அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எய்ம்ஸ்-ல் படித்த தகுதி வாய்ந்த மருத்துவர்கள்தான் முடித்த கையோடு அமெரிக்காவிற்குப் பறக்கிறார்கள்.




சமூகத்தை அழிக்க பயங்கரவாதம் தேவையில்லையாம். அதை இடஒதுக்கீடே பார்த்துக் கொள்ளுமாம். திமிரி எழும் பார்ப்பனக் கொழுப்பு.

ஆய்வுகளின்படி 2001-இல் மட்டும் ஐ.ஐ.டி.யில் படித்த 25,000 பேர் அமெரிக்காவில் பணியாற்றி வந்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள இந்தியர்களில் 34 சதவிகிதம் பேர் ஐ.ஐ.டி.யில் படித்தவர்கள். 1980 வரை உள்ள கணக்கின்படி, எய்ம்ஸ்-ல் படிக்கும் மருத்துவர்களில் 85 சதவிகிதம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். ஆனால் மாநில நிறுவனங்களில், இடஒதுக்கீட்டில் படித்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மருத்துவர்களில் பலர், தங்கள் மண்ணோடும் மக்களோடும் தொடர்புடையவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆக, ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எய்ம்ஸ்-இல் இடஒதுக்கீடு வந்து, 'தரம்' குறைந்து விட்டால் என்னவாகும்? அமெரிக்க, ஐரோப்பிய எசமானர்களுக்குச் சேவை செய்வதற்கான வாய்ப்பை இந்தியக் கூலிப் பட்டாளம்

www.padippakam.com

**'தகுதி'யைத் தூக்கிப் போட்டு மிதிக்கும் நிர்வாக ஒதுக்கீட்டு முறையைப் பற்றி மட்டும் இவர்கள் மறந்தும் வாய் திறப்பதில்லை. 2 லட்சம் கொடுத்து, ஒரு எருமை மாட்டைச் சேர்த்து விட்டால் கூட, அதையும் வகுப்பில் உட்கார வைத்து, பாடம் நடத்தி பட்டம் வாங்கித் தரக்கூடிய தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் பகற்கொள்ளையைக் குறித்து இவர்கள் யாரும் இப்படி இரத்தம் கொதிக்கக் குமுறுவதில்லை.**

இழந்து விடும். மொத்தத்தில், தாங்கள் தேசத்துரோகம் செய்வதற்கான வாய்ப்பை இழந்து விடுவோம் என ஆதங்கப்படுகிறார்கள் மேல்சாதி இளைஞர்கள். நியாயமான கவலை தான் இல்லையா? சரி, 'இடஒதுக்கீடு வேண்டாம், ஆனால் படித்து முடித்த பிறகு குறைந்தபட்சம் 10 வருடம் இந்தியாவில்தான் வேலை செய்ய வேண்டும்' என்று சட்டம் கொண்டு வந்தால் என்னவாகும்? இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராளிகளெல்லாம் மறுநாளே இந்த நிறுவனங்களை விட்டு வெளியே வந்து விடுவார்கள். எனவே, இவர்கள் 'தரம், தராதரம்' என்பதெல்லாம் பகல் வேடம். அமெரிக்க, ஐரோப்பிய எடுபிடிகளாக வாழ்வதையே தங்கள் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு கட்டிய மனக்கோட்டைகளில் இடஒதுக்கீட்டினால் ஓட்டை விழுந்து விடுமோ என்ற பீதியில்தான் இவர்களது 'சமத்துவத்திற்கான வேட்கை' ஊற்றெடுக்கிறது.

மேலும் இத்தகைய இடஒதுக்கீடு திட்டங்களெல்லாம் ஓட்டு வங்கியை மனதிற்கொண்டு செய்யப்படும் அரசியல் என்று கூக்குரலிடுகிறார்கள். இவர்கள் ஓட்டுவங்கி என்று குறிப்பிடுவது, இவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அமெரிக்க வேலையும், ஹூண்டாய் கார்களும், பிட்சா கார்னர்களும், டிஸ்கொதேக்குகளும், ஷாப்பிங் மால்களும் நிரம்பிய உலகமய இந்தியாவில் நுழைய முடியாத இந்த நாட்டின் 83 சதவிகித மக்களைத்தான். தாங்கள் கனவு காணும், தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் 'ஒளிரும் இந்தியாவில்', தங்களுடைய பார்ப்பன ஆன்மாவிற்கும், தங்கள் பன்னாட்டு முதலாளிகளுக்கும் ஒத்து வராத அரசியல் அனைத்தும் இவர்களுக்கு ஓட்டுச் சீட்டு அரசியலாகப்படுகிறது. தங்கள் எசமானவர்களின் முன்னேற்றத்திலேயே தங்கள் முன்னேற்றம் அடங்கியுள்ளதை உணர்ந்த மேற்குலக அடிமைகள் இவர்கள். எனவேதான், தரம் இவர்களுடைய தாரக மந்திரமாகிறது.

அரசியல் என்ற சொல்லே இவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. அதனால்தான், அனைத்தும் அரசியலுக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும் என ஒவ்வோர் தருணத்திலும் இவர்கள் கதறுகிறார்கள். இந்த நாட்டின் பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுவது அரசியல் இல்லை. இந்த நாட்டின் நிலம், நீர், ஆகாயம் என அனைத்தும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு ஏலம் விடப்படுவது அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஆனால், இடஒதுக்கீடு மட்டும் அரசியலாம்!

சில 'அரசியலுக்கு அப்பாற்பட்ட' அறிவாளிகள், இடஒதுக்கீட்டின் பலன்கள் எல்லோரையும் சென்றடைவதில்லை என மடக்குகிறார்கள். ஏற்கெனவே அச்சலுகையை பயன்படுத்தி முன்னுக்கு வந்தவர்களே மீண்டும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எனவே, இடஒதுக்கீடு பொருளற்றதாகி விட்டதென்கிறார்கள். ஆனால், மேல்சாதிகளிலும் கூடத்தான் உயர்வர்க்க, செல்வாக்குடையவர்கள் ஆதிக்கம் நிலவுகிறது. இந்த நாட்டின் முக்கியப் பதவிகளில் வீற்றிருப்போர் பட்டியலை எடுத்துப் பாருங்கள், மேல்சாதிகளில் உள்ள உயர்வர்க்க கும்பல் அப்பதவிகளில் ஆக்கிரமித்திருப்பதை அறிய முடியும். வழங்கப்படும் நியாயத்தின் முழுமையை, பாதிக்கப்பட்டவர்கள்தான் ஆலோசிக்க வேண்டும். ஆனால், அதையும் கூட இவர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமாம். அது சரி, இவர்கள் பிறவியிலேயே அறிவாளிகளாயிற்றே!

இறுதியில் பார்ப்பன எழுத்தாளர் அசோகமித்திரனைப் போல, இந்த நாட்டில் பிறந்ததே குற்றம், மேல்சாதிக் குடும்பத்தில் பிறந்தது அதைவிடப் பெரிய குற்றம் என ஒப்பாரி வைக்கிறார்கள். ஐயன்மீர், உங்கள் சோபாக்களிலிருந்து எழுந்து சற்றே வெளியே வாருங்கள். நீங்கள் வியந்தோதும் உலகமயம் கடந்த பத்தாண்டுகளில் கோடிக்கணக்கான தொழிலாளர்களை வீதிக்கு வீசியெறிந்து விட்டது. ஆந்திராவில் மட்டும் 3000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மடிந்து விட்டார்கள். அவர்கள் குடும்பங்கள் நடுரோட்டில் நிற்கின்றன. இந்த நாட்டில் விவசாயியாகப் பிறந்த குற்றத்திற்காக குடும்பம் குடும்பமாக நாடோடியாக அலைகிறார்கள். அளவுக்கு மீறி வருத்தப்படாதீர்கள், திமிறிக் கொண்டிருக்கும் மக்கள் கண்ணில் பட்டால் உங்கள் கன்னங்கள் சிவந்து விடும்.

2006-இன் இடஒதுக்கீடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வழக்கமான மேல்சாதிக் கொழுப்பு என்று மட்டும் வரையறுக்க முடியாது. 1990 மண்டல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகான இப்பத்தாண்டுகளில் மேல்சாதிகளிலிருந்து உருவாகியுள்ள உலகமயத்தின் செல்லப் பிள்ளைகள், தங்களுடைய இருப்பை ஆணவத்தோடும், ஆவேசத்தோடும் உணர்த்த தலைப்பட்டுள்ளனர் என்பதையே தற்போதைய நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக, மும்பையில் நடந்த இடஒதுக்கீடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று, உயர் வர்க்க பார்ட்டிகளையும், நிறுவன கண்காட்சிகளையும் நிகழ்த்தும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் (event management company) பொறுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. போராட்டம் கூட 'புரொஃபசனலாக' (தொழில் திறமையோடு) நடத்தப்பட்டுள்ளது.

'தனியார்மயம், தாராளமயம், உலகமயம்' என்ற விவாதத்திற்கு அப்பாற்பட்ட மூன்று சொல் தாரக மந்திரம், இந்த நாட்டின் பெரும்பான்மை மக்

**மெல்ல வளர்ந்து இப்பொழுது, பார்ப்பனிய ஆன்மாவும், உலகமய முகமும் கொண்ட ஒளிரும் இந்தியா தலைவிரி கோலமாக ஆடிக் கொண்டிருக்கிறது. இக்கோர ஆட்டத்தை இரண்டாயிரம் வருடப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கிறார்கள் உண்மை இந்தியாவின் மக்கள். அந்தப் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாய் உடைபட்டுக் கொண்டிருக்கிறது.**


படிப்பகம்

www.padippakam.com

## எதிர்ப்பு அல்ல, வக்கிரம்!

'இடஒதுக்கீடு எதிர்ப்பு' என்ற பெயரில் பார்ப்பன மேல்சாதி வெறி மாணவர்கள் அடித்த வன்முறைக் கொட்டத்துக்கு சில மாதிரிகள் இதோ: இடம்: ஒரு மருத்துவக் கல்லூரி.

• வகுப்புக்குள் நுழையும் ஒவ்வொரு மாணவனையும் அவர்கள் தடுத்து நிறுத்துகிறார்கள். "நீ கோட்டா (Quota) மாணவனா?" என்று கேட்கிறார்கள். பலர் 'இல்லை' என்கிறார்கள். ஒருவரிடம் விசாரிக்கிற மாணவன், "டேய் நீ கோட்டா மாணவன்தான். பொய் சொல்றியே, எனக்குத் தெரியும்" என்று சொல்ல, மற்றவர்கள் அவனைப் பார்த்துக் கேலிசெய்து "ஹோ" என்று கத்துகிறார்கள்.

• வகுப்பறைக்குள் விரிவுரையாளர் நுழைகிறார். பல மாணவர்கள் கைகளில் கருப்புப் பட்டை அணிந்திருப்பதைப் பார்க்கிறார். உடனே அவர் அம்மாணவர்களைப் பார்த்துச் சொல்கிறார்: "அப்படீன்னா நீங்கள் எல்லா இடஒதுக்கீட்டையும் (கோட்டா) எதிர்க்கிறீங்க. சரி, ஒன்று செய்ங்க, எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி.யில ஒரு பொண்ண கல்யாணம் கட்டிக்குங்க, கோட்டா கெடச்சிடும்" என்று அந்த மாணவர்களைப் பார்த்து நமட்டுச் சிரிப்போடு சொல்கிறார். விரிவுரையாளரின் 'போதனை'யைக் கேட்ட ஒரு பெண் அருகிலிருந்த ஒரு எஸ்.சி. மாணவியைப் பார்த்துக் கேட்கிறாள்: "ஏய், உனக்கு ஒரு அண்ணன் இருந்தால் சொல்லுடீ, அவனைக் கட்டிக்கிறேன், எனக்கும் கோட்டா கிடைக்கும்."

• பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அவர்களது நண்பர்களிடமிருந்து நக்கலாக எஸ்.எம்.எஸ். செய்திகள் வந்து கொட்டுகின்றன: மாதிரிக்குச் சில: "ஓர் அறிவிப்பு: இன்றிலிருந்து எஸ்.சி/எஸ்.டி மாணவன் 4 ரன் எடுத்தால் 8 ரன்னுக்குச் சமம். அவன் 50 ரன் எடுத்தாலே போதும், 100 ரன் அடிச்சதுக்குச் சமம்."

• விடுதியில் இருந்த மாணவர்கள் இடஒதுக்கீட்டை எதிர்த்து 5 நிமிடங்கள் 'கரண்ட் கட்' செய்ய முடிவு செய்தார்கள். சில மாணவர்கள் இந்தக் கேலியை, அவமரியாதையைச் சட்டை செய்யவில்லை. உடனே எதிரணி மாணவர்கள் 'கோட்டா', 'இடஒதுக்கீடு' என்று சொற்கள் வரும் பாட்டைக் கோரஸாகப் பாடி மற்றவரை எரிச்சல் ஊட்டுகின்றனர். இதனால் அவமானம் அடைந்த மாணவர்கள் அடுத்தநாள் 'கோட்டா எதிர்ப்பு ஊர்வலத்தில்' கலந்து கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். (ஆர்ப்பாட்டத்துக்கு ஆள் சேர்க்க இப்படியும் ஒரு வழி).

நாட்டில் உள்ள வேறு கல்லூரிகளிலும், இதே நிலைமைதான். சில இடங்களில் இன்னமும் படுமோசம். "படிப்பாளி"யான, "அறிவு நிரம்பிய" மேல்சாதி வெறிகொண்ட மாணவரின் "சமஉரிமைக்கான" போராட்டத்தின் அழகு இதுதான்.

*ஆதாரம்: தி இந்து, 'ஓபன்பேஜ்'*

களை அன்றாடம் அவர்களது வாழ்க்கையிலிருந்து பிய்த்தெறிந்து கொண்டிருக்கிறதென்றால், இன்னொருபுறம் இந்நாட்டின் தரகு முதலாளிகளுக்கும், உயர் நடுத்தர வர்க்கத்திற்கும், கடந்த 50 ஆண்டுகளில் அவர்கள் காணக் கிடைக்காத, காணத் தவித்த வாழ்க்கையையும், வளத்தையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. மெக்காலே உருவாக்கிய கல்வி முறையிலிருந்து, உடலால் இந்தியர்களாகவும், உள்ளத்தால் அமெரிக்க, ஐரோப்பியர்களாகவும் வாழும், நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் இந்திய உயர் நடுத்தர வர்க்கம், உலகமயமாக்கத்தின், தகவல் தொழில்நுட்பப் புரட்சி யுகத்தின் 'தரம் வாய்ந்த' தேவைகளை கனகச்சிதமாக நிறைவு செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் குவியும் லட்சக்கணக்கான கார்களையும், விதவிதமான நுகர்பொருட்களையும், வாங்கிக் குவிப்பவர்கள் இவர்கள் தான். அடுக்குமாடிக் குடியிருப்புகளும், நவநாகரிக சலூன்களும், மசாஜ் பார்லர்களும், ரிசார்ட்டுகளும் கொழித்துக் கொண்டிருப்பது இவர்களால்தான். எம்.டி.வி., எஸ்.எஸ். மியூசிக். ரேடியோ மிர்ச்சியின் டார்கெட் ஆடியன்ஸ் இவர்கள்தான். மொத்தத்தில், இந்த 2 சதவீத இந்தியர்களின் இந்தியா ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

மேல்நோக்கி விரைந்து கொண்டே இருக்கும் இந்த உலகமய இந்தியர்களின் மகிழ்ச்சியான தவளை வாழ்க்கையில், சமூக 'அக்கறையை' அவ்வப்பொழுது ஒரு காபியைப் போலப் பருகிக் கொள்கிறார்கள். இணையத் தளங்களிலும், எஸ்.எம்.எஸ்.-ஸிலும், இவர்களுடைய முத்தான 'முற்போக்கு'க் கருத்துக்கள் பரவி விரிகின்றன. இந்த தேசத்தின் மண்ணோடும், மக்களோடும் உணர்ச்சிபூர்வமான எந்தத் தொடர்பும் அற்ற இவர்கள் இலஞ்சத்தை ஒழிக்க வேண்டும், படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும், தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும், இலவசம், மானியம் என்ற பேச்சே கூடாது என தங்கள் எசமானர்களும், அவர்களது கைத்தடி ஊடகங்களும் உருவாக்கிய கருத்துப் பொந்துகளுக்குள் உலா வருகிறார்கள்.

இந்தக் கருத்துக்களை உதிர்க்கும் போதெல்லாம் 'குடிமகன்' என்ற அடையாளத்தை அணிந்து கொள்கிறார்கள். இந்தக் குடிமகன் அடையாளம் இவர்களுக்குப் பாதுகாப்பாகவும், வாயளப்பதற்கும் ஏற்றதாக இருக்கிறது. எல்லா சண்டப் பிரசண்டமும் செய்து விட்டு, குடிமகன் என்ற முறையில் என் கருத்தைச் சொன்னேன், அவ்வளவுதான் என அறிவை நிரூபித்த திருப்தியோடு தனது தவளை வாழ்க்கையை கவலையின்றித் தொடர வசதி செய்து தருகிறது. இத்தனை அறிவோடும், ஆற்றலோடும் தாங்கள் இருக்கையில், தங்களை சில முட்டாள்கள் ஆட்சி செய்வது, இவர்களுக்குச் சகிக்கவொண்ணாததாக இருக்கிறது. எனவே, உலகமய இந்தியர்களின் கனவு நாயகனுக்கான தேடல் தொடர்கிறது.

அவன் யார்? மணிரத்னத்தின் 'ஆய்த எழுத்து' மைக்கேல் (சூர்யா நடித்த வேடம்)தான். படித்த, அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்த, ஸ்டைலான, சிவப்பான, அரசியலுக்கு வரும் ஹீரோ. 'ரங் தே பசந்தி' முன்வைத்த 'அரசியலுக்கு அப்பாற்பட்ட' ஜாலியான ஆனால் புத்திசாலி ஹீரோக்கள். கோடிகளைக் குவிப்பதற்காக அமெரிக்காவில் குடியேறி, பிறகு இந்திய ஜனநாயகத்தை உய்விப்பதற்காகத் தாயகம் திரும்பி 'லோக் பரித்ரான்' என்ற அமைப்பை உருவாக்கிய ஐ.ஐ.டி. மாணவர்கள்.

மெல்ல வளர்ந்து இப்பொழுது, பார்ப்பனிய ஆன்மாவும், உலகமய முகமும் கொண்ட ஒளிரும் இந்தியா தலைவிரிகோலமாக ஆடிக் கொண்டிருக்கிறது. இக்கோர ஆட்டத்தை இரண்டாயிரம் வருடப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கிறார்கள் உண்மை இந்தியாவின் மக்கள். அந்தப் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாய் உடைபட்டுக் கொண்டிருக்கிறது. மொத்தமாய் உடைபடும் நாளில், அது கற்பனை செய்ய இயலாத கொடுங்கோபம் கொள்ளும். அன்று அழுகுணி வாதங்கள் எடுபடாது. சமத்துவம் அதன் உண்மையான பொருளில் நடைமுறைக்கு வரும்.

• பால்ராஜ்


படிப்பகம்

www.padippakam.com

# நேபாளம்:
# விண்ணில் தவழும் செங்கொடி! மண்ணில் கமழும் புரட்சி!!

**கா**டுகளின் மணமும் மலைப் பச்சைகளின் மணமும் கலந்து இரவு கனத்திருக்கிறது.

தகதகவென ஒளி வீசியவாறு அற்புத ஜாலம் செய்தபடி சலசலவெனச் சிற்றலைகளோடு ஓடுகிறது கர்னாலி ஆறு.

இடம்: நேபாள நாட்டின் மேற்கு மூலை.

கர்னாலி ஓர் அற்புதம் என்பதற்கும் ஒரு காரணம் உண்டு. இமாலயத் தேசமான நேபாளத்தில் பெருக்கெடுத்தோடுகிற சிறிதும் பெரியதுமான 6000 ஆறுகளில் கடைசிக் காட்டாறு கர்னாலியாகத்தான் இருக்கும். இப்பிராந்தியத்தில் ஓடுகிற மிகப் பெரிய ஆறுகளான கண்டக், மஹாகாளி இரண்டுமே இந்திய-நேபாள நாடுகளுக்கிடையிலான சமனற்ற ஒப்பந்தங்களினால் நார்நாராகக் கிழிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டவை. இந்தியப் பெரியண்ணன் எல்லாத் தண்ணீர் மூலங்களையுமே கொள்ளையடித்துவிட்டது; சின்னஞ்சிறு நேபாள நாடோ தீராத வறட்சியிலும், தொலையாத தாகத்திலும் சிக்கித் தவிக்கிறது.

கர்னாலி ஆற்றின் மீது ஜப்பானியர் மிக அற்புதமான தொங்கு பாலமொன்றைக் கட்டியிருக்கிறார்கள். காடுகளைப் போலவே இங்கும் இரவு அடர்ந்து கரியதிரை விழும்நேரம் - சிஸாபானி கிராமக் குழந்தைகள் பாலத்தின் மேல் குதித்து ஓடியவாறு *"ஜனநாயகம் - ஜனநாயகம், குடியரசு - குடியரசு"* என்று முழங்குகின்றன. அங்கு நிலவும் சுதந்திர மன எழுச்சியின் மழலைப் பாட்டொலியாக அது பரவசம் ஊட்டுகிறது.

இந்தச் சிறிய கிராமத்தின் மக்களும் கூட நெடுஞ்சாலைகளை மறித்து, 19 நாட்கள் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். *"பராஸ் ஒரு மக்கள் விரோதி. அவனைத் தூக்கிலே போடு."* (பராஸ், மன்னன் ஞானேந்திராவின் மகன்) *"திருட்டு நாயே ஞானேந்திரா, நாட்டை விட்டு வெளியேறு"* என்று நேபாளம் முழுக்க பிரபலமான முழக்கங்களை எழுப்பினர். நேபாளத்தில் நடப்பது சர்வாதிகார மன்னனுக்கும் மக்களுக்கும் இடையேயான போர் என்பதை இது மிகத் துலக்கமாகப் பிரகடனப்படுத்துகிறது.

ஆனால் மன்னனுக்கோ அல்லது அவன் மகனுக்கோ வெளியேற மனமில்லை. மன்னன் ஞானேந்திரா இன்னமும் அங்கு ஒட்டிக் கொண்டே இருக்கிறான். மன்னனைப் போலவே அவனது ராயல் நேபாள ராணுவம் (RNA) இராணுவத் தலைமைத் தளபதியாக இருக்கும் கோமாளி பியார் யங் தாபா, பல வண்ண நிலப்பிரபுத்துவ உள்ளூர்த் தலைவர்களும், பணநாற்றமடிக்கும் மேட்டுக்குடி வர்க்கத்தினரும் இந்த ஏழை நாட்டின் இரத்தத்தையும், வியர்வையையும், இயற்கை வளங்களையும் சூறையாடியும், சுரண்டியும் ஒட்டுண்ணி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

**மன்னர் மாட்சிமையைப் பறைசாற்றிய பெயர்ப் பலகைகள் நேபாளம் முழுவதும் அகற்றப் பட்டுள்ளன; காத்மாண்டு பாராளுமன்றத்தில் நேபாள மக்கள் குடியரசின் சின்னமான அரிவாள் சுத்தியல் காட்சி தருகிறது; மன்னன் மற்றும் அவனது மூதாதையர்களின் சிலைகள் உடைத்து அப்புறப்படுத்தப் பட்டுள்ளன; புதிய பாடல்கள் மற்றும் கவிதைகள் எழுதப் பட்டுள்ளன; கிரிமினல்கள் மற்றும் மக்களை ஒடுக்கிய ஒடுக்குமுறையாளர்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்.**

பத்திரிக்கைக் குரல்வளையை நெரித்து நீதிபரிபாலனத்தில் தலையிட்டு, அரசு நிறுவனங்களை அழித்து, எழுத்தாளர்கள், கலைஞர்கள், வக்கீல்கள், வீட்டுப் பெண்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என அனைத்துப் பிரிவினரையும் சிறைப்படுத்தி, சித்திரவதைக் கூடங்களில் அடைத்து, அரசு பயங்கரவாத நிலையைக் கட்டவிழ்த்து விட்டு, பல ஆயிரக்கணக்கான ஏழை மக்களை, நேபாள மாவோயிஸ்டு கம்யூனிசப் புரட்சியாளர்களைக் கொன்றார்கள்.

**நா**ங்கள் கர்னாலி நதியைக் கடக்கும்போது நடுச்சாமத்தின் கரிய இருள் எங்கும் சூழ்ந்திருந்தது. கட்டுறுதி கொண்ட ஒல்லியான தேகத்துடன் சீருடை அணிந்த ஒருவர் எங்கள் பாதைக்குக் குறுக்கே வந்து பின் இருளில் மறைந்து போனார். எங்கள் கார் டிரைவர் குருஜி, ''மாவோயிஸ்ட்'' என்று முணுமுணுத்துக் கொண்டார். கடந்த 9 நாட்களில் சுமார் 1,000 கி.மீ. தூரம் மாவோயிசக் கட்டுப்பாட்டுப் பிராந்தியங்களிலே பயணம் செய்ததால், நாங்கள் ஆச்சரியப்படவில்லை.

நாங்கள் வரலாற்றுப் புகழ்மிக்க போர்முனைகள் தகர்க்கப்பட்ட போலீசு நிலையங்கள், மாவோயிஸ்டுகளைக் கொன்று அவர்களது சிதைந்த உடல்களைக் குழிதோண்டிப் புதைத்த பாலத்து அடிகள், தமது இளம்பாலகர்களைப் பறிகொடுத்த கிராமங்கள் என அனைத்தையும் கடந்து சென்று கொண்டிருந்தோம். எங்கள் கார் திடீரென ஒரு இராணுவச் சோதனை நிலையம் அமைந்திருந்த யாருமற்ற, வெறிச்சோடிய நெடுஞ்சாலையை அடைந்தது.

**எ**ன்ன வேண்டுமானாலும் நடக்கலாம். நாங்கள் சுட்டுத் தள்ளப்படலாம். அவர்கள் யாரையும் நம்புவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

இது மாவோயிஸ்ட்டுகளின் கட்டுப்பாட்டுப் பகுதி. எனவே அனைத்துப் பாதைகளையும் நன்கறிந்தவர்கள் அவர்கள். ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து இராணுவத்தையோ, அல்லது மாவட்டத் தலைநகரத்தையோ தாக்கத் திட்டமிட்டு இருக்கலாம். (கபிலவஸ்துவில் ஏப்ரலில் நடந்தது போல). பெண் தளபதிகள் தலைமையில் 5,000 - 6,000 என வலிமையான படையோடு தான்சேன் நகரத்தைக் கைப்பற்றியது போன்ற செயலிலும் இறங்கலாம். (மாவோயிச மக்கள் விடுதலைப் படை (PLA)யில் 40% பெண்கள் உள்ளனர்.)

''யார் நீங்கள்? இந்த இராத்திரியில் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்?'' தூரத்திலே ஒரு குரல்கேட்டது. மிகவும் அந்நியமான குரல். அவர்கள் சிலராக இருந்தனர். அந்த ஒளி எங்களைத் தீவிரமாக ஆய்வு செய்தபடியே இருந்தது. அந்த ஒளியின் வெளிச்சத்தில் மிகவும் தடுமாறிப் போனதால் அவர்கள் இராணுவத்தினர் என்பதை உடனடியாக எங்களால் அடையாளம் காண இயலவில்லை. நாங்கள் இந்தியப் பத்திரிக்கையாளர்கள் என்பதை குருஜி தெரியப்படுத்திக் கொண்டார். பின்வாங்கிக் கொண்ட குரல் மீண்டும் ஒலித்தது. ''சரி போங்கள், மீண்டும் இரவு நேரத்தில் இங்கே திரும்ப வராதீர்கள்'' என்றது.

இந்த மலைப்பிரதேச இராணுவச் சோதனை நிலையத்தைப் போன்று அனைத்துச் சோதனை நிலையங்களும் அபாயம் கொண்டதல்ல. நேபாளம் நீண்டதொரு அடக்குமுறையின் தளைகள் அறுக்கப்பட்டு மெல்ல பல கருத்துக்கள் பூத்துக் குலுங்கும் ஜனநாயக மலர்ச்சோலையின் முதல் மகிழ்ச்சி அனுபவத்தின் அரைவாசியைக் கண்டு கொண்டிருந்தது. 19 நாள் வன்முறையற்ற புரட்சி மன்னனை ஒரு மூலைக்குத் தள்ளியிருக்கிறது. ஆனால் அரண்மனைச் சதிகள், துரோகங்கள் மற்றும் சமரசங்கள் பற்றிய கவலை ரேகைகள் எங்கும் பரவியே இருக்கின்றன.

ஒரு இடைக்கால அரசமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு, ஏழு கட்சிக் கூட்டணியுடனான மாவோயிஸ்டுகளின் 12 ஒப்பந்தங்கள் முழுதாக இணைத்துக் கொள்ளப்படுமா? அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றும் அதிகார மன்றம் ஏற்படுத்தப்படுமா? மன்னன் மற்றும் இராணுவத்தின் கதி என்னவாக இருக்கும்?

உண்மை என்னவெனில், இப்போது போர் நிறுத்தத்தைக் கடைப் பிடித்து வரும் மாவோயிஸ்டுகளே நேபாளத்தின் பெரும்பான்மையான



மக்கள் வெள்ளத்தில் மாவோயிஸ்டுகளின் கலை நிகழ்ச்சி.

பகுதிகளைக் கட்டுப்படுத்தி உள்ளார்கள். முன்பு மன்னனது கட்டுப்பாட்டில் இருந்தவை கடுமையான இராணுவப் பாதுகாப்பு கொண்டிருந்த காத்மாண்டுவும், சில துணை நகரங்களும் மட்டும் தான். 75 மாவட்டங்களின் 75 சதவீதப் பகுதிகள் மாவோயிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் உள்ளதோடு நேபாள நிலப்பரப்பு முழுவதும் நிலையான செல்வாக்கையும் பெற்றுள்ளது.

மக்களிடம் ஒரு பயமும் அதே நேரத்தில் அவர்களின் தியாக வாழ்க்கை, கொள்கைப் பிடிப்பு, வீரம் ஆகியவற்றின் மீது உயரிய மதிப்பும் கொண்டிருக்கிறார்கள். ஏழை, எளிய மக்களுக்காக வாழ்கிறார்கள், சாகிறார்கள். அவர்களிடையே வேலை செய்து, வாழ்ந்து, பள்ளிகள், சாலைகள் அமைத்துக் கொடுத்து, அனைவருக்கும் நிலம் விநியோகித்து, உடனடி நீதி வழங்கல் முறையை ஏற்படுத்தி, எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல், சமூக அதிகாரத்தை அளித்து, நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையைத் தாங்கிப் பிடிக்கும் பழைய கட்டுமானங்களைத் தகர்த்து எறிவதில் மாவோயிஸ்டுகள் முன் நிற்கிறார்கள்.

மக்கள் மன்னனை வெறுக்கிறார்கள். மன்னன் நடத்திய அரண்மனைப் படுகொலைகளை மக்கள் மறக்கவில்லை. ''மன்னன் மற்றும் அவனது மகன், இருவருமே அனைத்துக் குழப்பங்களுக்கும் காரணம். மன்னன் அப்புறப்படுத்தப்பட்டே ஆக வேண்டும்'' என்று நேபாள்கஞ்ச் பகுதி மாவோயிசத் தோழர் 'அதக்' குறிப்பிட்டார். இவர் பேக் மற்றும் பாட்டியாவின் மாவட்டச் செயலாளராக இருக்கிறார். உத்தராஞ்சல் எல்லையில் உள்ள மகேந்திர நகரில் (புரட்சிக்குப் பிறகு, இப்போது பீம் நகர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 1960-களில் மிகப் பெரிய விவசாய இயக்கத்தை மேற்கொண்டு பின்னர் மன்னனின் ஆட்களால் கொலை செய்யப்பட்ட பீம் தத் பாண்டே நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது).

கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கிருஷ்ணா தத் குறிப்பிடும் போது ''மாவோயிஸ்டுகள் கண்ணுக்கு நேரே புலப்படாத சக்தி. ஆனால் அவர்கள் எங்கும் நீக்கமற உள்ளனர். அரசாங்கத்தில் கண்டிப்பாக அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், இந்த மக்கள் எழுச்சியில் (ஜன அந்தோலன்) மிக முக்கியப் பாத்திரத்தை அவர்கள் வகிக்கிறார்கள்.''

நேபாளம் நெடுகிலும் 90-களின் நடுப்பகுதியில் ரோல்பாவில் மாவோயிஸ்டுகள் முதன்முதலில் தொடங்கிய போராட்டத்தில் காணப்பட்ட பிரச்சாரச் சுவரெழுத்துக்கள் சிவப்பு வண்ணத்தில் எங்கும் மிளிர்கின்றன: ***''கொலைகாரக் கிரிமினல் சர்வாதிகாரி மன்னனை அழித்தொழிப்போம். ஒரு ஜனநாயக மக்கள் குடியரசை நிறுவுவோம்.''*** அவர்களின் நடவடிக்கைகள் மிகத் தெளிவாக எங்கும் உள்ளன. கடந்த ஏப்ரலில், நகரங்களில் ஆயிரக்கணக்கான கிராம மக்களை அணிதிரட்டியவர்கள் மாவோயிஸ்டுக்களே.

''வன்முறை நிகழாத அந்த மக்கள் எழுச்சியில் 3 முக்கிய சக்திகள் இருந்த


படிப்பகம்

www.padippakam.com

னர் - ஏழு கட்சிக் கூட்டணி, மக்கள், மற்றும் மாவோயிஸ்டுகள். சந்தேகமேயில்லாமல், மாவோயிஸ்டுகளே மிகப் பெரிய சக்தி'', என்கிறார் மனித உரிமைகள் வழக்குரைஞர், கோபால் சிவக்குட்டி சிந்தன். மேலும் அவர், 'புதிய இடைக்கால அரசாங்கத்தில் மாவோயிஸ்டுகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். 1990-இன் அரசமைப்புச் சட்டம் தூக்கியெறியப்பட்டு, ஒரு புதிய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும். மன்னனும், அவன் மகனும் தனி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவர்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். மக்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தோர் தண்டிக்கப்பட்டு, சட்ட அதிகார மன்றத்தின் ஆட்சி செயல்படுத்தப்பட வேண்டும். *இல்லையேல், நேபாளம் நிச்சயமாக இரண்டாவது புரட்சிக்குத் தயாராகும்*'' என்று விளக்குகிறார்.

நேபாளம் ஏற்கெனவே இரண்டாவது புரட்சி ஒன்றை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

பீம்நகரில், ஞானேந்திரா மார்க், ஜனமார்க் என பெயர் மாற்றப்பட்டுள்ளது; மன்னர் மாட்சிமையைப் பறைசாற்றிய பெயர்ப் பலகைகள் நேபாளம் முழுவதும் அகற்றப்பட்டுள்ளன; காத்மாண்டு பாராளுமன்றத்தில் நேபாள மக்கள் குடியரசின் சின்னமான அரிவாள் சுத்தியல் காட்சி தருகிறது; மன்னன் மற்றும் அவனது மூதாதையர்களின் சிலைகள் உடைத்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன; புதிய பாடல்கள் மற்றும் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன; கிரிமினல்கள் மற்றும் மக்களை ஒடுக்கிய ஒடுக்குமுறையாளர்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்; மக்கள் மிகவும் உன்னிப்பாக ஏழு கட்சிக் கூட்டணியைக் கண்காணித்து வருகிறார்கள்.

வன்முறையற்ற இந்த இயக்கம் 21 உயிர் இழப்புக்களைச் சந்தித்தது. அவற்றில் ஒன்று SSP-யின் முன்னணியாளர் துர்ஜா குமார் ராய் சுட்டுக் கொல்லப்பட்டு, காத்மாண்டுவில் வெட்ட வெளியில் தொங்க விடப்பட்டு இருந்தார். ஊனமாக்கப்பட்டவர்கள் பலர். பார்டியா மாவட்டத்தில், குலேரியா கிராமத்தின் விவசாயி யம்லால், காலில் சுடப்பட்டுள்ளார். ''அவர்கள் துரோகம் இழைத்தால் மறுபடி தெருவில் இறங்கிப் போராடுவேன்'' என்கிறார் அவர். அப்போது சுட்டுக் கொல்லப்படும் நிலைமை வந்தால் என்ன செய்வார்? ''நாட்டிற்காக நான் சாவேன். எங்களுக்கு ஒரு குடியரசு வேண்டும். மன்னன் இங்கிருந்து வெளியேற வேண்டும்'' என்கிறார் தீர்க்கமாக.

**கஜூரா கிராமத்தின் ஏழை தலித் மக்கள் காலனியில், ஷாகித் சேது பிக்காவின் பலவீனமான 3 குழந்தைகள் எங்களைச் சுற்றி ஓடிக் கொண்டே ஜனநாயகத்தை வாழ்த்தி சில முழக்கங்களை எழுப்பியபடி இருந்தன. ''உங்கள் அம்மா எங்கே போயிருக்கிறார்கள்?'' என்று நான் கேட்டேன். ''மன்னன் எங்கள் அம்மாவைச் சுட்டுக் கொன்று விட்டான்,'' என்று பதிலளித்தான் ஆசிஷ்.**

கஜூரா கிராமத்தின் ஏழை தலித் மக்கள் காலனியில், ஷாகித் சேது பிக்காவின் பலவீனமான 3 குழந்தைகள் எங்களைச் சுற்றி ஓடிக் கொண்டே ஜனநாயகத்தை வாழ்த்தி சில முழக்கங்களை எழுப்பியபடி இருந்தன. ''உங்கள் அம்மா எங்கே போயிருக்கிறார்கள்?'' என்று நான் கேட்டேன். ''மன்னன் எங்கள் அம்மாவைச் சுட்டுக் கொன்று விட்டான்,'' என்று பதிலளித்தான் ஆசிஷ். இருபத்தாறே வயதான சேது 10 கி.மீ. தூரம் நேபாள் கஞ்சுக்குப் பயணம் செய்து இந்தப் போராட்டத்தில் பங்கு எடுத்து உள்ளார். அந்தச் சம்பவத்தை நினைவுகூறும் சுஷ்மா என்ற பெண், ''அப்போது ஒரு லட்சம் மக்கள் நேபாளத் தெருக்களில் நின்றிருந்தார்கள். கண்ணீர்ப் புகைகுண்டு ஒன்று ஆசிஷ் தாய் மீது விழுந்ததால் மூச்சு திணறி இறந்து போனாள்'' என்று சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

அந்த நிலப்பரப்பு முழுவதும் இது போன்ற வீரமும், தியாகமும் நிறைந்த நம்பமுடியாத பலகதைகள் உள்ளன. சேது இறந்த உடனே ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு, போலீசுடன் நேரடி மோதலில் ஈடுபட்டு நேபாள் கஞ்சில் உள்ள ஞானேந்திரா சவுக்கில் அமைந்திருக்கும் ஞானேந்திரா நினைவிடத்தைத் தகர்த்தெறிந்தனர். இப்போது, தகர்க்கப்பட்ட அந்த நினைவிடத்தில் ஒரு புதிய பலகை தொங்கிக் கொண்டிருக்கிறது - ''ஷாகித் (தியாகி) சேது பிகா சவுக்.''

மாவோயிஸ்டுகள் மீதான பயங்கரவாதிகள் 'முத்திரை' நீக்கப்பட்டுள்ள நிலையில் பலரும் வெளிப்படையான நடவடிக்கைகளில் உள்ளனர். ஆயினும், ஆபத்தை ஊகித்துணரும் வகையில் எச்சரிக்கை நிலையிலே உள்ளனர். அவர்கள் இந்த இராணுவத்தையும் அரசாங்கத்தையும் நம்பவில்லை. எனில், இப்படி வெளிப்படையாக இயங்குகின்ற நிலையை எப்படி அவர்கள் உணர்கிறார்கள்? இதற்கு தோழர் ரமில் ராம், (வயது 25) விடையளிக்கிறார்: ''எங்களைக் கொல்ல நடக்கும் சதிகள் குறித்த எச்சரிக்கை உணர்வு எப்போதும் இருக்கும். மக்களின் உறுதியான ஆதரவு எமக்கு இருப்பதால், அவர்களே எங்களுக்குப் பாதுகாப்பு. எனவே சண்டை நிறுத்தத்தை அறிவித்ததனால் மட்டுமல்ல, வேறுவழிகளிலும் எங்களுக்குப் பாதுகாப்பு உள்ளது.''

இது எப்போதும் சாத்தியமில்லை. தோழர் அதக் கூறும் போது 12,000 மக்கள் கடந்த 10 வருடங்களில் போலீசு மற்றும் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் 5,000 பேர் மாவோயிஸ்டுகள், 7,000 பேர் சராசரி மக்கள் மற்றும் மாவோயிஸ்ட் அனுதாபிகள். இதுபோக 2,000 மாவோயிஸ்டுகள் இன்னமும் சிறையில் வாடுகின்றனர். 1,400 தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் 'காணாமல்' போய் உள்ளனர். அதாவது கொல்லப்பட்டு விட்டனர். போக்ராவுக்கு அருகே கஸ்கி மாவட்டத்தின் துல்கவுடா கிராமத்தில் மளிகைக் கடைக்காரரான ஆர்த்தி ஷர்மாவின் கணவன், தங்கா ஷர்மா 'காணாமல் போனவர்'களில் ஒருவர். ''என் கணவர் ஒரு மாவோயிஸ்ட் தான்'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது.

சித்திரவதை, கடத்தல், கற்பழிப்புகள் மற்றும் கொலைகள் குறித்த சோகக் கதைகள் நேபாள மக்களின் உண்மைக் கதைகள். ஆனால், மக்கள் காட்டும் உறுதிப்பாடு வியப்புக்குரியது. எளிமையும், அன்பும், உணர்ச்சி வேகமும் கொண்ட நேபாள மக்கள் அனைவரிடமும் உயரிய விழிப்புணர்ச்சி நிலையும், அரசியல் தெளிவும், உறுதியும் இருப்பதை நகரத்திற்கு நகரம், கிராமத்திற்குக் கிராமம் காணலாம். நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மை, வறுமை மற்றும் ஒடுக்குமுறைகளால் நொறுக்

www.padippakam.com

கப்பட்ட மக்கள் சமத்துவம், சுதந்திரம் மற்றும் நீதியைப் பெற்றுத் தரும் ஒரு சுதந்திரக் குடியரசுக்காகச் சாகவும் தயாராக இருக்கிறார்கள்.

போக்ராவின் கஸ்கி பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான தோழர் சுராஜ், தனது இளமைப் பருவத்திலிருந்தே தலைமறைவாக இருந்தவர். பல்வேறு ஆயுதத் தாக்குதல்களில் கலந்து கொண்டவர். சமீபத்திய பெனியில் நடந்த தாக்குதலில் 64 தோழர்களை இழக்க நேரிட்டதைக் குறிப்பிடுகிறார். ஹெலிகாப்டர்களில் எங்கள் மீது குண்டு பொழிந்ததும், நாங்கள் அவர்களைத் திருப்பிச் சுட்டதும் ஒரு சாகச அனுபவம். இறந்த தோழர்களின் நினைவுகள் ஏற்படுத்திய வலி பலநாட்களுக்கு என்னை வருத்தியபடியே இருந்தது''. ''எதுவரினும் எங்கள் கடமையைத் தொடர்ந்து தானே ஆக வேண்டும்''.

இவரைப் போன்ற இளம் மாவோயிஸ்டுகள் மற்றும் இந்தப் போராட்டக் களத்தில் ஒருங்கிணைந்த மாவோயிஸ்ட் அல்லாத பிரிவினர் அனைவரும் மிகத் தெளிவான தேர்ந்தெடுத்த வார்த்தைப் பிரயோகமும், அரசியல் கூர்மையும் கொண்டவர்களாக உள்ளனர். ''இப்போது ஒரு அடி முன் நகர்ந்துள்ளோம். அடுத்த அடி எடுத்து வைக்கும்போது அதன் உச்சம், சோசலிசத்துக்கும் மேலானதாக இருக்கும்'' என்கிறார், சுராஜ்.

அவர் தலைமறைவுக் காலத்தில் காட்டில் வாழ்ந்திருக்கிறார். 8 நாட்கள் வரை பசியுடன் இருந்துள்ளார். இராணுவத்தை, பலமுறை எதிர் கொண்டிருக்கிறார். ''அப்போது, அது எனக்குச் சிரமமாகத் தோன்றியது. அனைத்தையும் இப்போது யோசிக்கும் போது சுவாரசியமான அனுபவமாக நினைவுகளில் எழுகிறது'' என்று கூறி, புன்னகைக்கிறார். சுராஜின் 21 வயதான மனைவி நிஷாவும் ஒரு மாவோயிஸ்ட் தோழர். அவருடன் மேலும் 4 பெண் தோழர்களைக் கைது செய்த இராணுவம், சித்திரவதைக்குப் பின்னர் கொன்றொழித்தது. சுராஜ் இன்னொரு திருமணத்தை செய்து கொள்வாரா? ஒரு புன்னகையில் தன் வலியை மறைக்கிறார். ''எங்கள் அரசியல் சித்தாந்தத்தை நாங்கள் மணம் முடித்து இருக்கிறோம்... ஆனால், நாங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், பல தோழர்கள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ள நிலையில், புரட்சியை அதன் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல ஆள் வேண்டாமா?'' என்று எளிய பதிலளிக்கிறார்.

அடுத்தநாள் காலையில், கஸ்கி சுரகா கொடுஞ்சிறையில் மிகவும் மெலிந்த நிலையில் இருந்த அவந்திகா வெளிப்படுத்திய துயரப் புன்னகை, சுராஜின் மனச்சுமையை ஒத்திருந்தது. 25 வயதிலேயே 3 முறை கைதாகியிருக்கும் அவந்திகாவின் சிறை வாழ்க்கை 6 வருடங்கள். அவருடன் சிறைப்படுத்தப்பட்டிருந்த இளம் பெண் தோழர்கள் ஆஷா, ஷர்மிளா மற்றும் லீலா ஆகியோர் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி கால வரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இருபது வயதுப் பிராயத்தில் உள்ள 14 பெண்கள் மற்றும் 73 ஆண் மாவோயிஸ்டு தோழர்களும் கோஷங்களை எழுப்பியவாறு சட்டமியற்றும் அதிகாரமன்றம் வேண்டி உணவு உட்கொள்ள மறுத்து வருகின்றனர்.

பெண்கள், தாம் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது குறித்து, அவர்கள் தலைகளை தண்ணீர்க் குட்டைகளில் வலியத் திணித்து மூழ்கச் செய்தது, உள்பாதங்களில் திரும்ப, திரும்ப அடித்துத் துன்புறுத்தியது, தூக்கமற்ற இரவுகள் முழுக்க விசாரணை செய்தது என ஏகப்பட்ட சம்பவங்களை நினைவு கூர்ந்தனர். அவர்கள் அனைத்தையும் சொல்லவில்லை. தம்மீது ஏவப்பட்ட இரத்தம் தோய்ந்த வன்முறை வெறியாட்டங்களை மீண்டும் சொல்லி அனுதாபம் தேடிக் கொள்ள விரும்பவில்லை. ''எதற்காக இத்தனைப் போராட்டங்களும்?'' நான் அவர்களிடம் பேச்சு கொடுத்தேன். ''நேபாளத்திற்கு வேண்டிய சுதந்திரம், சமத்துவம், நீதி மற்றும் ஜனநாயகத்திற்காகப் போராடுகிறோம்'' என்றனர். ''உங்கள் மாவோயிசத்தின் இலக்கு என்ன?'' ''நேபாளத்திலும் உலகத்திலும் உலகப் புரட்சி கொண்டு வருவதே'' என்றனர்.

**நான் விடைபெறுவதற்காக அவர்களுடன் கைகுலுக்கிய போது என்னைப் பற்றிய கைகளிலிருந்து ஒரு அரவணைப்பும், வீர உணர்வும் என்னுள் படர்வதை உணர்ந்தேன். அநீதிக்கு எதிரான கோபமும், தார்மீக ஆவேசமும் அதன் உக்கிர உணர்ச்சியுடன் ஒன்றாய் மின்னுவதை அவர்கள் கண்களில் பார்த்தேன்.**

எந்த இன்னலையும் தாங்கிக் கொண்டு போராட உறுதி ஏற்ற இளம் ஆண்களும், பெண்களும் மின்னும் நட்சத்திரங்களைக் கொண்ட சிவப்புப் பட்டைகளை தமது தலைகளைச் சுற்றிக் கட்டியவாறு, புரட்சியின் தீர்மானமான சக்தியாக நேபாளம் முழுக்க உள்ளனர். இவர்கள் போலி மோதல் படுகொலையில் கொல்லப்படாத பாக்கியசாலிகள் என்று மட்டும் எனக்குத் தோன்றியது. அஞ்சாத நெஞ்சுறுதி, அரசியல் கூர்மை, தமது அரசியல் நோக்கத்திற்குக் காட்டும் விசுவாசம் அனைத்தையும் வெளிப்படுத்தும் அவர்கள் புன்னகை, மலையிலிருந்து வெளிக்காட்டும் சூரியக் கதிர்களின் பிரகாசத்தை ஒத்திருக்கிறது.

**நா**ன் விடைபெறுவதற்காக அவர்களுடன் கைகுலுக்கிய போது என்னைப் பற்றிய கைகளிலிருந்து ஒரு அரவணைப்பும், வீர உணர்வும் என்னுள் படர்வதை உணர்ந்தேன். அநீதிக்கு எதிரான கோபமும், தார்மீக ஆவேசமும் அதன் உக்கிர உணர்ச்சியுடன் ஒன்றாய் மின்னுவதை அவர்கள் கண்களில் பார்த்தேன். தீராத புரட்சி நம்பிக்கை - அது ஏப்ரல் புரட்சி நம்பிக்கை போன்றது. ''தோழர்களே உங்களுக்குச் செவ்வணக்கம்'' என்று சொல்லிக் கொண்டு நான் திரும்பி விட்டேன்.

பழைமை எண்ணங்கொண்ட, சீரழிந்த, அதிகார வெறி பிடித்த அரசியல்வாதிகள் ஒருபுறம்; கனவுகளைத் தேக்கி, தமது உயிரைப் பணயம் வைத்து, அவற்றை நிறைவேற்ற துடிதுடிப்போடுக் காத்திருக்கும் இளம் லட்சியவாதிகள் மறுபுறம் என நேபாளத்தை இப்போது பார்க்கிறேன்.

இளம் தலைமுறையினர் சுதந்திரத்தையும், நீதியையும் இந்த முதல் புரட்சியின் வழியே பெறவில்லையென்றால், அவர்கள் இரண்டாவது மற்றும் இறுதிப் புரட்சியின் வழியே அதை நிச்சயம் நடத்திக் காட்டுவார்கள்.

*ஆம் அது இரண்டாம் புரட்சியாக இருக்கும்!*

•

ஆங்கில மூலம்: அமித் சென்குப்தா,
நன்றி: 3.6.2006 தெஹல்கா வார இதழ்.
சுருக்கப்பட்ட தமிழாக்கம்: இளந்தீபன்.

www.padippakam.com

# புதுப்பேட்டை:
# நிழல் உலகைக் கொண்டாடும் திரை நிழல்

தமிழ் சினிமாவில் தாதா ஃபார்முலா படங்கள் ஓடும் காலமிது. வாழ்க்கையில் நாடோடிகளாக ஓடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் மட்டும் திரையரங்கிற்கு வருவதால் அவர்களைக் கவர விறுவிறுப்பான திரைக்கதை தேவைப்படுகிறதாம். விறுவிறுப்பிற்கு வேறு எந்த ஃபார்முலாவையும் விட தாதாயிசம் பொருத்தமாக இருப்பதால் சித்திரம் பேசுதடி தொடங்கி, பட்டியல், தலைநகரம், கொக்கி, ஆறு வரை நீளும் பட்டியலில் தற்போது புதுப்பேட்டை.



உண்மையான ரவுடியிசம் தொடங்கும் இடத்தில் புதுப்பேட்டை முடிந்து விடுகிறது.

சென்னையின் சேரிப் பகுதியொன்றில் வாழும் குமார் பள்ளி செல்லும் ஒரு விடலைப் பருவ இளைஞன். அப்பா ஒரு குட்டி தாதா. வீட்டுச் சண்டையில் அன்பான அம்மாவைக் கொல்லும் அப்பாவுக்கு அஞ்சி வீட்டை விட்டு ஓடுகிறான். முதலில் பிச்சையெடுக்கிறான். பின்னர் கஞ்சா விற்கும் கும்பலில் சேருகிறான். அடுத்து அந்தக் கும்பலின் தலைவனையே கொலை செய்து கை தேர்ந்த தாதாவாகிறான். ஒன்றுக்கு இரண்டாய் திருமணம் செய்து கொள்கிறான். வெறும் குமார் கொக்கி குமாராக பரிணமிக்கிறான். அரசியலுக்கும் அறிமுகமாகிறான். ஏற்றத்தாழ்வான தாதா வாழ்க்கையில் அடிபட்டு இறுதியில் எம்.எல்.ஏ.வாகவும் சுயநிதிக் கல்லூரிகள் ஆரம்பித்து கல்வி வள்ளலாகவும் செட்டிலாகிறான். படத்தில் இயக்குநர் சொல்லும் நீதி ''சர்வைவல் ஆப் தி பிட்டஸ்ட்'' அதாவது வலியதே வெல்லும்.

இந்த நீதி படத்திற்குப் பொருந்துகிறதோ இல்லையோ கோடம்பாக்கத்து இயக்குநர்களுக்கு முற்றிலும் பொருந்தும். ஆறு பாடல், ஐந்து சண்டை, சென்டிமென்ட் என்ற ஃபார்முலாவுக்குள்ளேயே எந்தக் கதை வெற்றி பெறும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அப்படி வெற்றி பெறும் படங்களின் வார்ப்படங்களாக ஏனையவை பின் தொடருகின்றன. தனது முந்தையப் படங்களில் காதல் கலந்த சைக்கோத்தனத்தை வெளியிட்ட இயக்குநர் தனக்கு அப்படி ஒரு முத்திரை விழுந்து விடக்கூடாது என்பதற்காக வேறு ஒரு தளத்திற்குச் சென்று புதுப்பேட்டை எடுத்தாராம். இயக்குநர் இந்தப் படத்தின் மூலம் என்ன சொல்ல வருகிறார். ஒரு ரவுடி எப்படி உருவாக்கப்படுகிறான், எப்படி வாழ்கிறான் என்பதை யதார்த்தமாகச் சித்தரித்திருக்கிறாராம்.

கொக்கி குமார் தனியாளாய் நின்று பட்டாக் கத்தியினால் ஐம்பது பேரை வெட்டிச் சாய்ப்பது என்ற வகையில் இந்த யதார்த்தம் மலிவான தெலுங்குப் படத்தைத் தாண்டவில்லை. எந்திர கதியில் ரவுடியாக்கப்படும் குமார் தனது குற்றநடவடிக்கைகள் குறித்து கடுகளவும் குற்றஉணர்வு அடைவதில்லை. பல சமயங்களில் அதை இரசித்தும் செய்கிறான். தனது கட்சித் தலைவரின் மகளை மயக்கி வீடியோ படமெடுத்தவனை வெட்டும் காட்சியில் தனது சகாவிடம் வெட்டுப்படுபவன் சத்தமிடாதவாறு வெட்டுமாறு சாதாரணமாகக் கூறுகிறான். பார்வையாளர்களும் இத்தகைய காட்சிகளை காமடியாக இரசிக்கிறார்கள். அவ்வகையில் இப்படம் ரவுடியிசத்தைக் கொண்டாடுகிறது.

மக்கள் தாதா படங்களை இரசிப்பது போல நிஜ வாழ்க்கையில் ரவுடிகளை ஆதரிக்கிறார்களா? இல்லை, அவர்கள் மீது பயம் கலந்த வெறுப்புணர்வே மக்களிடம் நிலவுகிறது. சந்தைக் கடைகளில் மாமூல் வசூலிக்கவும், வீட்டைக் காலி செய்ய மிரட்டவும் வரும் ரவுடிகளை எங்கும் எவரும் ரசிப்பதில்லை. சென்னை திருவல்லிக்கேணி தொகுதியில் அ.தி.மு.க. வென்றதிலிருந்தே போலீசால் கொலை செய்யப்பட்ட அயோத்திக் குப்பம் வீரமணி அம்மக்களிடம் பெற்றிருந்த 'செல்வாக்கை' நாம் புரிந்து கொள்ளலாம்.

உடையார், ஜேப்பியார், பங்க் குமார் இன்னபிற முன்னாள் இந்நாள் தாதாக்களின் தனித்தனி வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்துக் கூறும் புதுப்பேட்டை, ரவுடிகள் உருவாகக் காரணம் ஏதோ வறுமை என்று மலிவுபடுத்தி கருப்பு - வெள்ளையாக மட்டும் பார்க்கிறது. எல்லா தாதாப் படங்களும் ரவுடிகளின் பட்டாக்கத்தியின் செயல்பாடுகளை மட்டும் சொல்கின்றனவேயன்றி ரவுடியிசத்தின் சமூகம் தழுவிய நடவடிக்கைகளை பார்ப்பதுமில்லை. பரிசீலிப்பதுமில்லை. விறுவிறுப்பான திரைக்கதைகளுக்கு பட்டாக்கத்தி உதவுவது போல ரவுடிகளின் சமூகப் பரிமாணம் பயன்படுவதில்லை என்பதே காரணம்.

அடி, வெட்டு, குத்து, ரத்தம் முதலானவற்றை நடுங்காமல் செய்வதற்கு யார் தயார் என்ற அளவில் மட்டுமே வறுமையும் சேரிப்பகுதிகளும் ரவுடியிசத்திற்குத் தேவைப்படுகின்றன. ஆனால் ரவுடியிசம் முதன்மையாக ஆளும் வர்க்கத்திற்குத்தான் தேவைப்படுகின்றது. அவ்வகையில் ரவுடிகளை இயக்குபவர்களும், அதன் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களும் அடிதடியில் இறங்குவதுமில்லை; இறங்கத் தேவையுமில்லை. இவர்கள்தான் திரைப்படங்கள் வெளிச்சமிட மறுக்கும் முதல் தரத் தாதாக்கள்.

காஞ்சிபுரம் வரதராஜபெருமாள் கோவில் வளாகத்தில் சங்கரராமனைக் கொடூரமாகக் கொலைசெய்தது யார்? செய்ய வைத்தது யார்? அதுவும் பட்டப்பகலில் வெட்டவெளியில்


படிப்பகம்

www.padippakam.com

கோவில் வளாகத்திலேயே கொல்லு மளவுக்கு எவர் தைரியம் கொடுத்தார்கள்? சர்வ வல்லமை படைத்த ஜெயேந்திரனின் அதிகாரபலம் அப்படி.

ஆகவே ரவுடிகளின் நடவடிக்கைகளுக்கான 'வீரம்' இத்தகைய பின்புலத்திலிருந்தே எழ முடியும். தமிழ் சினிமா சித்தரிப்பது போல அது கத்தியைச் சுற்றும் வீரக்கலையல்ல. அது ஆயுதபலங் கொண்டு அதிகாரபூர்வமாக மக்களை ஒடுக்கும் ஆளும் வர்க்கம் கள்ளத்தனமாக பெற்றெடுத்த பொறுக்கிக்கலை.

ரவுடியிசத்தின் பின் உள்ள ஆளும் வர்க்கத்தை கவனமாகத் தவிர்த்து விட்டு, அவர்களை அரசியல்வாதிகளுடன் மட்டும் முடிச்சுப் போட்டுக் காட்டுவது வெறும் அசட்டுத்தனமல்ல; திராவிட இயக்கத்தால் அரசியல் தூய்மை கெட்டு விட்டதாகப் புலம்பும் பார்ப்பனக் கும்பலுடைய அரசியல் கண்ணோட்டத்தின் கலைப்பதிப்பு தான் இத்தகைய சித்தரிப்பு.

அடிதடிகளை மட்டும் செய்யும் நான்காந்தர ரவுடிகளின் தேவையும், சேவையும் குறைத்து வரும் காலமிது. அவற்றை முதல்தர ரவுடிகளான போலீசாரே பார்த்துக் கொள்கிறார்கள். 1970-களில் கம்யூனிஸ்டுகளின் கோட்டையாக இருந்த பம்பாய்த் தொழிற்சங்கத்தை உடைப்பதற்கு காங்கிரசுக்கும், முதலாளிகளுக்கும் சிவசேனா ரவுடிகள் தேவைப்பட்டார்கள். இன்றோ அந்த வேலையை நீதிமன்றமும், போலீசும் பார்த்துக் கொள்கின்றன. இன்றைய உலகமயமாக்கச் சூழலில் நீதிமன்றமே கத்தியின்றி, ரத்தமின்றி தொழிலாளர்களின் உரிமையை பல் வேறு தீர்ப்புகளில் காவு வாங்கியிருக்கிறது. மறுபுறம் அரியானா - குரேகானில் ஹோண்டா நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடியத் தொழிலாளிகளை அடித்து நொறுக்கும் வேலையைப் போலீசே செய்து விடுகிறது.

முன்பு ரவுடிகளின் வழிப்பறி, கொள்ளை, மாமூலில் பங்கு போட்ட போலீசு இன்று தானே அதைச் செய்து வருகிறது. தாராளமயம் பெற்றெடுத்த இன்றையப் பொருளாதாரச் சூழலில் கருப்புப் பணமும், கள்ளப் பணமும், முறைகேடுகளும் பெருக்கெடுத்து ஓடும்போது அவற்றைச் சுற்றிவளைத்து ரவுடிகள் வழியாக பெறுவதற்குப் போலீசுக்கு பொறுமையிருப்பதில்லை. மேலும் நாலாந்தர ரவுடிகளை உருவாக்கி வளர்த்தெடுப்பதில் போலீசின் பங்கே பிரதானமானது. ஆனால் இந்தப் 'போலீசு ரவுடிகளை' கதையாக

**ரவுடியிசத்தின் பின் உள்ள ஆளும் வர்க்கத்தை கவனமாகத் தவிர்த்து விட்டு, அவர்களை அரசியல்வாதிகளுடன் மட்டும் முடிச்சுப் போட்டுக் காட்டுவது வெறும் அசட்டுத்தனமல்ல; திராவிட இயக்கத்தால் அரசியல் தூய்மை கெட்டு விட்டதாகப் புலம்பும் பார்ப்பனக் கும்பலுடைய அரசியல் கண்ணோட்டத்தின் கலைப்பதிப்புதான் இத்தகைய சித்தரிப்பு.**

எடுக்கும் நேர்மையும் தைரியமும் கோடம்பாக்கத்துக் கடவுளர்களுக்கு இருப்பதில்லை. கள்ளப் பணத்திலிருந்து உயிரையும், விபச்சாரத்திலிருந்து உணர்ச்சியையும் பெறும் திரையுலகம் தன் இயல்பிலேயே ஆளும் வர்க்க எடுபிடியாக ' இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

புதுப்பேட்டையில் தாதாக்கள் கஞ்சா விற்றும் விபச்சாரம் செய்தும் பணத்தை அள்ளி அரசியல் கட்சிக்கு கப்பம் கட்டுகிறார்கள். யதார்த்தத்தில் கஞ்சா விற்பவர்கள் மிகச் சாதாரணமானவர்களே. மேட்டுக்குடி விபச்சாரத்தில்தான் இலட்சக்கணக்கில் பணம் புழங்குகிறது. அரசியல் கட்சிகளும் ரவுடிகளை நம்பி பணம் வசூலிப்பதில்லை. தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரசு, பா.ஜ.க. போன்ற பெரிய கட்சிகள் பெரும் முதலாளிகளிடம் தான் பணிவாக நிதி பெறுகின்றன. அதற்குரிய சேவையையும் கடமையோடு செய்கின்றன. ரவுடித்தனத்தின் மூலம் வரும் பணத்தைவிட அதிகாரப்பூர்வமான ரியல் எஸ்டேட், சுயநிதிக் கல்லூரி, மது தயாரிப்பு - விற்பனை, மணல் விற்பனை, 24 மணி நேர மருத்துவமனை, கந்துவட்டி - பைனான்ஸ் போன்றவற்றிலேயே கொழுத்த இலாபம் கிடைப்பதால் பல முன்னாள் ரவுடிகள் இப்படித்தான் மாறியிருக்கின்றனர்.

பம்பாய் முன்னாள் கடத்தல் மன்னனான ஹாஜி மஸ்தான் பின்னாளில் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் போது இதிலேயே இவ்வளவு பணம் கிடைப்பது முன்பே தெரிந்திருந்தால் கடத்த தொழிலே செய்திருக்க மாட்டேன் என்றான். இன்று, இறக்குமதி - ஏற்றுமதிக்கான தடைகள் அனைத்தும் விலக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் கடத்துவதற்கு என்ன அவசியம் இருக்கிறது? ஆகவே நான்காந்தர ரவுடியிசம் அதன் தேவையை இழக்கும் நிலையில் தான் ரவுடிப்படங்கள் அதிகம் வருகின்றன.

படத்தில் ஒரு காட்சியில் கொக்கி குமார் தனது அடியாள் நண்பனது தங்கையின் திருமணத்தை நடத்தி வைக்கப் போய், அடாவடித்தனமாக இவனே தாலி கட்டி விடுகிறான். "நான் கற்பனை செய்திருக்கும் பெண்ணை நேரில் பார்க்கும் போது, அவளை எடுத்துக் கொள்ளும் அதிகாரமும் இருக்கும் போது நான் வேறு என்ன செய்யமுடியும்" என்று தத்துவம் வேறு பேசுகிறான்.

உண்மையான ரவுடிகளுக்கு இப்படி யோசித்துப் பேசத்தெரியாது என்பது ஒருபுறமிருக்கட்டும்; ஆனால் முதல்தர ரவுடிகள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். இல்லையென்றால் சாதாரண குமாஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்த திருபாய் அம்பானியின் தொழில் சாம்ராஜ்ஜியம் பல்லாயிரம் கோடி சொத்துக்களாக எப்படி மாறியிருக்க முடியும்? உண்மையான ரவுடியிசம் தொடங்கும் இடத்தில் புதுப்பேட்டை முடிந்து விடுகிறது.

● வேல்ராஜன்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (ஜூன்'06) முடியும் சந்தா எண்கள்:**

**655, 667, 946, 947, 959, 983, 986, 989, 998, 129, 163, 289, 290, 300, 570, 669, 717, 772, 898, 899, 900, 902, 904, 907, 943, 915, 917, 942, 943, 944, 948, 953, 954, 956, 958, 962, 965, 966, 967, 968, 969, 970, 972, 974, 979, 981, 987, 992, 993, 995, 996, 997, 1001, 1201, 963, 985, 1370**

**அடுத்த இதழுடன் (ஆக.'06) முடியும் சந்தா எண்கள்:**

**1, 21, 288, 293, 321, 643, 645, 665, 1002, 1004, 1005, 1007, 1008, 1009, 1010, 1013, 1016, 1017, 1023, 1026, 1027, 1046, 1460, 984, 1006, 1021.**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.

www.padippakam.com

# அனைத்து சாதியினரும் அர்ச்சகராக...
# சட்டம் மட்டும் போதுமா?
# சாதி ஒழிப்புப் போராட்டம் வேண்டாமா?

"எந்தச் சாதியில் பிறந்தவராக இருப்பினும் தகுதியும், பயிற்சியும் இருந்தால், இந்து அறநிலையத்துறையின் கீழ் வரும் கோயில்களில் அர்ச்சகராகலாம்" என்ற சட்டத்தை தி.மு.க. அரசு மீண்டும் இயற்றியுள்ளது. 1972-இல் இதே சட்டத்தை தி.மு.க. அரசு கொண்டு வந்தபோது அதற்கெதிராக உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்து அரசியல் சட்டம் தங்களுக்கு வழங்கியிருக்கும் பிறப்புரிமையை நிலைநாட்டிக் கொண்டார்கள் பார்ப்பனர்கள். "நமது பிறவி இழிவை பூதக் கண்ணாடியால் பெருக்கிக் காட்டுவது போல வந்திருக்கிறது உச்சநீதி மன்றத் தீர்ப்பு" என்று சாடினார் பெரியார்.

"1972-இல் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை செல்லாத தாக்கி விட்டதாகக் கூறுவது பொய். சொல்லொன்று செயலொன்று என நடந்து கொள்ளும் தி.மு.க., தனது செயலின்மையை நியாயப்படுத்துவதற்காகவே இந்தப் பொய்யைப் பரப்பியிருக்கிறது" என்று தனது நூலில் (ஆலயம், அர்ச்சகர், தீர்ப்புகள்) குறிப்பிடுகிறார் ச.செந்தில்நாதன்.

கேரளத்தில் ஒரு கோயிலில் ஈழவர் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஒரு பார்ப்பனர் தொடுத்த வழக்கை 2002-இல் உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றும் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்படுவதாகவும் தி.மு.க. அரசு கூறுகிறது. "ஆகம விதிப்படி அமைந்துள்ள கோயில்களின் விவகாரம் வேறு என்று உச்சநீதி மன்றம் பிரித்துள்ளதாகவும்" எனவே கேரளத்து தீர்ப்பின் அடிப்படையில் இந்த சட்டத்தைக் கொண்டு வரமுடியாது என்றும் பீஸ் வாங்காமலேயே வாதாடுகிறார் ஆழ்வார்பேட்டை ஜேஷ்டகுமாரன் சோ.

"பாலினம், சாதி, மொழி போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதையும், ஆதிக்கம் செய்வதையும் மத உரிமையாக அங்கீகரிக்க முடியாது; மதம் என்பது முற்றிலும் ஒரு தனிமனிதனின் நம்பிக்கையோடு மட்டும் தொடர்புள்ள தனிநபர் விவகாரம், அது ஒரு நிறுவனமாக இருந்து கொண்டு எந்தப் பிரிவு மக்கள் மீதும் என்ன வகையான ஆதிக்கத்தையும் செலுத்த முடியாது" என்று அரசியல் சட்டம் உண்மையிலேயே மதச்சார்பற்றதாக ஆக்கப்படும் வரை, இந்தப் பிரச்சினை சட்டரீதியாகவே கூட ஓயாது. ஆகம விதிகளுக்கு விளக்கம் கூறும் பார்ப்பனப் புரோகிதனாக உச்சநீதி மன்றத்தை நியமித்திருக்கும் இன்றைய அரசியல் சட்டத்தை மதச்சார்பற்றது என்று கொண்டாடும் கட்சிகள் எதுவும் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசப் போவதும் கிடையாது.

இவை ஒருபுறமிருக்க, சாதி ஒழிப்பு சமத்துவம் என்பதை முன்வைத்துக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை ஒரு சீர்திருத்தம் என்ற முறையில் வரவேற்கலாம். ஆனால், இந்தச் சீர்திருத்தத்தைச் சட்டத்தின் மூலம் மட்டுமே நிலைநாட்டிவிட முடியுமா? அவ்வளவு ஏன், இந்தச் சட்டத்தை அதன் உண்மையான பொருளில் அமல்படுத்திவிட முடியுமா என்ற கேள்விகளுக்கு நாம் நேர்மையான முறையில் விடை காணவேண்டும்.

**பார்ப்பனியமே கலாச்சாரமாக வாழ்வியலாக வலம் வருவதை எதிர்த்து தி.மு.க. போன்ற திராவிடக் கட்சிகள் கருத்தியல் ரீதியாகப் போராடுவது இல்லை. "பிரதோஷத்திற்கு வருகை தரும் தளபதியே வருக!" என்று போஸ்டர் ஒட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் இவர்களின் சமரச 'சன்'மார்க்கமான சன்டி.வி. முதல் தினத்தந்தி வரை அனைத்தும் இந்த பார்ப்பன வாழ்வியலை முன்னின்று பரப்புகின்றன.**

சமுதாயத்தின் ஆதரவைப் பெறாத எந்த சீர்திருத்த சட்டமும் வெற்றி பெற முடியாது. மேலோட்டமாகப் பார்க்கும்போது, பார்ப்பனரல்லாதவர்கள்தான் ஆகப் பெரும்பான்மையினர் என்பதால் இதனைப் பெரும்பான்மையின் ஆதரவு பெற்ற சட்டம் என்று எடுத்துக் கொண்டுவிட முடியுமா?

1972-இல் இச்சட்டம் இயற்றப்பட்டபோது இருந்ததைக் காட்டிலும் இன்று அரசியல் அரங்கில் சாதி உறுதிப்பட்டிருக்கிறது. சாதிச் சங்கங்களும் சாதிக் கட்சிகளும் பெருத்திருக்கின்றன என்பது மட்டுமல்ல, அவை திமிராகவும் வலம் வருகின்றன. இன்று இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் தி.மு.க., பார்ப்பன வெறியர்களான பாரதிய ஜனதாவுடன் எவ்விதக் கூச்சமோ தயக்கமோ இல்லாமல் கூட்டு சேர்ந்ததையும் நாம் மறந்து விட முடியாது.

1972-க்குப் பிறகு இந்த 2006 வரை பார்த்தால் மொத்தச் சமூகமும் முன்பைவிட பார்ப்பனியத்தை உள்வாங்கி எங்கும் பார்ப்பனமயமாய் இருக்கிறது. புதிய புதிய பார்ப்பன வழிபாடுகள், குத்துவிளக்கு பூசைகள், கண்டதற்கெல்லாம் கணபதி ஹோமம், திரள் திரளாய் அனைத்துச் சாதிப் பெண்களும் கையில் பால், அருகம் புல்லுடன் அலைவது, கோயிலில் பிரதோஷம், நகைக்கடையில் 'அட்சய திரிதியை' என்று அலைமோதும் கூட்டம். வாஸ்துவுக்காக கட்டிய வீட்டை இடிக்கும் தமிழன், கிட்னியில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com

கல்லைப் பற்றி தெரியாவிட்டாலும் ராசிக் கல்லை வகைப்படுத்தும் 'சூத்திரன்', பிள்ளைப் பேறு, பெயர் வைத்தல், பெண் சடங்கு, திருமணம், கருமாதி என செத்தே போனாலும் பார்ப்பனியத்திற்குப் பணிந்து தமிழகத்து பிராண வாயுவே பிராமண வாயுவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தலித்துகளும் பார்ப்பானை வைத்துக் கல்யாணம் நடத்துவது, பொங்கலைவிட பார்ப்பன தீபாவளிக்குப் பகட்டு காட்டுவது அதிகரித்துள்ளது. நுகர்வுக் கலாச்சாரத்தைப் பரப்பும் உலகமயமாக்கலுக்கு நெருக்கமாக மக்களைப் பண்டிகை என்ற பெயரில் பிடித்து தள்ளுகிறது பார்ப்பனியம்.

பார்ப்பனியமே கலாச்சாரமாக வாழ்வியலாக வலம் வருவதை எதிர்த்து தி.மு.க. போன்ற திராவிடக் கட்சிகள் கருத்தியல் ரீதியாகப் போராடுவது இல்லை. ''பிரதோஷத்திற்கு வருகை தரும் தளபதியே வருக!'' என்று போஸ்டர் ஒட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் இவர்களின் சமரச 'சன்'மார்க்கமான சன் டி.வி. முதல் தினத்தந்தி வரை அனைத்தும் இந்த பார்ப்பன வாழ்வியலை முன்னின்று பரப்புகின்றன. அன்றாட வாழ்க்கையில் சாதி, தீண்டாமை கொடி கட்டிப் பறக்கிறது. குடிநீர்க் குழாய்களைக் கூட சாதி பிரிக்கிறது. இவைகளை எல்லாம் சமூக ரீதியில் கீழிருந்து போராடி ஒழிக்காமல் அதற்கான வேலைகளைச் செய்யாமல் வெறும் சட்டத்தை மட்டும் காட்டி பெருமை பாராட்டிக் கொள்வது பிரச்சினையைத் தீர்க்காது.

இச்சட்டத்தைப் பற்றி பக்தர்கள், குறிப்பாகப் பார்ப்பனரல்லாதவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறியும் பொருட்டு தமிழகத்தின் பல்வேறு கோயில்களில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தினோம். இதன்படி இச்சட்டத்தை எதிர்க்கும் பார்ப்பனரல்லாதவர்கள் சிறுபான்மையினர்தான். எனினும், எதிர்ப்பவர்களிடம் தென்படும் மூர்க்கமும் கோபமும் ஆதரிப்பவர்களிடம் இல்லை. ஆதரவு என்பது செயலூக்கமற்ற ஆதரவாகவே உள்ளது. ''எல்லோரும் வரவேண்டியதுதான்; நம்மாளுகளாலயும் முடியும்'' என்ற வகையிலோ, தி.மு.க. அனுதாபி என்பதால் கலைஞர் போட்ட சட்டத்தை ஆதரிப்பது என்பதாகவோதான் ஆதரவு இருக்கிறது.

''ஆதரிக்கிறேன். காரணம் எல்லாம் தெரியாது. ஆனால், அர்ச்சகரில் இட ஒதுக்கீடு கூடாது ஏனென்றால், கோயில்லேயும் சாதிப் பிரச்சினை வரும்'' (தாமோதரன், வயது: 23, சாதி: யாதவர், பச்சையப்பன் கல்லூரி மாணவர்)

''நான் எதிர்க்கிறேன், காலம் காலமாக இருப்பதை ஏன் மாற்ற வேண்டும்? அவங்கதான் சுத்தமா இருப்பாங்க; நாடி-கறி தின்றோம்'' (சதீஷ், வயது:23, 'வன்னியர்' புதுக்கல்லூரி மாணவர், சென்னை.)

''இந்தச் சட்டம் சரியானது, இதற்குத் தகுதி தேவையில்லை. தாழ்த்தப்பட்டவரும் அர்ச்சகராகலாம். தி.மு.க.வுக்குத்தான் ஓட்டுப் போட்டேன். தினசரி கோயிலுக்கு வருவேன்'' என்கிறார் நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மாரியம்மன் கோயிலுக்கு வந்த ஐ.டி.ஐ. மாணவர் முரளி.




**மக்களிடமிருந்து பார்ப்பன இந்து மதவெறியர்களைத் தனிமைப்படுத்திய ம.க.இ.க.வின் போராட்டம்!**

டெய்லராக இருக்கும் ஆனந்தோ, ''அர்ச்சனை செய்வதற்கு பார்ப்பனர்கள்தான் தகுதியானவர்கள். அவர்கள் தான் சுத்தமாக உள்ளனர். நம்மால் முடியாது'' என்றவர் தன்சாதி யாதவர் என்றார்.

வேலூர், டைல்ஸ் ஒட்டும் வேலை செய்யும் கவுண்டரான இராமச்சந்திரன் (வயது 39) என்பவருடைய கருத்தோ ''எஸ்.சி எல்லாம் வந்தா எப்படி மற்ற சாதிக்காரங்க கோயிலுக்கு வருவாங்க. அந்த இடத்துக்கு அவர்கள்தான் (அய்யர்). மத்த சாதி வந்தா சுத்தபத்தம் இருக்காது.'' வேலூர் விருதம்பட்டு மோட்டூரைச் சேர்ந்த செங்குந்தரான ஆட்டோ ஓட்டுநர் மூர்த்தி (வயது 52) இன்னும் தீவிரமாக ''அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது தப்பானது. உன்னைப் பற்றி உனக்குத்தான் தெரியும், என்னைப் பற்றி எனக்குத்தான் தெரியும். அனைவரும் எப்படிச் சமமாக முடியும் இது சரியில்லை'' என்று தத்துவமே படைக்கிறார்.

பெண்கள் அர்ச்சகராகலாமா என்ற கேள்விக்கு கூட பலரின் பதில் பார்ப்பனக் கண்ணோட்டம்தான். ''பெண்கள் ஆவதை ஏற்க முடியாது. அது செட் ஆவாது, மாதவிலக்குப் பிரச்சினை, திருமணம் இவைகளால் வரமுடியாது'' இது வேலூர் தோட்டப்பாளையம், துணிவியாபாரம் செய்யும் ஒரு நாயுடுவின் கருத்து. ''பெண்கள் அர்ச்சகராக முடியாது சில பிரச்சினைகள் உள்ளன'' இது பி.ஏ. படித்த மகேஸ்வரி (தஞ்சை) கருத்து.

''மாதவிடாய் துணிபட்டால் துளசி செடியே கருகிவிடும்'' என்கிறார் இன்னொருவர்.

வள்ளி தெய்வானை சமேதராக நிற்கும் முருகப் பெருமானின் மூஞ்சி தீய்ந்து கருகிப் போயிருப்பது இதனால் தானா? காமாட்சியும் மீனாட்சியும் சாமியாகவே சமைஞ்சு நிக்கையில் பொம்பள பூசாரி மட்டும் தப்பா? பொம்பள சாமிக்கு ஆம்பிள பூசாரி துணி மாத்தலாமா?'' என்பன போன்ற கேள்விகளைப் பெண்கள் கூட எழுப்புவதில்லை. மாதவிலக்கு என்பது வியர்வை, சிறுநீர் போல பெண்களுடைய உடலுறுப்பின் ஒரு இயற்கைச் செயல்பாடு என்ற அறிவியலுக்குப் பதில் பார்ப்பனியத்தின் தீட்டு, புனிதம், சுத்தம் என்ற கருத்தும் ஆகவே பெண்கள் கூடாது என்பதுமே பெண்கள் உள்ளிட்ட அனைவரின் பொதுக்கருத்தாக இருக்கிறது.

''ஆண் சுத்தம் - பெண் அசுத்தம், பார்ப்பான் சுத்தம் - சூத்திரன் அசுத்தம், மரக்கறி சுத்தம் - புலால் அசுத்தம், சமஸ்கிருதம் சுத்தம் - தமிழ் அசுத்தம்'' என்ற இக்கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் ஒரு கோட்பாடாகவே முன் வைக்கிறது பார்ப்பனியம். இவற்றை ஒருங்கிணைந்த முறையில் முறியடிப்பதன் மூலம்தான் பார்ப்பனியத்தை கருத்தியல் தளத்தில் வீழ்த்த முடியும். இவற்றில் ஒன்றை ஏற்று இன்னொன்றை மறுப்பவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

வாயிற்கதவை மூடிவிட்டு சன்னல் வழியாகப் பார்ப்பனியத்தை உள்ளே அனுமதிக்கிறார்கள் என்பதே உண்மை.

வரவிருக்கும் சட்டத்தின்படி பார்ப்பனரல்லாதவர்களில் தகுதியான அர்ச்சகர் என்பவர் யார்? அவர் வழிபாட்டு முறைகளை கசடறக் கற்றுத் தேறியிருந்தால் போதுமா, அல்லது அவர் கறி தின்னாதவராகவும் இருக்க வேண்டுமா? இந்த விசயத்தில் ஆகமம் என்ன சொல்கிறதோ அதைத்தான் பின்பற்ற வேண்டியிருக்கும். ''அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதை ஆதரிப்பதாக'' விசுவ இந்து பரிசத் கூறுவதற்குக் காரணம் பெரும்பான்மை இந்துக்களிடமிருந்து தனிமைப்பட்டுவிடுவோம் என்ற அச்சம் மட்டுமல்ல. சமூகத்தில் வேரோடியுள்ள பார்ப்பனக் கருத்துக்களை அவ்வளவு எளிதாகப் பிடுங்கி விட முடியாது என்ற நம்பிக்கைதான் இச்சட்டத்தை ஆதரிக்கும் 'தைரியத்தை' பார்ப்பனக் கும்பலுக்கு வழங்கியிருக்கிறது.

''கோயிலில் சைவ உணவையே நைவேத்யமாகப் படைப்பது அசைவ உணவு சாப்பிடுபவர்களை இழிவுபடுத்துவதாக உள்ளது எனக் கூறி இனி எல்லாக் கோயிலிலும் புளியோதரை, சர்க்கரைப் பொங்கலுடன், சிக்கன் மட்டன் கருவாடு போன்ற நைவேத்யங்களையும் செய்யலாம்'' என்று சைவத்தை உசுப்பி விடுகிறார் சோ.

அதற்கான அடிப்படையும் சமூகத்தில் உள்ளது. ''கோயிலில் கிடா வெட்டை ஏற்க முடியாது'' என்கிறார் தஞ்சை கண்டியூரைச் சேர்ந்த நடத்துனர் அறிவழகன் (வயது 37) தாழ்த்தப்பட்டவரான இவர் சட்டத்தை வரவேற்றாலும், வழிபாட்டில் பார்ப்பனச் சடங்கை முன்வைக்கிறார். வன்னியரான துரை பி.ஏ. (வயது 26) காட்பாடியைச் சேர்ந்தவர், ''முடிவெட்டும் வேலை செய்யும் ஒருவர் அர்ச்சகராக முடியாது. காரணம் மாமிசம் சாப்பிடுவார்'' என்கிறார். மேலும் ''இந்து மதம் மேன்மையான மதம், பழக்கத்தை மாற்றக்கூடாது'' என்கிறார்.

அஞ்சப்பரிலும் அரசப்பரிலும் அன்றாடம் பல ஜீவராசிகள் பார்ப்பன அம்பிகளின் வயிற்றில் கதிமோட்சம் தேடுவதும், தில்லை வாழ் அந்தணர்கள், அன்றாடம் இரவு நேரத்தில் ஆடல் வல்லானின் சந்நிதியில் சரக்கடித்து கறி தின்று குத்தாட்டம் போடுவதும் அவருக்குத் தெரியாது போலும்!

பார்ப்பனரல்லாதார் என்பவர்களே ''கிடா வெட்டுவதும், கறி சாப்பிடுவதும், இன்டிசென்ட் சார்'' எனும் போக்கு உள்ளது. ஜெயலலிதா கிடா வெட்டுத் தடைச்சட்டம் கொண்டு வந்த போது 'இது எங்கள் வழிபாட்டுரிமை' என்று எழுந்து போராடவில்லை. ''சைவம் உசத்தி, கவுச்சி கீழா? எவன் சொல்வது?'' என்று கருத்துரீதியாக மக்கள் போராடவில்லை.

**தனிக்கிணறு, தனிக்குவளை, தனிச்சுடுகாடு என்று பார்ப்பனிய சித்தாந்தம் நடைமுறையில் கோலோச்சும்போது, மேலிருந்து போடப்படும் சட்டம் என்ன லட்சணத்தில் அமலாகும்? கண்டதேவி தேர் வடம் பிடிக்க தலித்துகளுக்குள்ள உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தவுடனே நாட்டார்களெல்லாம் சட்டத்தின் ஆட்சியைப் பணிந்து ஏற்றுக் கொண்டு விட்டார்களா?**

இத்தகைய போராட்டம் இல்லாததால்தான் இடஒதுக்கீடு பிரச்சினையிலும் கூட 'தகுதி - திறமை' என்று பார்ப்பன மேல்சாதிக் கும்பல் ஏறி ஓட்டுகிறது. 'பெரும்பான்மை'யோ, ''எங்களுக்கும் திறமை இருக்கிறது'' என்று அவர்களுடைய கேள்விகளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ''மணியடிக்கிறது ஏதோ சாதாரண வேலைன்னு நினைக்காதே, அதற்கு அபார தைரியம் வேணும். நீ போய் அடிச்சுப் பாரு, உன்னால முடியாது'' என்று கருத்துக் கணிப்பு எடுக்கப் போன தஞ்சைத் தோழரிடம் ஆத்திரமாக வெடித்திருக்கிறார் ஒரு பெரிய கோயில் அர்ச்சகர். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் எல்லாக் கோயில்களிலும் சாதிக் கலவரம் நடக்கும் என்று எச்சரித்திருக்கிறது சிவாச்சாரியார்கள் சங்கம்.

''உண்மையிலேயே சீர்திருத்தத்தை அமல்படுத்துவதாக இருந்தால், தலித்துகளை மட்டுமே அரச்சகர்களாக்குவோம் என்று சட்டம் போடவேண்டும். அப்படி சட்டம் போட்டால், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் அதை ஏற்றுக் கொள்வார்களா?'' என்று தனக்கேயுரிய பார்ப்பன நரித்தனத்துடன் கலவரத்திற்கு அடிக்கொள்ளி வைக்கிறார் சோ.

தனிக்கிணறு, தனிக்குவளை, தனிச்சுடுகாடு என்று பார்ப்பனிய சித்தாந்தம் நடைமுறையில் கோலோச்சும்போது, மேலிருந்து போடப்படும் சட்டம் என்ன லட்சணத்தில் அமலாகும்? கண்டதேவி தேர் வடம் பிடிக்க தலித்துகளுக்குள்ள உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தவுடனே நாட்டார்களெல்லாம் சட்டத்தின் ஆட்சியைப் பணிந்து ஏற்றுக் கொண்டு விட்டார்களா?

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் கூடத்தான் உள்ளது. அதை முறையாக அமல்படுத்தினால் இந்நேரம் தமிழகத்தில் முக்கால்வாசி ஊர்ப் பெரிய மனிதர்கள் உள்ளே இருப்பார்கள். சிறைச்சாலை பத்தாது. கடுமையாகப் போராடி புகார் கொடுத்தாலும் கைது செய்யப்பட்ட சாதி வெறியர்கள் எத்தனை பேர்? பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டங்கள் என்ன வகையில் பயன்பட்டன? அதனால் தான் சொல்கிறோம், அனைத்துச் சாதி அர்ச்சகர் சட்டத்தைப் போட்டு ஒரு கருணாநிதி கையிலும், சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கையிலும் கொடுத்துவிட்டு 'சட்டம் பார்த்துக் கொள்ளும்' என்று நாம் விட்டுவிடும் விசயம் அல்ல இது!

சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தை மாதக்கணக்கில் பிரச்சாரம் செய்து பார்ப்பன ஆதிக்கக் கருத்துக்களை மக்களிடம் தோலுரித்து தமிழக அரசியல் களத்தில் ஒரு கருத்துப் போராட்டத்தை விதைத்தது - *மக்கள் கலை இலக்கியக் கழகம். தமிழ் மக்கள் இசை விழா* நடத்தி திருவையாறு பார்ப்பனக் கச்சேரியின் தீண்டாமை அதிரப் பறை அடித்து நுழைந்து பார்ப்பனியத்தை விவாதப் பொருளாக்கியது. சாதி தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் நெடிய பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்தோம். தனிக்குவளையையும் உடைத்தோம்.

இவைகள் ஏதோ தன்னிறைவுப் பட்டியல்கள் இல்லை. இவ்வகையான மக்கள் திரள் வேலைகளின் அடிப்படையில் சமூகத்தில் பார்ப்பனிய எதிர்ப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என்பதற்கான செயல் உதாரணங்கள். ஏனென்றால், இந்தப் பார்ப்பனிய ஆதிக்கம் பக்தி வலையாய், திருக்கோயில்களைச் சுற்றி நிலவுடைமையாய், அர்ச்சனைத் தட்டுக் கடைகளாய், பஞ்சாமிர்தம், பலகாரம், பூ, பழமென


படிப்பகம்

www.padippakam.com

வணிகமாய் அணிதிரண்டுள்ளது. இதில் ஆதாயம் அடையும் பிரிவினரின் பார்ப்பனியக் கருத்தைத் தாக்காமல், தகர்க்காமல் பார்ப்பனியத்தை வெல்ல முடியாது.

சட்டம் வந்துவிட்டது. எல்லாம் தானாகச் சரியாகி விடும் என்று இடஒதுக்கீட்டின் மூலம் சாதி ஒழிப்பு, தேர்தல் மூலம் தலித் அதிகாரம் என்று மேலிருந்து சட்டத்தைப் பிடித்துக் கொண்டு தொங்குவதையே சாதனை என்பது நீர்த்துப்போன அனுபவம் என்பதே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சாதி ஆதிக்கச் சமூக அமைப்பில் ஏற்கெனவே மாவட்டச் செயலாளர்களை அந்தந்த மாவட்டத்து ஆதிக்க சாதிப்படி நியமிப்பதுபோல, கோயில் டிரஸ்டிகளைப் போடுவது போல, கோயிலிலும் அந்தந்த வட்டார ஆதிக்க சாதிப் பூசாரிகளை நியமித்துக் கொள்வார்கள் ஓட்டுச் சீட்டு அரசியல் சக்திகள். தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகராவதைத் தவிர்ப்பதற்காக உயர் சாதியினர் உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் என்று பார்ப்பானை முன்னிறுத்தும் தந்திரமும் நடக்கும். இல்லையேல் தாழ்த்தப்பட்டவரை "நீ கையெழுத்துப் போட்டு சம்பளத்தை மட்டும் வாங்கு. பூசைக்கு வராமல் ஒதுங்கிக் கொள். மத்ததை நாங்க பாத்துக்குறோம். தட்டில் விழும் தட்சணையை மூணாய் பங்கு போட்டுக் கொள்ளலாம்" என்ற வழக்கமான வடிகால் முயற்சி நடக்கும்.

பார்ப்பான் சூடம் காட்ட, பி.சி. தேங்காய் உடைக்க, எஸ்.சி. வெளியே நந்திக்கு தண்ணி ஊத்த, நடைமுறையில் பிரச்சனை பழைய சாதி ஆதிக்க வழிமுறைகளுக்கு ஏற்ப தானாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

நீரை இலக்கு நோக்கிப் பாய்ச்சாத போது, அது தானாக வழி தேடிக் கொள்வது போல இந்தச் சட்டமும் பார்ப்பனச் பாசனத்திற்கே வடிகாலாகும்.

"சாத்திரத்தைச் சுட்டு, சதுர்மறையைப் பொய்யாக்கி"... என்ற பத்திரிகிரியாரின் கோபமும், "தூங்குறியா, நடிக்கிறியா ரங்கநாதா, தொட்டு உன்னைப் பார்க்கட்டுமா" என்று அரங்கநாதனுக்கு ம.க.இ.க. எழுதிய பாசுரத்தின் எள்ளலும் கொண்டு சமூகத்தைத் தட்டி எழுப்பாவிடில் இந்த அரசாங்கச் சட்டம் காகிதச் சட்டமாகவே இருக்கும். ஆகமச் சட்டமே அமலில் இருக்கும்.

**● துரை. சண்முகம்**

**கருத்துக் கணிப்பு: சென்னை, வேலூர், தஞ்சை, திருச்சி, ம.க.இ.க. தோழர்கள்.**

## ஐ.ஐ.டி. - ஐ.ஐ.எம்.:

# தேசத்துரோகிகள் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி

"அசையும் மலைகள், நகராத ஆறுகள், பூச்சொரியும் நறுமணமுள்ள முள்காடுகள்" - பூமியில் இப்படியும் இடம் உண்டோ? உண்டு. சென்னை ஐ.ஐ.டி.க்கு வந்தால் பார்க்கலாம்.

சாதித் திமிர் நிரம்பி வழிய அசையும் மலைகளாக இயக்குனரும், பார்ப்பனப் பேராசிரியர் குழுவும், மேல்சாதிக் கூஜாக்களும், எதிர்காலத்தில் வெளிநாடு செல்லும் கனவுகளுடன் மாணவ 'அவாள்'களும்; அசையாத ஆறுகளாக காங்கிரீட் கட்டிடங்கள் - அவற்றுக்கு கங்கா, யமுனா, சரஸ்வதி, கோதாவரி, காவிரி என்றும் ஓடும் ஆறுகளின் நாமகரணங்கள் உண்டு; மிச்ச மீதி கண்ணுக்கெட்டிய தொலைவுவரை முள் கம்பி வேலிக்குள் முள்காடுகள் உண்டு. ஒவ்வோர் ஆண்டும் மைய அரசு விரிவான வளாக நிர்வாகத்துகுகாகவே 20 கோடி சிறப்பு நிதி தருகிறது. என்ன அபாரமான சாணக்கிய மூளை! முள்காட்டுப் பராமரிப்புக்கு 20 கோடி!

- இதுதான் ஐ.ஐ.டி. சென்னை. ஒவ்வோராண்டும் 100 கோடி வரை மைய அரசு நிதி கொட்டுகிறது. அத்தனையும் மக்கள் வரிப்பணம். இந்த ஐ.ஐ.டி. உயர்கல்வி மையங்களை மைக்ரோ சாஃப்ட் முதலாளி பில்கேட்ஸ் "மிகச் சிறந்த மனிதவள மூலதனத்தின் புதையல் மாளிகை" என்று பாராட்டினார். பாராட்டிய இடம் அமெரிக்க சிலிக்கான் பள்ளத்தாக்கில் நடந்த ஐ.ஐ.டி. 50-ஆம் ஆண்டு மாநாடு. பில்கேட்ஸ் வாயால் தங்களுக்கு 'மூலதனம்' என்ற பட்டம் கிடைத்த பெருமையைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போகிறது. ஐ.ஐ.டி. அக்கிரகாரம்.

● ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். இரண்டின் பிறப்பும் வரலாறும் 'பணக்கார சோஷலிஸ்டு' நேருவோடு சம்பந்தமுள்ளது. 'இந்தியாவின் வருங்காலத்தை இங்கே பார்க்கிறேன்!' என்றார் நேரு, கரக்பூர் ஐ.ஐ.டி.யைத் திறந்து வைத்தபோது. 1946-லேயே பிரிட்டிஷாரால் அமெரிக்க மாசாசூட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தின் மாதிரியில் அமைக்கப்பட்டதே ஐ.ஐ.டி. 1950-களின் பின்பாதியில் அமெரிக்க நிர்வாகப் பள்ளியைப் பார்த்து வடிவமைத்ததுதான் ஐ.ஐ.எம்.

ஆரம்பத்தில் போலிச் 'சுயசார்பு' சூரத்தனமாக விளம்பரம் செய்யப்பட்டுப் பிறகு பார்ப்பன உன்னதமும், கார்ப்பொரேட் கம்பெனி உன்னதமும் கலந்து இவை வளர்க்கப்பட்டன. ஐ.ஐ.டி. - கரக்பூர், மும்பை, சென்னை போன்று மொத்தம் 7 இடங்களில்; ஐ.ஐ.எம். - அகமதாபாத், பெங்களூர் போன்று மொத்தம் 7 இடங்களில்.

ஒவ்வொரு ஐ.ஐ.டி. கிளையும் பெறும் ஆண்டு நிதி : சுமார் 100 - 130 கோடிகள்.

ஐ.ஐ.டி. பட்டமுன்படிப்பு மாணவரின் கட்டணத்தில் அரசின் உதவித் தொகை : 80%

மேற்பட்டப்படிப்பு படிப்பவர்க்கு : உதவிச் சம்பளம்

மாணவர் கட்டணம் (விடுதி, உணவு, கல்விச் செலவில் ஒரு பகுதி) : ஆண்டுக்கு ரூ. 50,000/- மட்டுமே

● ஐ.ஐ.டி. மாணவர்கள் அனுபவிக்கும் வசதிகளை ஒரு பார்வை பார்க்கிறீர்களா? சலவை இயந்திரம், டி.வி. உட்பட வசதி நிறைந்த விடுதி, மிகப் பெரிய உணவுக்கூடங்கள், மையநூலகம் - நெட் வசதிகள், கல்லூரிக்காக 10, 15 மைதானங்கள், தவிர விடுதிக்காக தனி மைதானங்கள், கோயில் (மசூதி கிடையாது என்பது தனி விசயம்), சர்ச் வசதிகள், திறந்தவெளி நாடக/சினிமா அரங்கு, இலக்கிச் சங்கங்கள், தொழில் நுட்ப விழா (ஷாஸ்த்ரா), கலாச்சார விழா (சாரங்), இசைக்காக அக்கிரகார மாடலில் 'ஸங்கீத ஸபா', வானியல் சங்கம், விவேகானந்தர் விவாத மன்றம் 'பிரகிருதி' எனப்படும் 'வனவிலங்குகள் கழகம்' — இவ்வளவும் ஐ.ஐ.டி.யில் உற்பத்தி செய்யப்படும் தரத்துக்கு நாம் நமது வரிப்பணத்திலிருந்து கொடுக்கும் விலை.

ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு பெறுவதற்கே தடுமாறும் அரசுப்


படிப்பகம்

www.padippakam.com

பொறியியல் கல்லூரிகளையோ, அல்லது "இடிந்து காரை விழும் கட்டிடம், ஒரேயொரு குண்டு பல்பு, மொத்த விடுதிக்கும் ஒரே கழிப்பறை, ஓடாத மோட்டார், பக்கெட்டில் சாம்பார், வேகாத புழுத்தரிசி" போன்ற வசதிகளுடன் இயங்கும் தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளையோ இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். 50 லட்ச ரூபாய் செலவில் இந்து நாளிதழின் கோலாகலமான கவரேஜுடன் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஐ.ஐ.டி.யின் 'சாரங்' கலை விழாவையும், 500, 1000-த்துக்கே அல்லாடும் அரசுக் கல்லூரிகளின் முத்தமிழ் விழாக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஐ.ஐ.டி தரத்தின் வக்கிரம் புரியும்.

• ஐ.ஐ.டி. நேரடியாகக் குடியரசுத் தலைவரின் கீழ் வருகிறது. கல்வி அமைச்சர், சில எம்.பி.க்கள், அரசின் சில துறைத்தலைவர்கள் இடம் பெறும் போர்டு சும்மானாச்சும்தான். உண்மை அதிகாரம் படைத்தவர்கள் ஐ.ஐ.டி. கவர்னர்களும், இயக்குனர்களும்தான். டைரக்டர் நினைத்தால் புதுப்பதவிகளில், பதவி உயர்வுகளில் ஆட்களைப் போடலாம். டாக்டர் சுவாமி என்ற இயக்குனர் 200 வகையான புதிய பதவிகளை அவ்வாறு உருவாக்கினார். சென்னை ஐ.ஐ.டி. ஆசிரியர்கள் விகிதம் ஓர் எ.கா. தாழ்த்தப்பட்டவர்கள் - 2 சதம்; பிற்படுத்தப்பட்டவர்கள் 20-25 சதம்; பார்ப்பனர் சுமார் 73 சதம். இச்சுயேச்சை நிர்வாகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களில் தகுதியானவர்களுக்குக் கூட பரிசு - பெயர் - புகழ் செல்வதில்லை; தலித் மாணவர்கள் என்றால் வருவதோ, வளர்வதோ, ஆசிரியராக உயர்வதோ முயற்கொம்பு. டைரக்டர் ராச்சியம் பார்ப்பன ராச்சியம்.

சென்னை ஐ.ஐ.டி.யில் இதுவரை இருந்த, இருக்கிற இயக்குநர்கள் வரை அனைவர் மீதும் ஏராளமாய் ஊழல் வழக்குகள். கவுன்சில் சேர்மன் விதை நெல் திருடன் எம்.எஸ். சாமிநாதன் போன்றவர்கள் இருந்த இடம் இது என்பதைக் கவனம் கொள்ளவும். தவிர, பன்னாட்டுத் தொழிற்கழகங்களோடு சரச சல்லாபங்கள் வெகு தாராளம் - தற்போதைய ஐ.ஐ.டி. சென்னை இயக்குனர் ஆனந்தின் உபயத்தில் ஐ.ஐ.டி. தளம் ஒன்றையே கார்ப்பொரேட் அலுவலகத்திற்கு குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். தவிரவும், பிற்படுத்தப்பட்ட, தலித் ஆசிரியர்கள் அவரது பார்ப்பனக் கொடுமை - சுரண்டலின் கீழ் அல்லப்படுவது சொல்லத்தரமல்ல.

முதல் வகுப்புப் பட்டப்படிப்பு, 158 ஆய்வு நூல்கள், 5 டாக்டர் பட்ட

**50 லட்ச ரூபாய் செலவில் இந்து நாளிதழின் கோலாகலமான கவரேஜுடன் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஐ.ஐ.டி.யின் 'சாரங்' கலை விழாவையும், 500, 1000-த்துக்கே அல்லாடும் அரசுக் கல்லூரிகளின் முத்தமிழ் விழாக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஐ.ஐ.டி. தரத்தின் வக்கிரம் புரியும்.**

மாணவர்களுக்கு வழிகாட்டி என்று எல்லாத் தகுதிகளும் இருந்தும் சென்னை ஐ.ஐ.டி.யின், டாக்டர் வசந்தா கந்தசாமி உயர்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக, எம்.எஸ்.ஸி இரண்டாம் வகுப்பில் தேறிய பார்ப்பனரே அந்த இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது பார்ப்பனக் கொடுங்கோன்மைக்கு ஒரு உதாரணம்.

• 2005-2006-இல் மட்டும் 136 அந்நியக் கம்பெனிகள் ஐ.ஐ.டி. வளாகத் தேர்வுக்கு வந்தன. சீமென்ஸ், அமெரிக்கன் மெகாடிரெண்ட்ஸ் (இந்தியக் கிளை), மன்ஹாட்டன், மெக்கின்ஸே, மோட்டோரோலா, மற்றும் அந்நியக் கூட்டு உள்ள இன்போசிஸ், இன்டெல், சி.டாட், ஐ.டி.சி. போன்றவை அவை.

இந்தியக் கல்வியின் எதிர்காலத் திட்டங்களையும் உலக வங்கியே வழி நடத்துகிறது. "உயர் கல்வி என்பது சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியம். பொறுப்புள்ள பதவிகளுக்கு தேவைப்படும் அறிவும் திறமையும் கொண்டவர்களை வளர்க்கும் பொறுப்பு உயர் கல்வி நிறுவனங்களுக்கே உண்டு. இதில் முதலீடு செய்தால் உழைப்பவரின் உற்பத்தித் திறன் கூடும். வறுமையின் கடுமையைத் தணிக்கக் கூடிய நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிக்கும் இது அவசியம்" என்கிறது உலகவங்கி அறிக்கை. அறிவு திறமை குறித்த பார்ப்பனியத்தின் வாதமும் பன்னாட்டு மூலதனத்தின் வாதமும் ஒன்றுபடும் புள்ளி இதுதான். கடந்த 40 ஆண்டுகளில் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்.-இல் உலக வங்கியின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட 1,10,000 'திறமைசாலிகள்' அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் ஓடியிருக்கிறார்கள் - நம்முயை வறுமையின் கடுமையைத் தணிப்பதற்கு!

• உள்நாட்டு மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்பதற்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் இந்த தேசபக்தர்கள், வெளிநாட்டு மாணவர்களை ஐ.ஐ.டி.யில் சேர்த்துக் காசு பண்ணலாம், வெளிநாடுகளிலேயே ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற நிறுவனங்களைத் தொடங்கி வியாபாரம் செய்யலாம் என்று அரசுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். உலகத்தரம் வாய்ந்த ஐ.ஐ.டி. பிராண்டை காசாக்கும் இந்தத் திட்டம் பன்னாட்டு முதலாளிகளின் மூளையில் உதித்தது. அதைப் பார்ப்பன மூளைகள் வழிமொழிகின்றன.

காட்ஸ் ஒப்பந்தப்படி (வணிகம் சார்ந்த சேவைகள் தொடர்பான பொது ஒப்பந்தம்) கல்வியும் மருத்துவமும் தனியார்மயமாக்கப்பட வேண்டிய வணிகச் சரக்குகள். அந்த வகையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் நம் நாட்டில் கடைபோடவும் நாம் அனுமதித்தாக வேண்டும்.

பின்னே, "நாசாவிலேயும் பென்டகன்லேயும் நம்மவாளுக்கு அவன் வேலை கொடுக்கும்போது, அவாளுக்கு நாம படிப்பு சொல்லித்தரப்படாதா? பிரிட்டிஷ் மெடிக்கல் அசோசியேஷன்ல நம்மவாதான் எண்ணிக்கையில நம்பர் ஒன். அந்த விசுவாசத்துக்கு அந்த நாட்டுக்காராளுக்கு நாம இங்கே வைத்தியம் பார்த்துப் பணம் பண்ணக் கூடாதா? போன வருஷம் மட்டும் ஒண்ணரை லட்சம் ஃபாரின் நோயாளிகள் இந்தியாவில வைத்தியம் பாத்து டாலரைக் கொட்டிருக்கான்னா அது தேசத்துக்குப் பெருமை இல்லையா? எய்ம்ஸ்-லயும், ஜிப்மர்லயும் படிச்சுப்புட்டு பெரியாஸ்பத்திரில போய் குப்பை கொட்ட முடியுமா என்ன? - இதுதான் தகுதி, திறமை, தரம் பேசுவோரின் வாதம்.

மருத்துவர்கள் ஏற்றுமதி, நோயாளி இறக்குமதி! அறிவாளிகள் ஏற்றுமதி, அறிவு இறக்குமதி - இவர்களுக்கு நம் வரிப்பணத்தைக் கொட்டியழுவது இந்தியக் குடிமகனின் தலைவிதி!

(ஆதாரம்: ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். வலைத்தளங்கள்; ஹார்வர்டு பல்கலைக் கழக ஆய்வறிக்கை, 2004; சனத்கவுல், ஐ.சி.ஆர்.ஐ.இ.ஆர்., டெல்லியின் ஆய்வுக் கட்டுரை; மற்றும் ஐ.ஐ.டி. சென்னை - பிற்படுத்தப்பட்டோருக்கான சங்கம்.)


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கால் பகுதியில் பெற்ற நிகர லாபம் 390 கோடி ரூபாயாகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது 85 சதவீதம் அதிகமாகும். உண்மையில் சமாதானம் அமைதி என்பதை வெளிநாட்டு மூலதனமே தனக்கு இசைவாகப் பயன்படுத்தியுள்ளது. (பக்.5)''

''2003 (ஜன-பிப்) தை மாதம் இலங்கைத் துறைமுகத்துக்குள் 22,258 கப்பல்கள் வந்தன. இது வழமையை விட 12 சதவீதம் அதிகமாகும். ஏற்றி இறக்கிய கொள்கலன்கள் 1,46,737 ஆகும்.

அமெரிக்க பினாமியான நார்வே மத்தியஸ்தம் மூலம் ''இடைக்கால தன்னாட்சி அதிகாரம்'' என்று ஏகாதிபத்தியங்கள் முன் புலிகள் செய்திருக்கும் சமாதானம் என்பதும் எப்படி மக்கள் நலனுக்கு எதிராக உள்ளது என்பதை பக்.170-இல் தொடங்கும் அத்தியாயங்கள் விவரிக்கின்றன. புலிகளின் பொருளாதாரக் கொள்கை, மக்களிடம் வரி அளவிடும் முறை, தேசிய உற்பத்தியின் சூறையாடல் போன்ற விவரங்கள் ஈழத்தைச் சுற்றிப் பார்க்கப் போய் வரும் தமிழகத்து 'புலிச்சுற்றுலா' நபர்களின் நூல்களில் மறைக்கப்படும் உண்மைகளாகும்.

''.... மூன்றாவது தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவை புலிகள் 20.2.2004 அன்று கிளிநொச்சியில் நடத்தினர். அந்தத் தேசிய விழாவில் கொக்கோ கோலா விளம்பரங்கள், புலிக் கொடியை விட பெரிய அளவில், புலிக்கொடியின் பின்னணியில் வடிவமைக்கப்பட்டிருந்தது. (பக்.112)''

''இனச்சண்டையில் பாட்டாளியாவது வர்க்கமாவது, அதெல்லாம் நடக்காது. களத்தில் நின்று பார்த்தால்தான் புரியும்'' என்று வர்க்க ஒற்றுமைக்கு எதிராக வக்கணை பேசுகிறார்கள் வவுனியா கைடுகள். ஆனால், பன்னாட்டுக் கம்பெனிகளுடன் வர்க்க ஒற்றுமை கொள்வது மட்டும் சாத்தியம் என்பதைத் தமது ஏகாதிபத்திய சேவையின் மூலம் புரிய வைத்திருக்கிறார்கள் புலிகள்.

''அண்மையில் பிரபாகரனின் மகன் வெளிநாடு சென்று கல்வி கற்க இலங்கை அரசின் ஊடாக கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) எடுத்த செய்தி மெதுவாக கசிந்துள்ளது. இதுவரை புலிகள் இதை மறுக்கவில்லை. யுத்தத்தை மிகக் கேடாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு... மண்ணெண்ணையை விற்று மக்களையே கொள்ளையடித்து கோடீசுவரனான ஆளும் கட்சியின்... மகேஸ்வரன்... பிரபாகரனின் மகளின் கடவுச்சீட்டை நேரடியாக பெற்றுக் கொடுத்ததாக, தகவல் கசிகிறது. இவன் இந்துக் கோயில்களின் தர்மகர்த்தாவாகவும், சாராயக் கடைகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் ரவுடியாகவும் இருக்கிறான்... (பக்.36)

இப்படி இனவெறி அரசுடனும் மக்கள் விரோதிகளுடனும் கூடத் தரகுத் தமிழ்த் தேசியம் உடன்பட்டுப் போகும் போது, ஏகாதிபத்திய 'உதவிகள்' கசக்கவா செய்யும்? இதனை விரிவாகப் பட்டியலிடுகிறது மூன்றாவது நூல்.




**3. இலங்கை:**
**இயற்கைப் பேரழிவு,**
**தேசத்தின் சீரழிவு**

சுனாமியால் கடும் பாதிப்புக்குள்ளான இன்னொரு நாடான இந்தோனேசியாவை விட அதிகமாக ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையில் வந்து குவிந்து, உதவி, கடன் வழங்குவது ஏன்? அது இலங்கையின் இயற்கை வளங்களைப் பங்கு போடத்தான் என்பதை ஆதாரங்களுடன் அம்பலம் செய்கிறது இந்நூல்.

சிங்கள இனவெறி அரசு மற்றும் புலிகள் சுனாமி நிதியைப் பெறுவதற்கு ஏகாதிபத்தியங்களிடம் தேசிய நலன்களை அடகு வைத்தது பற்றியும், கண்டு கொள்ளப்படாத முசுலீம் மக்கள் மற்றும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களின் நிலைமைகள் பற்றியும், ஜே.வி.பி.யின் இனவாதத்தையும், சுனாமியைச் சாக்கிட்டு நுழைந்த ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்கள் செய்யும் குடி கெடுக்கும் வேலைகளையும், இயற்கையின் பாதிப்பிலும் நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மீள் அடகு வைக்கும் அரசியல் நிகழ்ச்சிகளையும் போதிய விவரங்களுடன் புரிந்து கொள்ள இந்நூல் வழிசெய்கிறது.

நூலாசிரியர் சமூக நடவடிக்கைகளை விட்டு ஒதுங்கி 'கள ஆய்வு' செய்து கருத்துக்களை வண்ணம் குழைக்கும் நுண்மான் நுழைபுலம் கொண்ட வெறும் ஆய்வாளரல்ல. ஈழத்து அரசியல் களத்தில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு மக்களிடம் அரசியல் வேலை செய்தவர். இயக்கமாய் இயங்கியவர். அந்தக் காரணத்துக்காகவே புலிகளின் சித்திரவதை முகாமில் தண்டனைக்கு உள்ளானவர். மாற்று அரசியல் பேசும் உரிமையும் உயிர் வாழும் உரிமையும் மறுக்கப்பட்ட நிலையில், புலம் பெயர்ந்தாலும் வர்க்க நலன் பெயராமல் ஈழத்தை நோக்கியும், சர்வதேசப் பாட்டாளி வர்க்க உணர்வுடனும் இயங்கிக் கொண்டிருப்பவர்.

•••

இம்மூன்று நூல்களும் இலங்கை, ஐரோப்பா மற்றும் தமிழகத்தில் பரவலாக அறிமுகமாகியிருந்தாலும், கம்யூனிச அரசியலுக்கு எதிரான காய்ச்சலால், இனவாதிகளாலும், அராஜகவாதிகளாலும் இருட்டடிப்பு செய்யப்படுபவை. இனப் பிரச்சினையைப் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் பார்க்க விரும்புவோர்க்குத் துணை புரிபவை.

- **இலங்கை: யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்**
  ரூ. 40.00
- **ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை**
  ரூ. 70.00
- **இலங்கை: இயற்கைப் பேரழிவு தேசத்தின் சீரழிவு**
  ரூ. 150.00

*ஆசிரியர்* : **பி. இரயாகரன்.**

*வெளியீடு* : **சமர், பிரான்சு.**

**தமிழகத்தில் நூல் கிடைக்குமிடம்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை,**
**சென்னை - 600 002.**
**தொலைபேசி: 044-28412367**

அஞ்சலில் நூல் வேண்டுவோர் நூலின் விலையுடன் ரூ. 17.00 சேர்த்து M.O. செய்யவும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 84 / '06-'08
www.padippakam.com

# மறுகாலனிய திணை மயக்கம்

பெண் பார்க்க வருவோரின்
பிடுங்கல் தெரிந்தது போல்
தெருநாய் வெருண்டு திசை விலகும்.

வருந்திரள் கண்ணில்
பெரும் வலை பார்த்ததாய்க்
கூரையிலமர்ந்த கரிச்சான் குருவிகள்
கூக்குரலிட்டுப் பறபறக்கும்.

சிற்றரிசி சேகரிக்கும் சித்தெறும்புக் கூட்டமும்
பற்றிடுவாரோ அதையும் எனப் பயந்து
புற்றுக்குள் போய் ஒளியும்.

போலிச்சிரிப்புடன் பொய்யுரை நிரம்பி
நீளும் பேச்சின் களவறிந்தது போல்
முட்டையிட மறுத்துக் கோழியும் கேவும்.

வந்தவர் சூழ்ந்து வளைத்துப் பிடித்து
தந்திடு சீர்! எனும் தந்திரம் பார்த்து
கறவை மாடுகள் தம் காம்பினை மறைக்கும்.

கட்டில், மெத்தை, மிக்சி, கிரைண்டர்,
பீரோ........எனக்
காணும் பொருளுடன் விளக்குமாறு தவிர்த்து
வீட்டிலுள்ள பெண்ணையும் சேர்த்து
பகற்குறி பார்த்து மண முடிக்கும்
நுகர்வெறி தன்னை இல்வாழ்வென்போரே!
பகர்வது கேள்மின்! வகையினத்தை.....

கேபிள் கொடியது அசைந்திருக்கும்
பச்சோந்தி நிறம் மாறும் வேலியின் கண்
ஜீன்ஸ் கலிங்கம் காய்ந்திருக்கும்.

பிரிவுத்துயராற்றாப் பிள்ளையின்
பருவத் துயர் போக்க
வாசலில் ஹீரோ ஹோண்டா.
வரைவு கடந்த தலைவியின் வாட்டம் போக்க
பசலை தீர்க்கும் சாம்சங் டிவி.
அலர் தூற்றும் அண்டை, அயலாருக்கு
கலர் காட்டும் செல்பேசி.

வளப்பமுடன் இல்வாழ்வு காட்டுபவன்
பழக்கமெனும் உரிமையில்
ஓட்டடா வண்டி என்றேன்.
ஹி.....ஹி......எரிபொருள் இல்லை என்றான்.
காட்டடா செல்போன் என்றேன்.
கார்டு போடவில்லை என்றான்.

பெரும் பொருள் பார்த்த வீட்டில்
பிரிதொரு காட்சி கண்டேன்.
அம்மா -
இரண்டு ரூபாய் அரிசி வாங்க ரேசன்
கடைக்கு.
அப்பா -
இலவச மருந்து வாங்க ஆசுபத்திரிக்கு.
மனைவ -
மறுபடியும் கடன் வாங்க
மகளிர் சுய உதவி குழுவுக்கு.
வெட்டாத கரும்பு வீணடியும்
வாசம் வரும் மாநிலத்தீரே!
கண்டது மாயமோ, விண்டுரைப்பீரே!

இன்னொருவன் நிலைகண்டு
அருவெறுக்கும் மலவண்டு.
அவனும் இவனும் உடன்போக்கு ஊட்ட
தவணை முறையில் தள்ளிக்கொண்டு வந்தான்
ஒரு வாகனத்தை.

மூன்றாவது தவணைக்கு மேல் முடியாததால்
கள்ளச்சாவிபோட்டு கடைக்காரன்
வண்டியைத் தள்ளிப் போவான் என்றஞ்சி
தன் வீட்டில் வைக்காது
தான் வாங்கிய பஜாஜ் பல்சரை
தள்ளி நாலாவது வீட்டில் வைத்து
தினமும் மூடி வைக்கிறான் கேவலத்தை.

பல்சான்றீரே! பல்சர் வண்டியிரே!
பகர்வது கேள்மின்!
எச்சில் ஊறும் நுகர்வு வெறி, எச்சரிக்கை!
எல்லாத்திசையிலும் கள்ளச்சாவிகள்.

● துரை.சண்முகம்

பொருட்குறிப்பு: கலிங்கம் - ஆடை, வரைவு - திருமணம்.

படிப்பகம்